216651

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு.

ஏப்ரல் 5, 1997. தொகுதி 28
எண் 2.

D
V2l1, 31N97
N97 28·2
216651

வெளியீடு 30-4-98 Issued 30-4-98

1162/97

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 5, 1997 – தொகுதி 28 – எண் 2

Saturday the 5th April, 1997 – Volume 28 – No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

D.
Y21,31'N97
N97.28.2.
216651

1162/98

5-4-1997

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1. வினாக்கள் விடைகள்--	
உடுக்குறியிட்ட வினாக்கள்	215-255
2. சிறப்புக் கவன ஈர்ப்பு--	
(அ) சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்திற்கு நிர்வாக அதிகாரி நியமனம்.	255-262
(ஆ) சென்னையில் 'லெப்டோ ஸ்பைரோசிஸ்' நோய் பரவுதலைத் தடுத்தல்.	263-265
3. கவன ஈர்ப்பு--	
மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கதர் கிராமத் தொழில் வாரியம் பாக்கித் தொகை வழங்க நடவடிக்கை.	265-267
4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)--	
தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு, 1997.	267-268
5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி	
கோரிக்கை எண் 4--பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்--நிருவாகம்	268-330, 332-355

		பக்கங்கள்
5.	மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி	
	*மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்	268-269,271-272 310-312, 318,332-352
	திரு. என்.ஆர். அழகராஜா	272-278
	திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்	278-283
	திரு. எஸ்.எஸ். பொன்முடி	283-286
	*திரு. கே. சுப்பராயன்	286-291,353
	திரு. ஏ.எம். ராமசாமி	291-292
	*திரு. டி. மணி	292-295
	திரு. இ. புகழேந்தி	295-300
	*திரு. பி. என். வல்லரசு	300-303
	திரு. செ. இராமலிங்கம்	303-306
	திரு. ஜி. நிஜாமுதீன்	306-310 312-315
	திரு. சி. ஞானசேகரன்	315-325 327-330
6.	தகவல் கோரல்--	
	லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் தொடர்தல்	330-332
7.	பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--	356

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 23, தாது-திருவள்ளுவர் ஆண்டு 2028

1997 ஏப்ரல் 5, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு."

புதிய சுமைகள் ஒன்று திரண்டு வரும்போதும் அவற்றைத் தாங்கிக் கொண்டு, அரசுக்குரிய வரி வகைகளைச் செலுத்துமளவுக்கு வளம் படைத்ததே சிறந்த நாடாகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 461, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

461--

புதிய சர்க்கரை ஆலைகள் அமைத்தல்

*2568--**திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் புதியதாக எத்தனை சர்க்கரை ஆலைகள் அமைய மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது?

[1997 ஏப்ரல் 5

(ஆ) அதில் எத்தனை ஆலைகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் புதிதாக 7 சர்க்கரை ஆலைகள் அமைக்க மைய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இவற்றில், மைய அரசு இதுவரை 5 ஆலைகளுக்கு அனுமதி அளித்துள்ளது.

திரு. க. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் இயங்கி வருகின்ற கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான கரும்பு, கடந்த இரண்டு பருவங்களாக, 18 மாதங்கள், 20 மாதங்களாகியும்கூட வெட்டப்படாத சூழ்நிலை இருந்தது. நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியால் இன்றைக்கு அந்த ஆலையின் நிர்வாகம் செம்மைப்படுத்தப்பட்டு அந்த ஆலை மிக நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக, விவசாயிகளின் சார்பாக என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிற வேளையில் சங்கராபுரம் வட்டத்திலுள்ள ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் புதிய சர்க்கரை ஆலையை துவக்குவதற்காகத் தனியார்கள் விண்ணப்பித்து இருக்கிறார்கள். புதிய ஆலைகளை துவக்குவதற்குப் பரிந்துரை செய்துள்ளதில் அரசு ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் ஒரு சர்க்கரை ஆலை துவக்க பரிந்துரை செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இடங்களில் சங்கராபுரமும் ஒன்று. விழுப்புரம்--இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில், சங்கராபுரத்தில் 'தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ்' என்ற நிறுவனத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது, மைய அரசுக்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. இரா. இராமச்சந்திரன்.

திரு. சி. இரா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1974-ல் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை

1997 ஏப்ரல் 5]

தஞ்சை மாவட்டத்தில் குருங்குளத்திலே துவக்கப்பட்டது. கழக ஆட்சிக் காலத்தில், அது இந்தியாவிலேயே 2-வது இடத்தை வகித்துக் கொண்டிருந்தது. இப்போது 3 இலட்சம் டன் சர்க்கரை மூட்டைகள் தேங்கி, அவைகளை வெளியில் இருக்கிற குடோன்களில் வைக்கிற அளவுக்கு வந்திருக்கிறது. அவைகளை விற்பனை செய்து அந்தச் சர்க்கரை ஆலையை நலிவு அடைந்ததிலிருந்து நல்ல நிலைக்குக் கொண்டுவர அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது உண்மையானால் அதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆ. நடராசன்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஐந்து ஆலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 5 ஆலைகள் எந்த எந்தப் பகுதிகளில் அமைக்கப்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஐந்து இடங்கள், மைய அரசு உரிமம் வழங்கியுள்ள இடங்கள்:

திருவண்ணாமலை-திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், திருவண்ணாமலையில் 'சவுத் ஈஸ்டர்ன் சுகர்ஸ் அண்ட் அலைட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

திருவிடைமருதூர், தஞ்சாவூர் பகுதி திருவாரூரான் சர்க்கரை ஆலை.

திருக்கோவிலூர், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் 'சவுத் இண்டியா சுகர்ஸ்'.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் ஜியா எனர்ஜி.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் இ.ஐ.டி. பாரி நிறுவனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பா. துரைசாமி.

திரு. பா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிற சர்க்கரை ஆலைகளில் ஒரு சில ஆலைகள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றைச் சீர்செய்யவும், நிர்வாகத்தை

[1997 ஏப்ரல் 5

செம்மைப்படுத்தவும், ஆலைகளுக்கு, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கொண்ட பிரதிநிதி குழுக்கள் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த ஆலைகளைப் பற்றிய நிலைமையை உணர்ந்து அதற்கேற்றவாறு முடிவுகளை எடுக்க பரிசீலனை செய்யப்படுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கருத்தும் கருத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. பெ. சாமிநாதன்.

திரு. மு. பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிற சர்க்கரை ஆலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப் பொருட்களின் மூலமாக மாசு ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படுகின்ற சூழ்நிலையில், இப்போது புதிதாக அமைக்கப்பட இருக்கின்ற சர்க்கரை ஆலைகளுக்கு என்னென்ன விதிமுறைகளை அரசு நிர்ணயித்து இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, செம்மையாக நடைபெற வேண்டிய சர்க்கரை ஆலைகளுக்கு என்னென்ன விதிமுறைகள் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுமோ அதே விதிமுறைகள்தான் இந்த. ஆலைகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று கூறப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வீ. தமிழ்மணி.

திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதியைப் பெறுகின்ற நம்முடைய அரசு, நல்ல லாபத்தில் இயங்கிக் கொண்டிருந்த மதுராந்தகம் சர்க்கரை ஆலை, கடந்த 6 ஆண்டு காலமாக விரிவாக்கத்தின் காரணமாக மிகவும் நலிந்து, கடந்த கரும்புப் பருவத்திலே வெட்டப்பட்ட கரும்புக்கு இதுவரையில் காசு கொடுக்காத நிலைமையில் இன்னும் ஓரிரு நாட்களில் அந்த ஆலையை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்ற நிலைமையை

1997 ஏப்ரல் 5]

அறிந்து, அந்த சர்க்கரை ஆலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு சர்க்கரை ஆலை அல்லது வேறு எந்த ஒரு தொழிற்சாலையானாலும் எந்த அளவிற்கு நலிவுற்று இருக்கிறது என்பதை ஆய்வு செய்து, தொடர்ந்து நடத்தமுடியுமா, நடத்தவேண்டுமா என்ற கேள்விகளுக்கு எல்லாம் விடை கண்டு, அந்த அடிப்படையிலேதான் முடிவுகளை அரசு மேற்கொள்ள முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ.சு. திருவேங்கடம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் சர்க்கரை ஆலையானாலும் அல்லது கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையானாலும் நஷ்டம் அடைவதற்குக் காரணம் சென்ற ஆண்டுக்காலத்தில் விரிவாக்கம் என்கிற பெயரால் ஏராளமான பணத்தை விரயம் செய்த காரணத்தால்தான், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் எல்லாம் இன்றைக்கு நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கமிட்டி அமைத்து, அப்படி தவறு செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடந்தகாலத் தவறுகள் எல்லாம் தொடர்ந்து நடைபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, எத்தனையோ முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து இந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. ஜி. சம்பத்.

திரு. ஏ. ஜி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம் திருக்கோவிலூர் தாலுக்காவில் சவுத் இந்தியா சுகர்ஸ் மூலமாக தனியாருக்கு அனுமதி வழங்கி இருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அகரம் குலதெய்வமங்கலம் என்ற பகுதியிலே வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் எல்லாம் கிட்டத்தட்ட 1990 ஆம் ஆண்டிலேயிருந்து தாட்கோ மூலமாகத்தான் அந்தப்

பகுதியிலே சர்க்கரை ஆலை வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைளில் அரசு ஈடுபடவேண்டும் என்றும் பல்வேறுவிதமான போராட்டங்களை எல்லாம் இதுநாள் வரையிலும் செய்து வந்து இருக்கிறார்கள். எனவே, அரசு மறுபரிசீலனை செய்து. தாட்கோ மூலமாக அந்த சர்க்கரை ஆலையை நிறுவுவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் சர்க்கரை ஆலைக்கு--சவுத் இந்தியா சுகர்ஸ் என்ற நிறுவனத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது, 14-2-96 அன்று கடந்த கால ஆட்சியில் பிப்ரவரி திங்களில் 14, 16 ஆகிய இரண்டு நாட்களில் பரிந்துரை செய்யப்பட்டு இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கு பரிந்துரை கடந்த கால ஆட்சியிலே செய்யப்பட்டு உரிமம் தரப்பட்டிருக்கிற காரணத்தால், மேற்கொண்டு எதுவும் இப்போது செய்ய இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. இராமலிங்கம்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய சர்க்கரை ஆலைகளில் மின் உற்பத்தி அலகு 'கோ-ஜெனரேஷன் யூனிட்' அமைக்கின்ற அனுமதியை அரசு வழங்கி இருக்கிறதா? திருவிடைமருதூர் சர்க்கரை ஆலைக்குத் தேவையான நில ஆர்ஜிதம் செய்யப்பட்டும், கரும்பு பயிரிடப்படவேண்டிய பரப்புளவு நிர்ணயிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நடப்பாண்டிலே அதற்கான பயிரிடப்படவேண்டிய பரப்பளவு அறிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த திறமைசாலிகள். யாராவது ஒருவர் கேள்வி கேட்டால் - தாங்கள் கேட்க வேண்டும் என்ற அக்கறை இருந்தாலும், இல்லாவிட்டாலும், யாராவது ஒருவர் கேள்வி கேட்டால் - அதிலே புகுந்துகொண்டு எண்ணற்ற கேள்விகளைக் கேட்பதும், தங்களுடைய தொகுதிகளைப் பற்றிக் கேட்பதும், நல்ல பழக்கம்தான். இருந்தாலும், எல்லாக் கேள்விகளுக்கும் எதிர்பார்த்து விடையைத் தயாரித்துக் கொண்டு வர இயலாது. மின் உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். படிப்படியாக ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் மின் உற்பத்தியை

எந்த அளவிற்குச் செய்ய முடியும் என்பதை அரசு யோசித்து, படிப்படியாக நிறைவேற்றி வருகின்றது. திருவிடைமருதூரைப் பொறுத்தவரையில் நில ஆர்ஜிதத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தனிக் கேள்வி கேட்டால், அதற்கான விவரத்தை அளிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவிக்கின்றபோது, 5 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு தமிழகத்திலே இப்போது உரிமம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்தக் 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கொள்கை தளர்ந்து போய்விட்டதா? ஏன் என்றால் எல்லாமே தனியார் துறைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. இப்போது சங்கராபுரத்தில்கூட தரணி சுகர்ஸ்சுக்கு விட்டு இருக்கிறார்கள். அந்த தரணி சுகர்ஸ் என்பது ஏற்கெனவே புகளூரில் அப்படி ஒரு ஆலையை ஆரம்பித்து அவர்கள் பணத்தையே விவசாயிகளுக்குக் கொடுக்காமல் ஒரு டன்னுக்கு ரூ. 100 தான் கொடுத்து அவர்கள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையை எல்லாம் தவிர்க்கவேண்டுமென்று சொன்னால் அரசே கூட்டுறவுத் துறையின் மூலமாக கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை உருவாக்குவதுதான் நாட்டிற்கு நல்லது. அதற்கு முதல்வர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தனியார் துறையையும் ஊக்கப்படுத்த வேண்டும் என்று தமிழக அளவிலே மட்டுமல்ல, அகில இந்திய அளவிலேயே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறியாமல் இருப்பதுதான் எனக்குப் புதிராக இருக்கிறது. எனவே, கூட்டுறவு முறையிலே முடிந்த அளவிற்கு இந்த அரசு சர்க்கரை ஆலைகளை உருவாக்கிக் கொண்டுதான் வருகிறது. இப்போதுகூட கும்மிடிப்பூண்டியிலே ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை நாம் நிறுவ இருக்கின்றோம். ஏற்கெனவே தனியார் துறையிலே தமிழ்நாட்டில் 21 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. 17 கூட்டுறவு ஆலைகள் இருக்கின்றன. பொதுத் துறை என்ற அளவிலே

தமிழ்நாட்டிலே மூன்று ஆலைகள் ஏற்கெனவே இருக்கின்றன. நிதிநிலைக்கேற்றவாறும், வசதி வாய்ப்பு இவைகளுக்கு ஏற்றவாறும் கூட்டுறவு ஆலைகளாகவோ அல்லது தனியார் ஆலைகளுக்கு உரிமம் தருகின்ற வகையிலேயோ, தொழிலாளர்களுக்கு நிறைய வேலை கிடைக்கவும், விவசாயிகளுக்கு நிரம்ப வாய்ப்பு ஏற்படுத்தவும் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்வதிலே தவறில்லை என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5 தனியார் சர்க்கரை ஆலைகள் தொடங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கவேண்டுமென்றால் கிட்டத்தட்ட பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் கரும்பு உற்பத்தி செய்யப்பட வேண்டும். தற்போது கரும்பினுடைய விலை விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாததினால் அந்தக் கரும்பு பயிரிடுவதை விவசாயிகள் நிறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே மத்திய அரசானது கிலோ ஒன்றுக்கு, சர்க்கரைக்கு ரூ. 1.45 உயர்த்திய நிலையிலே, நம்முடைய அரசானது கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 5 தான் விலையேற்றி இருக்கிறது. ஆகவே டன் ஒன்றுக்கு இன்னும் குறைந்தது ரூ. 100-ஆவது ஏற்றிக் கொடுத்தால், விவசாயிகள் அதிகமாக கரும்பு பயிரிடுவார்கள். ஆகவே அந்தக் கரும்பின் மூலமாக தனியார் ஆலைகளுக்கும் கரும்பு எளிதாகக் கிடைக்கும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள். 'லெக்சர்' கூடாது. விலையை உயர்த்த முடியுமா என்று கேளுங்கள். அதுதானே கேள்வி?

திரு. பி. ஆர். சுந்தரம்: ஆகவே இந்தத் தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்கின்ற விதத்தில், தொழிற்சாலைகள் எல்லாம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால், கரும்பினுடைய விலையை இந்த அரசு உயர்த்துவதற்கு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு குறிப்பை மாத்திரம் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழ்நாட்டினுடைய சர்க்கரைத் தேவையையும், சர்க்கரை உற்பத்தியையும் நாம் கணக்கிலே முதலில் எடுத்துக் கொள்ள

வேண்டும். 1993-94-ஆம் ஆண்டு தமிழ்நாட்டினுடைய சர்க்கரைத் தேவை 8.75 லட்சம் டன்னாக இருந்தது. உற்பத்தி 10.85 லட்சம் டன். இப்போது 1996-97-ல் சர்க்கரைத் தேவை 9 லட்சம் டன்கள். உற்பத்தி 12.10 லட்சம் டன்கள். தமிழகத்திற்குத் தேவைப்படும் சர்க்கரை சுமார் 9 முதல் 10 லட்சம் டன்கள்தான். அதற்கு மேல் உற்பத்தியாகும் சர்க்கரையை நாம் அண்டை மாநிலங்களில்தான் விற்கவேண்டி வருகிறது. அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் மாநிலத்தின் தேவைக்கு மேல் சர்க்கரை உற்பத்தியாகிறது. கேரள மாநிலம் மாத்திரம்தான் சர்க்கரையில் பற்றாக்குறை மாநிலம். ஆந்திரா, கர்நாடகா மாநில உபரி சர்க்கரையும் கேரளாவிற்கே விற்கப்பட்டு விடுவதால் நமது மாநிலம் இந்த விற்பனையிலே போட்டியிட வேண்டியுள்ளது. எனவே நமது மாநில சர்க்கரை ஆலைகளுக்குக் கிடைக்கும் வெளிச்சந்தை விலை சராசரி ஒரு குவிண்டாலுக்கு ரூ. 1,150 தான். இது தவிர, வட மாநில ஆலைகளில் வெளிச்சந்தை சர்க்கரை விலையோடு ஒப்பிடும்போது குறைவாக உள்ளது. உதாரணமாக வெளிச்சந்தை சர்க்கரை விலை குவிண்டாலுக்கு கல்கத்தாவிலே ரூ. 1,250 ஆகவும், மும்பையில்-பம்பாயில் ரூ. 1,180 ஆகவும், டில்லியில் ரூ. 1,250 ஆகவும் இருக்கிறது. இங்கே வெளிச்சந்தை சர்க்கரை விலை குவிண்டால் ரூ. 1,150 ஆக இருக்கிறது. இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் சர்க்கரை விலைக்கு நாம் போனஸ் கொடுப்பதை-- நமது மாநில சர்க்கார் சார்பாக 'அட்வைஸ்' செய்து, இந்த 'அட்வைஸ் பிரைஸ்' கொடுங்கள் என்று சொல்வதை எச்சரிக்கையோடு செய்ய வேண்டியிருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சு. சிவராஜ்.

திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே புதியதாக சர்க்கரை ஆலை துவங்குவதற்கு உரிமம் பெறப்பட்டு, நீண்ட நாட்களாக தொடங்கப்படாத ஆலைகள் ஏதேனும் உள்ளதா? அப்படியிருந்தால், அவற்றைத் தொடங்குவதற்கு உண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே, திருவிடைமருதூரில்

ஆலை தொடங்குவதற்கு 1993-ஆம் ஆண்டிலேயே பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு உரிமம் 1996-ஆம் ஆண்டிலேயே, மார்ச் திங்களிலேயே கிடைத்திருக்கிறது. இன்னும் திருவிடைமருதூரில் சர்க்கரை ஆலை தொடங்கப்படவில்லை. இப்படி ஒன்றிரண்டு இடங்களில் இன்னும் சர்க்கரை ஆலை தொடங்கப்படவில்லை. விரைவில் தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இறுதியாக, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு தனியார் மில்களிலே ரெக்கவரியை மிகவும் குறைத்துக் காட்டுகிறார்கள். 8.5 என்பதற்கு மேலே ஏறுவதே இல்லை. ஆனால், சில இடங்களில், சில தனியார் மில்கள்கூட நன்றாக இருக்கிறது. சில இடங்களிலே 10, 10.5 என்றெல்லாம் வருகிறது. ஆகையினாலே, தனியாருக்குக் கொடுத்து ஊக்கப்படுத்துவதைக் காட்டிலும்--அவர்களுக்கும் கொடுங்கள்--கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு, ஏற்கெனவே நான் விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கின்றேன், நம்மால் முடிந்த அளவிற்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஏற்கெனவே விரிவாக்கியிருக்கிறோம். மேலும், முடிந்த அளவிற்கு விரிவாக்குவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 462, திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

462--

பவானி வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்

*2960--**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பவானி வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பவானி வட்டத்தை தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. அரசாணை எண் 41, தொழில் துறை, நாள் 18-3-96-ன்படி பெரியார் மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள, பவானி, அந்தியூர், அம்மாப்பேட்டை மற்றும் பவானி (நகர்) ஆகிய 4 வட்டாரங்களில் அம்மாப்பேட்டை வட்டாரம் மட்டும் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீதி வட்டாரங்கள் அதற்கான தகுதிகளை நிறைவு செய்யவில்லை.

திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அம்மாப்பேட்டை ஒன்றியத்தை மாத்திரம் பின்தங்கிய பகுதியாக அறிவித்துள்ளதாக கூறியிருக்கின்றார்கள். குறிப்பாக, பெரியார் மாவட்டத்தில் பவானி வட்டத்தைப் பொறுத்தவரையில் அது விவசாயிகள் நிறைந்த பகுதி. விவசாயத் தொழில்தான் அதிகமாக இருக்கக்கூடிய காலத்தில், விதைக்கக் கூடிய நேரத்திலும், அறுவடை செய்யக்கூடிய நேரத்திலும்தான் தொழிலாளர்களுக்கு முழுமையாக வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், 1964-லேயே சக்தி சர்க்கரை ஆலை ஏற்பட்ட பிறகு, எந்த தொழிற்சாலையும் ஏற்படாது இருந்த சூழ்நிலையில் 60 சதவிகிதம் வானம் பார்க்கும் பூமியாக இருக்கக்கூடிய நிலையிலேயும் 40 சதவிகிதம்தான் ஓரளவிற்கு நஞ்சை பூமியாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கே பெரிய தொழிற்சாலைகள், சிறிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு. இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், வருகின்ற ஆண்டிலாவது பவானி வட்டத்தை மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டும். அறிவிப்பார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[1997 ஏப்ரல் 5

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இனி ஒன்றைத் தெளிவாக உணர்ந்துகொள்வது நல்லது. வட்டமா, வட்டாரமா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. ஏற்கெனவே, 1989-ஆம் ஆண்டு தமிழகத்திலே தொழிலில் பின்தங்கிய வட்டங்கள் 105 என்று அறிவிக்கப்பட்டன. அதற்குப் பிறகு 1990-ஆம் ஆண்டு கழக ஆட்சியில் இந்த 105 வட்டங்களிலிருந்து 30 வட்டங்கள் தொழிலில் மிகவும் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டன. இப்படி வட்டங்களாக இருந்த வரையிலே அந்தந்த வட்டங்களில் பின்தங்கிய பகுதிகள், மிகவும் பின்தங்கிய பகுதிகள் என்று அந்த வட்டங்கள் அறிவிக்கப்பட்டு சலுகைகள் பெற முடிந்தது. ஆனால், 1995-ஆம் ஆண்டு, கடந்த கால ஆட்சியில் ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டு, வட்டங்கள் என்று இல்லாமல் வட்டாரங்கள்--'தாலுக்ஸ்' என்பதற்கு பதிலாக 'பிளாக்ஸ்' என்ற அளவிலே பின்தங்கிய பகுதிகள், மிகவும் பின்தங்கிய பகுதிகள் என்று ஆக்கப்பட்ட காரணத்தினால், வட்ட நிலையிலேயிருந்து வட்டார நிலைக்குச் சென்றதால், பின்தங்கிய நிலையைத் தர முடியாத சூழ்நிலைக்கு உள்ளாயின. மிகவும் பின்தங்கிய பகுதி என்பதற்கு உரிய இலக்கணம் அந்தப் பகுதியிலே உள்ள தொழிற்சாலையில் உள்ள பணியாளர்களின் எண்ணிக்கையின் சதவிகிதம், அந்த வட்டாரத்திலே மொத்த மக்கள் தொகை கணக்கோடு ஒப்பிட்டுக் கொள்ளும்போது 0.25 சதவிகிதம் அல்லது அதைவிடக் குறைவாக இருக்க வேண்டும் என்று உள்ளது. இந்தப் பகுதியில் நடுத்தர, பெரும் தொழில்களில் முதலீடு ஏதும் செய்யப்பட்டிருக்கக்கூடாது என்று இருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள பவானியை எடுத்துக்கொண்டால் அங்கே மொத்த மக்கள் தொகையில் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 2.92 என்று இருக்கிறது. இது 0.25 சதவிகிதம்தான் இருக்கலாம் என்பதற்கு மாறாக மிக அதிக அளவிலே இருக்கிற காரணத்தினால், அந்தத் தகுதியைப் பெறுகின்ற நிலையை அது இழந்துவிட்டிருக்கிறது.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 463, திரு. கே. சி. கணேசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

1997 ஏப்ரல் 5]

463--

பல்தொழில் கல்வி மையம் அமைத்தல்

*2914--**திரு. கே.சி. கணேசன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரம்பலூர்--திருவள்ளுவர் மாவட்டம், செயங்கொண்டத்தில் பல்தொழில் கல்வி மையம் (பாலிடெக்னிக்) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 464, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

464--

பெண்கள் கல்லூரிகளுக்குக் கட்டிடம் கட்டுதல்

*4002--**திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், பர்கூர் அரசினர் ஆண்கள், பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கும் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டிடம் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டிடம் கட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அவற்றில் குறைவான மதிப்பீட்டில் கோரப்பட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தப் புள்ளி அளிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கான ஆணைகள் வெளியிடுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. கட்டிடம் கட்டும் பணிகள் பரிசீலனை முடிந்து துவக்கப்படலாம்.

[1997 ஏப்ரல் 5

திரு. இ. ஜி. சுகவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும் இயங்கிக் கொண்டிருக்கிறது. 5 அறைகளைக் கொண்டு அந்தக் கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே படிக்கின்ற மாணவிகள் மரத்தடியிலே அமர்ந்துகொண்டு படிக்கின்ற ஒரு அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியாளர்கள் கட்டிடங்களுக்கு எல்லாம் டெண்டர் கோருகின்றபோது அதை சிங்கிள் டெண்டர் முறையிலே அறிவித்தார்கள். இன்றைக்கு கழக ஆட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதையெல்லாம் நீக்கி ஓப்பன் டெண்டர் முறையிலே அதை விட்டு விரைவிலே அந்தக் கட்டிடங்களைக் கட்டி, அந்த அவல நிலையைப் போக்க வேண்டும் என்று கேட்டு, உடனடியாக அதை நிறைவேற்றித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி ஒரு விளக்கம் தர எனக்கு வாய்ப்பாயிற்று. மாண்புமிகு முதலமைச்சருடைய ஆணைக்கேற்ப பர்கூர் அரசு பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி அதனுடைய தொகை விகிதம் 14.95 விழுக்காடு அதிகம் இருப்பதால் கால விரயம் இன்றி மறு ஒப்பந்தப்புள்ளி உடனடியாகக் கோரவேண்டி ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்த மறு ஒப்பந்தப்புள்ளி கிடைத்து, அதனுடைய ஒப்பந்தத்திற்குள்ள விதிமுறைகளின்படி அவை சரியாக இருக்குமானால் அப்போது உடனடியாக ஏற்கப்பட்டு செயற்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 465, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

465--

நாங்குனேரி தொகுதியில் மின்மாற்றி அமைத்தல்

*2966--**திரு. எஸ். வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1997 ஏப்ரல் 5]

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், நாங்குனேரி தொகுதி, வள்ளியூர், ஏர்வாடி, திருக்குருங்குடி, இட்டமொழி, மன்னார்புரம் ஆகிய பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி வள்ளியூர், ஏர்வாடி, திருக்குருங்குடி, இட்டமொழி, மன்னார்புரம், பகுதியில் நிலவுகின்ற மின் அழுத்தக் குறைவைப் போக்க, மின் மாற்றி அமைக்கும் திட்டம் எதுவும் தமிழ்நாடு மின்வாரியத்தின் பரிசீலனையில் இப்போது இல்லை.

திரு. எஸ். வி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குனேரி தொகுதி வள்ளியூர், ஏர்வாடி, திருக்குருங்குடி, இட்டமொழி, மன்னார்புரம் ஆகிய பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் உப மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதியில் இப்போது திருக்குருங்குடி, பணக்குடி ஆகிய பகுதிகளிலே 110/11 கிலோவோல்ட் துணை மின் நிலையத்திலிருந்து 11 கிலோவோல்ட் ரூரல் ஃபீடர்--வள்ளியூர் ஊரக மின்னூட்டி--மூலமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அங்கே இருக்கக்கூடிய காற்றாலைகள் மூலம் தயாரிக்கக்கூடிய அந்த மின் உற்பத்தி இயந்திரங்கள் மிகுந்த எதிர்விளைவுத் திறனை உருவாக்கியிருக்கின்ற காரணத்தினாலே இப்போது அங்கே பிரச்சினை நிலவிக் கொண்டிருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய காற்றாலை மின் உற்பத்தி இயந்திரங்களை இயக்கும் நிறுவனங்கள் தகுந்த கெப்பாசிட்டர்கள் பொருத்தி தமிழக மின் கட்டமைப்பிலிருந்து

[1997 ஏப்ரல் 5

எடுக்கும் எதிர் விளைவுத் திறனை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் தவிர்க்குமாறு வலியுறுத்தப்பட்டு உள்ளனர். அந்த நிலைமை சரியானவுடன் நிச்சயமாக அந்தப் பிரச்சினை அங்கே இருக்காது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல இட்டமொழி, மன்னார்புரம் ஆகிய பகுதிகளுக்கு 33/11 கிலோவோல்ட் துணை மின் நிலையத்திலே லைன் டேப் சப் ஸ்டேஷன் ஒன்று அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

திரு. எஸ்.வி. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர் விளைவுத் திறன் என்றால் என்ன என்பதைச் சற்று விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ட்மில் ஜெனரேட் செய்யும்போது அங்கே கெப்பாசிட்டர்கள் இல்லாத காரணத்தினாலே உற்பத்தியாகக் கூடிய அந்த மின்சாரம் சரியாக ஃபீடருக்கு வருவதில்லை. எதிர் விளைவு ஏற்படுத்திவிடுகிறது. அதனாலே கெப்பாசிட்டர்கள் பொருத்தினால் தான் அந்த மின்சாரத்தை அங்கே ஏற்கனவே வைத்திருக்கக்கூடிய கிரிட்டுகளிலே இணைக்கமுடியும். அதற்கான கெப்பாசிட்டர்களை இணைக்க வேண்டுமென்று மின் வாரியம் வலியுறுத்தியிருக்கிறது.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 466, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

466--

மானாமதுரை தொகுதியில் மின்மாற்றிகள் அமைத்தல்

*5558--**திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1997 ஏப்ரல் 5]

(அ) மானாமதுரை தொகுதி, சீகன்குளம், ஆலங்குளம் மற்றும் மானங்காத்தான் கிராமங்களில் புதிய மின்மாற்றிகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): புதிய மின்மாற்றி அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்தைச் சேர்ந்த சீகன்குளம், ஆலங்குளம், அதேபோல் மானங்காத்தான், புலிக்குளம் போன்றப் பகுதிகளில் மெழுகு திரியை விட மிக மோசமாக விளக்கு எரியும் அளவுக்கு அங்கே மின் அழுத்தம் இருக்கிறது. எனவே, அங்கே இருக்கக்கூடிய மக்களுக்கு மின்சாரம் இருந்தும் இல்லாதது போல ஒரு நிலை இருக்கக் கூடிய காரணத்தால், அரசு எவ்வளவு விரைவில் இந்த மின் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீகன்குளம், ஆலங்குளம் ஆகிய கிராமங்களில் ஒரு மின் மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. மற்றும் மானங்காத்தான் கிராமத்தில் ஒரு மின் மாற்றி அமைப்பதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு மின் மாற்றிகளையும் அமைக்கும் பணிகள் விரைவில் முடிவடையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 467, திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1997 ஏப்ரல் 5

467--

இலவசமாக நிலப்பட்டா வழங்குதல்

*2260--**திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காவேரிப்பட்டினம் பேரூராட்சியில், சுமார் 40 ஆண்டுகாலம் வீடு கட்டி வசித்து வருபவர்களுக்கு இலவசமாக அடிநிலப் பட்டா வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே.

காவேரிப்பட்டினம், புல எண்கள் 40/2, 42/2, 43/2, மற்றும் 44/எ2. பி1/ஏ ஆகிய நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு ஒப்படை வழங்க அரசால் ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற வாக்கியத்திற்கு ஏற்ப இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்கக்கூடிய தமிழக அரசு ஏழை எளியவர்களுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஒப்படைப்பு கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 40 ஆண்டு காலமாக செய்ய முடியாத ஒரு காரியத்தை எனக்கு ** ஒரு காரியத்தை என்னுடைய கேள்வியின் மூலம் இன்றைக்கு ஒரு பதில் கிடைத்திருக்கிறது என்று சொன்னால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரே வார்த்தையில் நன்றி சொல்லிவிடுங்கள். **என்று சொல்லக்கூடாது. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது **என்று சொல்வது மரபு அல்ல. அரசுக்கு நன்றி சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுங்கள்.

திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

1997 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு மேல் ஒன்றும் கேள்வி இல்லை. உட்காருங்கள்.

வினா எண் 468, திரு. வி. கோவிந்தன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

468--

உதியேந்திரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*220--**திரு. வி. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பேரணாம்பட்டு தொகுதி, உதியேந்திரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பேரணாம்பட்டு தொகுதி-உதியேந்திரம் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் 5, 6 மாதங்களில் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. கோவிந்தன், இருக்கையில் இல்லை.

வினா எண் 469, திரு. மீ. அ. வைத்தியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

469--

தாம்பரம் புறநகர்ப் பேருந்துகள் வருகையை வேறு இடத்திற்கு மாற்றுதல்

*698--**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தாம்பரம் பேருந்து நிலையத்திற்கு வரும் புறநகர்ப் பேருந்துகளை மாற்றி வேறு இடத்திற்குக் கொண்டு செல்லும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தாம்பரம் பேருந்து நிலையத்திற்கு புறநகர் பேருந்து எதுவும் வருவதில்லை. புறநகர் பேருந்து நிலையம் இந்நகராட்சியில் ஏற்படுத்தப்படவில்லை. இருப்பினும் சென்னை பெருநகர் திட்டக் குழுமத்தின் ஒப்புதலோடு அங்கு ஒரு புறநகர் பேருந்து நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். பக்கத்தில் இருக்கிற சிவில் லைன் குவார்ட்டர்ஸ் பகுதியில் 10 ஏக்கர் இடம் கேட்டு அந்த நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அதற்கு செயல் வடிவம் கொடுத்து அங்கே ஒரு பேருந்து நிலையம் அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஏக்கர் நிலம் அங்கே எடுக்கப்படவில்லை. 5 ஏக்கர் நிலம்தான் அதிலே தேவை. அது அங்கே கிடைக்கிறது. அதை எடுப்பது என முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 40, 50 ஏ.சி. வீட்டுகள் பொருத்தப்பட்ட குடியிருப்புகள் அங்கே இருக்கின்றன. அவைகளைக் காலி செய்து நல்ல சுகாதார வசதிகளோடு கூடிய நவீன பேருந்து நிலையம் ஒன்றை அங்கே ஏற்படுத்துவதற்கு 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவேண்டும் என, சென்னைப் பெருநகரத் திட்டக் குழுமத்தின் ஒப்புதலோடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 470, திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

470--

சிறுமலை பழத்தோட்ட விவசாயத்தை விரிவுபடுத்துதல்

*4494--**திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திண்டுக்கல், சிறுமலையில் பழத்தோட்ட விவசாயத்தை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 471, திரு. துரை. சந்திரசேகரன் மற்றும் ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

471--

கொள்ளிடத்தில் பாலம் அமைத்தல்

*330--**திரு. துரை. சந்திரசேகரன்:**
திரு. ந. கருப்பண்ண உடையார்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி மாவட்டங்களை இணைக்கும் வகையில் கோவிலடி-அன்பில் அருகே கொள்ளிடத்தின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1997 ஏப்ரல் 5

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான இந்தப் பாலம் தேவை என்பதை அந்தப் பகுதியில் உள்ள எல்லாத் தரப்பு மக்களும் எடுத்துக் கூறுகிறார்கள். நமது மாண்புமிகு முதல்வரவர்கள், அன்பிலில் ஒரு திருமணத்தை முடித்து விட்டு, திருவையாறு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் புலவர் அவர்களுடைய இல்லத் திருமணத்திற்கு வருகின்றபொழுது அன்பிலோடு, மத்தியத் தொழில் அமைச்சரோடு வருகின்றபொழுது நமது தலைவரவர்கள் அந்தக் கொள்ளிட வெள்ளத்தில் சிக்கியிருந்தார்கள். அவர்களைத் திரானியர் என்பவர் தோளிலே சுமந்து அந்தக் கொள்ளிட ஆற்றைக் கடந்திருக்கிறார். எனவே, அந்தத் திரானியர்கூட இப்பொழுது வாக்குக் கேட்கின்றபொழுது, கலைஞரிடம் சொல்லுங்கள், அந்தக் கோவிலடி பாலத்தை அமைத்துத் தருவார்கள் என்று கூறியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் விவசாய விளைபொருட்கள் போக்குவரத்தைக் கருத்திற்கொண்டு அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குக் கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய் செலவாகும் தற்போதைய நிலையின்படி. 30 கோடி ரூபாயைச் செலவிட்டு ஒரு புதிய பாலத்தை உருவாக்குகிற நிலைமையில் இன்றைய அரசினுடைய நிதிநிலைமை இல்லை. வருகிற காலங்களில் அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப அரசு இதுபற்றி பரிசிலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 472, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

1997 ஏப்ரல் 5]

472--

இரயில் பாதைக் கடவில் மேம்பாலம் கட்டுதல்

*3895--**திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பத்தூர் தொகுதி, சந்திரன் நகர், வேலன் நகர், ஔவை நகர் ஆகிய கிராமப் பகுதியினர் இரயில் பாதையைக் கடக்கும் இடத்தில் மேம்பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் பகுதியிலே சந்திரன் நகர், வேலன் நகர், ஔவை நகர் ஆகிய 3 கிராமங்களிலே 3,000 பேர்கள் வாழ்கிறார்கள். அந்த 3,000 பேர்கள் வாழ்கிற இடத்திலே பள்ளிக்குச் சிறுவர்கள் வர வேண்டுமென்றால் கிராமங்களிலேயிருந்து திருப்பத்தூர் டவுனுக்கு வர வேண்டும். துரித வேக இரயில்கள், 50 இரயில்கள் அந்த ரோட்டிலே ஓடுகின்றன. அந்தப் பிள்ளைகள் வருவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அடுத்த நிதியாண்டிலே இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான சாலை என்பதையும் அரசு உணர்ந்து இருக்கிறது. மேம்பாலங்களைக் கட்ட வேண்டுமானால் மாநில அரசு 50 சதவீதமும், மத்திய அரசு 50 சதவீதமும் தர வேண்டும். மத்திய அரசிடம் 50 சதவீதம் கொடுக்கிற நிலைமை வருமானால் அடுத்த ஆண்டு மாநில அரசு இதைப் பரிந்துரை செய்யத் தயாராக இருக்கிறது.

[1997 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரா. சேதுநாதன்.

திரு. ரா. சேதுநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் கேட்க வேண்டிய கேள்வி என்ற காரணத்தால் கேட்கிறேன். கடந்த 4 நாட்களாக லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. என் ஊரிலேயிருந்து வந்தவர்கள் 3 மணி நேரத்தில்தான் திண்டிவனத்திலேயிருந்து வர முடியும்; ஒன்றரை மணி நேரத்தில் நாங்கள் வந்து விட்டோம் என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் லாரிகள் எதிரே வராததுதான் என்று சொன்னார்கள். எனவே, நெடுஞ்சாலையில் கடந்த 4 நாட்களாக எத்தனை விபத்துக்கள் ஏற்பட்டு இருக்கின்றன? இதற்கு முன்னால் எப்படி இருந்திருக்கிறது என்று கணக்கிட்டு, இந்த 4 நாட்களில் எத்தனை வழக்குகள் என்று பார்க்கின்றபொழுது இந்தச் சாலையிலே விபத்துக்கள் லாரிகளால் குறைவு என்று அரசு உணருமேயானால் நான் வணக்கத்தோடு கேட்டுக் கொள்கிறேன், லாரிகளுக்குத் தனிப்பாதையும், பஸ், கார்களுக்குத் தனிப்பாதையும் அமைத்து பல உயிர்களைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் மறந்து விடக் கூடாது. இருக்கிற சாலைகளை அகலப்படுத்துவதற்கே நிதிநிலை போதாத காலகட்டத்தில், லாரிகளுக்கு என்று தனிப்பாதை, பிறகு கார்களுக்கு, சைக்கிள்களுக்கு எனறு விரிந்து கொண்டே போகுமானால் அரசினுடைய நிதிநிலை தாங்காது. ஆனால் லாரிகள் இல்லாத காரணத்தினால் போக்குவரத்து குறைந்திருக்கிறது. அந்தச் சாலைகளை அகலப்படுத்தி போக்குவரத்தைச் சீர் செய்வதற்காக அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்.

திரு. ஏ. ஆர். ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகரில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது? இந்தத் திட்டத்திற்காக இரயில்வேத் துறை ரூ. 7 கோடி ஒதுக்கியுள்ளது. மாநில அரசின் சார்பாகப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா? 60 ஆண்டுக்காலமாக விருதுநகர் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்த மேம்பாலம் கட்டும்

1997 ஏப்ரல் 5]

பணி இந்த ஆண்டே துவக்கப்படுமா? இதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விரிவான விளக்கம் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விளக்கம் இப்போது என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 473, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

473--

பொறையார் தொடக்கக் கூட்டுறவு வங்கி

*4508--**திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், பொறையார் தொடக்கக் கூட்டுறவு வங்கியில் அடமான நகைகள் கையாடப்பட்டது குறித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், பொறையார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற கையாடல் மற்றும் நகைகள் களவாடப்பட்டது குறித்து, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1997 ஏப்ரல் 5

திரு. கோ. மோகனதாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொடக்க வேளாண்மை வங்கியிலே நகைகளை அடகு வைத்தவர்களெல்லாம் நகை கிடைக்காமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நகைகள் திரும்பவும் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் செயலாளர், அதிலே பணியாற்றிய நபர்கள், உறுதுணையாக இருந்த அத்தனை பேரின் மீதும் நீதிமன்றத்திலே வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர்களுடைய சொத்துக்களையெல்லாம் ஜப்தி செய்யச் சொல்லி நீதிமன்றமும் ஆணையிட்ட பிறகு, மேல் முறையீட்டுக்கு அவர்களெல்லாம் சென்றிருக்கிறார்கள். இதற்கிடையே இரண்டே இரண்டு நபர்கள் நுகர்வோர் கோர்ட் மூலமாகத் தீர்ப்பு பெற்று 20 ஆயிரம் ரூபாய் அதற்காக பணமும் பெற்றிருக்கிறார்கள். தொடர்ந்து அதிலே நகைகளை இழந்த பயனாளிகளுக்காக விரைந்து நடவடிக்கை எடுத்து திருப்பிக் கொடுப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்.

திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே அதிகாரப்பட்டி என்ற கிராமத்திலேயும், கொடமாண்டப்பட்டி என்ற கிராமத்திலேயும் இதே போல நகைக் கடன்கள் என்ற பெயரிலே கடன் கொடுத்து நகைகள் கிடைக்காமல் போயிருக்கின்றன. அதன் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றதா? அதை உள்ளிட்டு எத்தனை பேரை கைது செய்திருக்கிறார்கள் என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலேயிருக்கின்ற தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பற்றியக் கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்டு விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பசும்பொன் தா. கிருட்டினன்.

1997 ஏப்ரல் 5]

திரு. பசும்பொன் தா. கிருட்டினன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி, கூட்டுறவு நாணயச் சங்கத்திலே அல்லது வங்கிகளிலே கையாடல் செய்த கூட்டுறவுத் துறையைச் சார்ந்த அதிகாரிகள்மீது போலீஸ் வழக்கு பதிவு செய்து சில பேர் கைது செய்யப்பட்டு, சில பேர் முன்ஜாமீன் பெற்று வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களை நிர்வாகம் தற்காலிக வேலைநீக்கம் செய்திருந்த காலத்தில், மீண்டும் அவர்களுக்கு சில இடங்களிலே வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி மீண்டும் நியமனம் செய்வது சட்டப்படி சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில் செயலாளர், அவருக்கு உறுதுணையாக இருந்தவர்கள் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக, துறையிலே தவறு செய்யும் அதிகாரிகள் முழுமையாக அதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்படுகின்றார்கள். ஏதோ ஒரு வகையிலே அந்தத் தவறுதலுக்கு உறுதுணையாக இருந்து, ஏதோ தெரியாத்தனமாக இருந்திருந்தால் அவர்களைத் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்து பிறகு விசாரித்து இவர்களுக்கு அதிலே பொறுப்பில்லையென்று தெரிந்த பிறகுதான் மறுபடியும் வேலை அவர்களுக்குத் தரப்படுகிறது. தவறு செய்தவர்களுக்கு நிச்சயமாக மறுபடியும் வேலைவாய்ப்பு அளிப்பதில்லை. குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால் அதைப் பற்றி விசாரிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. வேலாயுதன்.

திரு. சி. வேலாயுதன்: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் தொகுதியில் தலக்குளம் கூட்டுறவு வங்கியில் 5 பேர் ஊழல் செய்ததாக, 5 பேரை வேலைநீக்கம் செய்து, திரும்பவும், இரண்டு பேரை வேலைக்கு எடுத்திருக்கிறார்கள். இதுபோன்று செய்வது முறையா? ஒன்று அத்தனை பேரையும் எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது அத்தனை பேரையும் நீக்க வேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே முதலிலே சொன்ன பதில் இவருக்கும் பொருந்தும். குறிப்பாக, முழுமையாக தவறுக்குப் பொறுப்பேற்றவர்கள் நிரந்தரமாக வேலைநீக்கம் செய்யப்படுகின்றார்கள். ஏதோ ஒரு வகையிலே தொடர்பு கொண்டிருந்தால் மன்னித்து வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய எண்ணம் இருந்தால் அவர்களுக்கு அளிக்கலாம். குறிப்பிட்டு இவர்கள் அதிலே இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வாரானால், விசாரித்து நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 474. திரு. இ. கணேசன். மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

474--

நிலவள வங்கி கடன்தொகை அதிகரித்தல்

*5809--**திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நிலவள வங்கிகளில் தனி நபருக்கு வழங்கப்படும் கடன் தொகையின் உச்ச அளவு என்ன?

(ஆ) அதனை அதிகரிக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் பண்ணைச்சார்ந்த மற்றும் பண்ணைச்சாராக் கடன்கள் வழங்கி வருகின்றது. பண்ணைச் சார்ந்த கடன்களுக்கு தனிநபர் உச்சவரம்பு இல்லை. இக்கடனில் ஒவ்வொரு காரியத்திற்கும் அலகுத் தொகை (யூனிட் காஸ்ட்) தேசிய வங்கியினால் மாவட்ட அளவிலிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

பண்ணைச்சாராக் கடன்களுக்கு உச்சவரம்பாக ரூ. 10 இலட்சம் அளிக்கப்படுகிறது.

(ஆ) நபார்டு தேசிய அளவில் வழங்கக்கூடிய உச்சவரம்பு கடன் அளவினை அவ்வப்போது அதிகரித்து அனுமதி வழங்குவதன் அடிப்படையில் தமிழகத்தில் உள்ள பிரதம கூட்டுறவு நிலவள வங்கிகளும் கடன்களின் அளவினை உயர்த்தி கடன் வழங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-10

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணை சாராக் கடனில் உச்சவரம்பு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தகுதியுள்ளவர்களுக்கு உச்சவரம்பைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்சவரம்பு இல்லை. நபார்டு வங்கியினுடைய அறிவுரையின்படிதான் செய்யப்படுகின்றது. ஏனென்றால், Re-finance-ஐ அந்த வங்கிதான் செய்கின்றது. அதனால் அவர்களுடைய அறிவுரையின்படிதான் வழங்கப்படுகின்றது. இதிலே உச்சவரம்பு என்பதில்லை. ஒரு நபர் என்று வரும்போது, 1986-லே ஒரு நபருக்கு ரூபாய் 30,000-லிருந்து ரூபாய் 5 இலட்சம் வரை தரப்பட்டது. பிறகு, படிப்படியாக உயர்த்தி, இப்போது ரூபாய் 10 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. உச்சவரம்பு என்பது அவரவர்கள் செய்கின்ற தொழிலைப் பொறுத்துத்தான் இருக்கிறது, இருந்தாலும் அவ்வளவையும் தருவதற்கு அந்த வங்கி அனுமதி அளித்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. கே. மணி.

திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பென்னாகரம் தொகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் எல்லாம் கூட்டுறவு நிலவள வங்கியிலே கடன்களைப் பெறுவதற்கும், மற்றும் பிற காரியங்களுக்கும் செல்ல வேண்டும் என்று சொன்னால் ஏறக்குறைய 70, 75 கிலோ மீட்டர் தூரத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. பென்னாகரம் வட்டத்திற்கான கூட்டுறவு நிலவள வங்கியும், மாவட்டத் தலைநகரான தர்மபுரியிலே இயங்கிக்கொண்டு வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் கருணை கூர்ந்து, இந்தக் கூட்டுறவு நிலவள வங்கியைப் பிரித்து, பெண்ணாகரம் வட்டத்திற்கென, பெண்ணாகரத்திலேயே கூட்டுறவு நிலவள வங்கியை அமைக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வங்கியைத் தொடங்க வேண்டுமென்றால், அதற்கு எவ்வளவு முதலீடு செய்யப்பட வேண்டும், அப்படிச் செய்கின்றபோது அது அவ்வளவு வயபிளாக இருக்குமா என்பதை ஆராய்ந்துதான் வங்கி தொடங்கப்படுகின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அது ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 475, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

475--

நீதிமன்றங்களை ஒரே வளாகத்தில் அமைத்தல்

*3139--**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு--அம்பேத்கர் மாவட்டம், அரக்கோணம் நகரில் வெவ்வேறு இடங்களிலுள்ள மூன்று நீதிமன்றங்களை ஒரே வளாகத்திற்குள் கொண்டு வர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

வட ஆற்காடு மாவட்டம், அரக்கோணம் நகரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. ஆர். தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக மக்கட்தொகையைக் கொண்ட அரக்கோணம் நகரில், முதலாம் எண்ணுள்ள நடுவர் நீதிமன்றம் அப்துல் மஜீத் தெருவிலும், இரண்டாம் எண்ணுள்ள

நடுவர் நீதிமன்றம் அங்கிருக்கிற நீதிமன்ற வளாகத்திற்குள்ளும், மூன்றாம் எண்ணுள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மதுரப்பள்ளி தெருவிலும், இப்படி வெவ்வேறு இடங்களில் செயல்படுவதால், பொதுமக்களும், வழக்கறிஞர்களும், அரசு அதிகாரிகளும் மிகவும் அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். இரண்டாம் எண்ணுள்ள நடுவர் நீதிமன்றம் இயங்குகின்ற நீதிமன்ற வளாகத்தினுள் நான்கு ஏக்கர் நிலம் இருக்கின்ற காரணத்தினால், அங்கேயே மூன்று நீதிமன்றங்களுக்கும் கட்டடம் கட்டி, இயங்கச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற குறிப்பின் அடிப்படையில், அரக்கோணத்தில் இரண்டு நீதிமன்றங்கள்தான் இருக்கின்றன. அவை, District Munsiff Court, Judicial Magistrate Court. இவற்றில், உரிமையியல் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் 5000 ரூபாய் வாடகையும், குற்றவியல் நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் 3600 ரூபாய் வாடகையும் கொடுக்கப்படுகிறது. புதிதாக வளாகம் கட்டுவதற்கான இடத்தை முதலிலே நிர்ணயித்ததில், பத்திரப் பதிவுத் துறைக்குச் சொந்தமான இடத்தை அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். இதை உயர்நீதிமன்றம் ஒத்துக் கொள்ளவில்லை. எனவே, இடமும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. வேறு இடம் பார்க்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் பணித்திருக்கிறது. எனவே, இடமும், நிதித்துறையின் ஒத்துழைப்பும் கிடைக்குமெனில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து, அவர்களுடைய வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப. தங்கவேலன்.

திரு. சுப. தங்கவேலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வளர்ந்து வருகிற பெரிய நகரமாகும். கோர்ட்டுக்குச் சொந்தமான காலி இடத்திலே, நீண்ட நாட்களாக ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டு வருகின்றது. அதை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையது அல்ல

[1997 ஏப்ரல் 5

என்றாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்காகச் சொல்ல ஆசைப்படுகிறேன். பரமக்குடியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு அரசு ஆலோசித்து வருகிறது. ஏற்கெனவே முன்னோடித் திட்டத்தின்கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஐம்பது நீதிமன்றங்களைத் துவக்குவதற்காக கடந்த ஆண்டு ஆணையிட்டார்கள். அந்த நீதிமன்றங்கள் அனைத்தும் துவங்கப்படவில்லை. எந்தெந்த நீதிமன்றங்கள் துவங்கப்படவில்லையோ, அவைகளையெல்லாம்--Regular Court-ஆக, நிரந்தர நீதிமன்றங்களாக எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி உயர் நீதிமன்றத்திடமிருந்து கருத்துரு கேட்கப்பட்டிருக்கிறது. அது விரைவில் கிடைக்கப்பெறும். அதன்பிறகு மானியக் கோரிக்கையில் இவைகள் பற்றிச் சொலலப்படும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பரமக்குடியில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். எனவே, இவைகளிலெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு மானியக் கோரிக்கையின்போது இறுதி முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. நடராஜன்.

திரு. டி. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்சிப் கோர்ட்டுகளில் ரூபாய் ஐந்தாயிரம் வரையிலான கேஸ்களை நடத்துகிறார்கள். ஐந்தாயிரத்திலிருந்து இருபதாயிரம் ரூபாய் வரையிலான கேஸ்களை சப்-கோர்ட்டுகளில் நடத்துகிறார்கள். ஆனால், இருபதாயிரத்திலிருந்து முப்பதாயிரம் ரூபாய் வரையிலான கேஸ்களை மீண்டும் முன்சிப் கோர்ட்டுகளிலேயே நடத்துகிறார்கள். இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே, முப்பதாயிரம் ரூபாய் வரையிலான கேஸ்கள் அனைத்தும் முன்சிப் கோர்ட்டுகளிலேயே நடத்த அரசு முன்வருமா எனறு தங்கள் மூலம் அறிய விருமபுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குச் சொல்லிக் கொள்கிறேன். மூலக் கேள்விக்கும் உங்களுடைய துணைக் கேள்விக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? உங்களுக்கு அவ்வளவு அக்கறை இருந்தால், தனிக் கேள்வி போட வேண்டியதுதானே? இதற்கு அமைசசர் பதில் சொல்ல வேண்டியதில்லை. திரு. ஆர். தமிழ்ச்செல்வன்.

1997 ஏப்ரல் 5]

திரு. ஆர். தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கோரிய நீதிமன்றம் இயங்கிக் கொண்டிருக்கிறது. முதன்முதலில் 1976-ஆம் ஆண்டுதான் அங்கே நீதிமன்றம் துவங்கப்பட்டது. பிறகு, 1984-ஆம் ஆண்டு பொதுப்பணித் துறையினர் அங்கே நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டுவதற்குத் தகுந்த இடம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ அந்தப் பணி தொடங்கப்படவில்லை. பின்னர் 1992-ஆம் ஆண்டு அந்த இடம் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இப்போது வரி வசூல் செய்யப்படுகிறது. எனவே, மீண்டும், அந்த இடத்தை நீதிமன்றத்திற்குத் தேவை என்று திரும்பப் பெற்று, அங்கே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர்தான் இந்தக் குறிப்பை அரசுக்குத் தந்திருக்கிறார். இது பத்திரப் பதிவுத் துறைக்குச் சொந்தமானது என்று தெரிவித்திருக்கிறார். அதனடிப்படையில் தான் உயர் நீதிமன்றமும் வேறு இடத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 476, திரு. பா. துரைசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

476--

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் அமைத்தல்

*3248--**திரு. பா. துரைசாமி:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரம்பலூர்-திருவள்ளுவர் மாவட்டம், மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் பெரம்பலூரில் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 ஏப்ரல் 5

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, பெரம்பலூரில், பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டத்திற்கென மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கு சென்னை உயர்நீதிமன்றம் செயற்குறிப்பினை அனுப்பி உள்ளது. இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. அத்துடன், மாவட்ட நீதிமன்றங்களிலும், மாவட்ட அமர்வு நீதிமன்றங்களிலும், சார்பு நீதிமன்றங்களிலும் நீதிபதிகளுக்கென்று உதவியாக இருக்கிற பென்ச் கிளார்க்குகளுக்கு வேலைப்பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு உதவியாக சில உதவியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நீதித்துறையின் நிருவாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். இதிலே தலையிடுவதற்கு அரசுக்கே உரிமையில்லை. அரசியல் சட்டத்தின் விதிப்படி இதையெல்லாம் உயர் நீதிமன்றம்தான் கண்காணிக்கும். நாம் இதிலே தலையிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 477, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

477--

உசிலம்பட்டியில் பெண்கள் பாலிடெக்னிக் நிறுவுதல்

*4789--**திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உசிலம்பட்டியில் கள்ளர் சீரமைப்பு திட்டத்தின்கீழ் பெண்கள் பாலிடெக்னிக் நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

1997 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

திரு. பி.என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உசிலம்பட்டித் தொகுதியில் பெண்கள் கல்வி ரீதியாக மிகமிக பின்தங்கிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று தொழில் வாய்ப்பு எதுவும் இல்லை. இதனால் தனியாக வருமானம் ஈட்டுகின்ற நிலை அவர்களுக்கு இல்லாத காரணத்தால், உசிலம்பட்டித் தொகுதியில் பெண் சிசு வதை செய்யப்படுகின்ற சூழ்நிலைகள் பரவலாக ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாக, பிரமலைக் கள்ளர் சீரமைப்புத் துறை ஏற்படுத்தியதே உசிலம்பட்டியில் வாழ்கின்ற இந்தச் சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்வதற்காகத்தான். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையுள்ளத்தோடு உசிலம்பட்டித் தொகுதியில் பெண்களுக்கென அவசியம் பாலிடெக்னிக்கை உருவாக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. பரிசீலிப்பதற்கும் உரிய தகுதி இல்லை. ஏனென்றால், புதுடெல்லியிலுள்ள அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்வி நிலையத்தின் விதிமுறைப்படி., அதன் அங்கீகாரம் பெற்ற பின்னரே புதிதாக தொழில்நுட்பப் பயிலகங்கள் துவங்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 478, திரு. பெ. சு. திருவேங்கடம், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

478--

முதுமலை வனவிலங்குச் சரணாலயம்

*38--**திரு. பெ. சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1997 ஏப்ரல் 5

(அ) முதுமலை வனவிலங்குச் சரணாலயம் மூடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): முதுமலை வனவிலங்குச் சரணாலயம் 17-3-1997 முதல் 30-4-1997 வரை பார்வையாளர்களுக்கு மூடப்பட்டுள்ளது. முதுமலை வன உயிரின சரணாலயத்தில் கடுமையான நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதெனவும், இதன் விளைவாக அங்கே வரும் பயணிகள் சிலருடைய அலட்சியப் போக்கினால், அங்கேயுள்ள வனப் பகுதிகளில் தீ விபத்துக்கள் ஏற்படலாம் எனவும், தற்போதுள்ள நீர்ப் பற்றாக்குறையின் காரணமாக வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பார்வையாளர்களுக்குத் தேவையான தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியாத நிலையில் இருப்பதால் 17-3-1997 முதல் 30-4-1997 வரை மூடப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை வனவிலங்குச் சரணாலயம் மிகப் பிரசித்திபெற்றது. வெளிநாடுகளிலிருந்து ஏராளமான பார்வையாளர்கள் அங்கே வருகின்றனர். இந்தச் சரணாலயத்தை மூடுவதால் அரசுக்கு பல நஷ்டங்கள் உண்டாகும். வறட்சிக் காலங்களில் அங்கேயிருக்கக்கூடிய மிருகங்களுக்குக் குடிப்பதற்குக்கூட தண்ணீர் கிடைக்காத நிலையிருப்பதாக அறிகிறேன். அதைப் போக்குவதற்கு, அங்கே கிணறுகள் எடுத்து, மோட்டார்கள் அமைத்து, அங்கேயுள்ள மிருகங்களுக்காவது குடிக்கத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எதிர்காலத்தில் சரணாலயத்தினை மூடுகின்ற நிலையைத் தவிர்த்து, தற்போது மூடப்பட்டுள்ள சரணாலயத்தினை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை வனவிலங்குச் சரணாலயம், ஆனைமலை, இந்திராகாந்தி சரணாலயம் ஆகியவற்றில் ரூ. 5 லட்சம் செலவில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள 31-7-1996-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேலும் நீலகிரி

1997 ஏப்ரல் 5]

மாவட்டத்தில் இப்போது மழை பெய்து கொண்டிருக்கிற காரணத்தால் ஏராளமான பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே வருகின்ற தமிழ் புத்தாண்டு தினத்திலிருந்து முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தை பொதுமக்களுக்குத் திறந்துவிட அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் பிறந்த மண்ணிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள என்னுடைய தொகுதி காங்கேயம், சென்னிமலை, வெள்ளோட்டில் அமைந்துள்ள பெரியகுளத்திற்கு வேடந்தாங்கலைவிட பலவகைப் பறவைகள் வருகின்றன. இந்த இடத்தை பறவைகள் சரணாலயமாக அறிவிப்பதற்கு நமது அரசு முயற்சி எடுத்து வருகின்றது என்பதை அறிகிறேன், பாராட்டுகிறேன். இதற்கான அதிகாரபூர்வமான அறிவிப்பு எப்போது வரும் என்று அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம் அமைப்பது பற்றிய கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. ராசேந்திரன்.

திரு. ஏ. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலைக் காட்டில் யானைகள் எத்தனை இருக்கின்றன? மற்ற மிருகங்கள் எத்தனை இருக்கின்றன? சென்ற ஆண்டில் அந்த எண்ணிக்கை அதிகமாகி இருக்கின்றதா, குறைவாகி இருக்கின்றதா எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-ஆம் ஆண்டு கணக்கின்படி தமிழ்நாட்டிலுள்ள மொத்த யானைகளின் எண்ணிக்கை 2350. மற்ற மிருகங்களுடைய எண்ணிக்கை கணக்கில் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. அன்பழகன்.

[1997 ஏப்ரல் 5

திரு. வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலைக் காட்டில் நிறைய விலங்குகள் இருக்கின்றன. எனக்குத் தெரிந்த தகவலின்படி, குறிப்பாக யானைகள் அதிகமாக அங்கே இருக்கின்றன. அப்படிப்பட்ட முதுமலை வனவிலங்குச் சரணாலயத்திற்கு கடந்த காலத்திலே, கடந்த ஆட்சியினர் அன்றைய முதலமைச்சர் பெயரை எதற்காக வைத்தார்கள்? அதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா? இன்றைக்கு அந்தப் பெயர் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை வனவிலங்குச் சரணாலயத்திற்கு முன்னாள் முதல்வர் பெயரை வைத்ததற்கு ஒரே ஒரு காரணம் இருப்பதாக, ஏதோ ஒரு விழாவிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதைத்தான் நான் சொல்ல முடியும். அந்தப் பெயர் நமது கழக அரசு பொறுப்பேற்றவுடன் நீக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 479, திரு. ஆர். ஆர். சேகரன், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

479--

சேலத்தில் கைப்பற்றப்பட்ட சந்தனக் கட்டைகள்

*4233--**திரு. ஆர். ஆர். சேகரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கடந்த ஆண்டு சேலத்தில் கைப்பற்றப்பட்ட சந்தனக் கட்டைகள் மொத்தம் எவ்வளவு டன்?

(ஆ) அவற்றைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1997 ஏப்ரல் 5]

(அ) மற்றும் (ஆ): கடந்த 1995-96-ஆம் ஆண்டில் சேலம் மண்டலத்தில் கைப்பற்றப்பட்ட சந்தனக் கட்டைகள் மொத்தம் 235.65 டன்கள் ஆகும்.

திரு. ஆர். ஆர். சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கட்டைகள் கடத்தல் என்பது, தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தை மட்டுமல்ல, சமீபகாலமாக சேலம் மாவட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் நடப்பதற்கும் ஒரு காரணமாக அமைந்திருக்கின்றது. கடந்த ஆட்சியிலே, வாழப்பாடியிலே நடந்த வெடிகுண்டுச் சம்பவம் எல்லோருக்கும் நினைவிருக்கும். அதைப்போலவே, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகும்கூட, அயோத்தியாப்பட்டணத்திலே, பட்டப்பகலிலே, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முன்பு 4 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். அதன் தொடர்பாக 14 பேர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. ஆகவே, இதுபோன்ற சமூக விரோதச் செயல்களுக்கு, இந்தச் சந்தன மரக் கடத்தல் கும்பல்கள் தூண்டுகோலாக அமைகின்றன. அரசு இதனைத் தடுப்பதற்கு ஐ.ஜி. அளவிலே ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்தி, கண்காணிப்புப் பணியைச் செய்திட முன்வருமா என அறிய விரும்புகிறேன். மேலும், சந்தன மரக் கடத்தல் வீரப்பனைப் பிடிப்பதற்கு ஆகும் செலவினை இதற்காகச் செய்தால், சந்தன மரக் கட்டைகள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காகவாவது ஒரு வாய்ப்பாக அமையும். அதையும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேலும் என்ன? உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்காக அரசு பின்வரும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வனத் துறை அலுவலர்கள், தங்கள் குழுவினருடன் அதிரடிக் கூட்டு நடவடிக்கையினையும், இரவு நேர ரோந்துப் பணியினையும் மேற்கொண்டு வருகிறார்கள். கடத்தல் தொழிலுக்கு இலக்காகியுள்ள இடங்களில் வனச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருகின்றது. நடமாடும் தணிக்கைச் சாவடிகள் அமைக்கப்பட்டு

சந்தன மரக் கடத்தல் கண்டுபிடிக்கப்படுகிறது. பணியாளர்களுக்கு விரைவு வாகனங்கள் வழங்கிட அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. கடத்தலுக்கு மிகவும் இலக்காகி உள்ள இடங்களில் உயர் மற்றும் மிக உயர் அலை தகவல் தொடர்பு மற்றும் கம்பியில்லா தந்திச் சாதனங்கள் நிறுவப்பட்டு, தகவல் தொடர்பு மற்றும் கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தன மரக் கடத்தல் மற்றும் சந்தன மரக் குற்றவியல் விவரங்களைக் கொடுப்பவர்களை ஊக்குவிக்க வெகுமதி அளிக்கப்பட்டு, குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், சந்தன மரக் கடத்தலைத் தொழிலாக கொண்டவர்களைக் கண்டுபிடித்து, குண்டர்கள் சட்டத்தில் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே, இப்போது சந்தன மரக் கடத்தல் வெகுவாகக் குறைந்துள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 480, திரு. டி. இராஜேந்தர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

480--

வாணிய சுப்பிரமணிய சுவாமி கோவில் நிலம் பெயர் மாற்றம்

*2551--**திரு. டி. இராஜேந்தர்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பூங்கா நகர் தொகுதியில் அமைந்துள்ள வாணிய சுப்பிரமணிய சுவாமி கோவிலைச் சார்ந்த இடம் தனியாருக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூங்கா நகர் தொகுதியில் அமைந்துள்ள வாணிய சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இடங்கள் தனியார் பெயருக்கு மாற்றம் செய்யப்படவில்லை.

(ஆ) எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ந. பூ. இராமஜெயம்.

திரு. ந. பூ. இராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் நிர்வாகத்திற்கும், வாடகைதாரர் அல்லது குத்தகைதாரர் ஆகியோருக்கும் இடையே ஏற்படுகின்ற வழக்குகளை நடத்துவதற்கு, அந்தக் கோவிலைச் சார்ந்தவர்களே வழக்கறிஞர்களை நியமிப்பதால், பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதனைத் தடுக்கும் வகையில், அரசே தனியாக வழக்கறிஞர்களை நியமிக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, குடியிருப்பவர்களுக்கும், பதிவேடுகளிலே இருப்பவர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பரிசீலித்து, வழக்கறிஞர்களைத் தனியாக நியமிக்கின்ற சூழ்நிலை இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2 சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்திற்கு நிர்வாக அதிகாரி நியமனம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. சிதம்பரம், நடராஜப் பெருமான் ஆலயத்தில், முதன்முறையாக நிர்வாக அதிகாரியை அறநிலையத் துறை நியமித்தது குறித்து, மாண்புமிகு

உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், நடராஜர் ஆலயத்தில் முதன்முறையாக ஒரு நிர்வாக அதிகாரி பொறுப்பேற்றிருக்கிறார். ஆனால், ஏற்கெனவே, அந்த ஆலயத்தினுடைய நகைகளைப் பரிசோதிக்க ஒரு தனி நிர்வாக அதிகாரி இருக்கிறார். 6 மாதத்திற்கு ஒரு முறை அந்த நிர்வாக அதிகாரி நகைகளைப் பரிசோதித்து, சான்றிதழ் வழங்குகின்றார். அதேபோல, அந்தக் கோவிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வருகின்ற வருவாயைக் கண்காணிப்பதற்காக ஒரு தனி நிர்வாக அதிகாரி இருக்கிறார். அந்த வருமானத்தைக் கணக்கெடுத்து. மின்சாரத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையினை, அதிலிருந்து செலுத்திவிட்டு, மீதம் ஏற்படாமல், குறைவு ஏற்பட்டால், அந்தத் தொகையையும், தீட்சிதர்களே பொதுமக்களிடமிருந்து வசூல் செய்து, இதைக் கட்டுகிறார்கள். எனவே, இந்த ஆலயத்திற்குச் சொந்தமான விஷயங்கள் இரண்டுதான். ஒன்று, நகைகள்; அதற்குத் தனி அதிகாரி இருக்கிறார். மற்றொன்று, நிலம்; அதற்கும் தனி அதிகாரி இருக்கிறார். எனவே, இவை தீட்சிதர்களுடைய கட்டுப்பாட்டில் வரவில்லை. அந்த ஆலயத்தில் உண்டியல் கிடையாது. எனவே, அதற்கும் தனி அதிகாரி தேவைப்படவில்லை. அங்கே வருகின்ற ஒரே வருமானம், தீட்சிதர்கள் பூசை செய்கிறபோது, பக்தர்கள் அவர்களுக்குக் கொடுக்கிற குறைந்தபட்சத் தொகைதான் அங்கே அவர்களுக்கு வருமானமாக வருகிறது. எனவே, அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமான நிலைமையாக இருக்கிறது. அந்தக் காலத்திலே பாரதியார் பாடினார்:

முற்பகல் 10-30

"பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே - வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே - பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற காலமும் போச்சே - நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யுங் காலமும் போச்சே"

என்று அந்தக் காலத்திலே மகாகவி பாரதியார் அவர்கள் பாடினார். அந்த நிலைமைகள் எல்லாம் அப்போதே எங்கோ போய்விட்டன. ஏதோ தீட்சிதர்கள் ஓர் ஆதிக்க சக்தி என்கிற உணர்வு ஒரு சிலருக்கு இருக்கிறது. ஆனால் அந்த நிலைமை அங்கே அப்படி

இல்லை. தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர் என்று கூறுவார்கள். ஆனால், இன்றைக்கு 300 பேர்தான் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் குடிசை வீடுகளிலே வாழ்கிறார்கள். கும்பல் கும்பலாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், திரு.வி.க. அவர்கள் பாணியிலே சொல்லப் போனால், அதனை ஒரு 'பார்ப்பனச் சேரி' என்று கூடச் சொல்லலாம். அந்த அளவுக்கு அவர்களுடைய வாழ்க்கைத்தரம் மிகவும் கீழாக இருக்கிறது. எனவே, அப்படி இருக்கிறபோது, அந்த இடத்திலே ஒரு தனி அதிகாரி தேவைதானா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆனால், அவர்கள் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற வறுமை, அவர்களுடைய இறைபணிக்குத் தடையாக இல்லை. உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள், அந்த ஆலயத்திற்கு வருகை புரிந்தபோது, மேலாடையோடுதான் நான் கர்ப்பக்கிரகத்திற்குச் செல்வேன் என்று பிடிவாதமாக இருந்தார்கள். ஆனால், அந்தத் தீட்சிதப் பெருமக்கள், அவருக்கு அனுமதியளிக்க மறுத்தார்கள். அதேபோல், எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, சில அமைச்சர்கள், அன்றைக்கு அறநிலையத் துறைக்குப் பொறுப்பாக இருந்தவர்கள், மேலாடையோடு கர்ப்பக்கிரகத்திற்குள் நுழைய வேண்டுமென்று சொன்னபோது, அப்போது அந்தத் தீட்சிதர்கள், அதன் பண்டைய பெருமை காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக, அதற்கு அனுமதி மறுத்தார்கள். எனவே, இவைகளையெல்லாம் காரணமாக வைத்துதான், இந்துசமய அறநிலையத் துறை, அன்றிலிருந்து தீட்சிதர்களுக்கு சிரமங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளாக இருந்துவரும் பழக்க வழக்கத்தை, இன்றைக்கு நாம் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

நீதிமன்றத்திலே ஏதோ தீர்ப்பு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். 45 நாட்களுக்கு ஒரு முறை. அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை, யாராவது ஒரு அதிகாரியிடம் கணக்குக் காட்ட வேண்டுமென்று அந்தத் தீர்ப்பிலே சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். வருமானமே இல்லாத அவர்கள் எந்தக் கணக்கைக் கொண்டு காட்டுவது என்று எனக்குத் தெரியவில்லை. நிலத்தின் மூலமாக வருமானம் அவர்களுடைய கைக்கு வரவில்லை. கோயில் நகைகளும் அவர்களுடைய கட்டுப்பாட்டிலே இல்லை.

பூஜைகளுக்காக வரக்கூடிய 5 ரூபாய், 10 ரூபாய் கணக்குகளைக் கொண்டுபோய், எந்த அதிகாரியிடம் அவர்கள் காட்ட வேண்டும் என்கிற விவரம் தெளிவாக இல்லை. எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பிப்பது என்னவென்றால், அங்கே ஒரு நிர்வாக அதிகாரி இப்போது பொறுப்பேற்றிருக்கிறார்; நிர்வாக அதிகாரி பொறுப்பேற்க வேண்டுமென்று எந்த நீதிமன்றத் தீர்ப்பும் சொல்லவில்லை; அவர்களுடைய கணக்குகளை ஒரு அதிகாரியிடம் அவர்கள் அளிக்க வேண்டும் என்று தான் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, ஒரு நிர்வாக அதிகாரி போய் அதற்கு அங்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்களே, அந்த நிர்வாக அதிகாரி அவர்களே கொண்டுபோய் ஒரு போர்டை அங்கே மாட்டி வைத்திருக்கிறார்கள். எனவே, அந்த ஊரிலே இருக்கிற இறையன்பர்கள் எல்லாம் அதற்கு மிகுந்த வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள்.

இன்றைக்கு வந்திருக்கிற நம்முடைய அரசாங்கம் ஒரு பகுத்தறிவு அரசாங்கம் என்பதிலே மாற்றுக் கருத்து யாருக்கும் இருக்க முடியாது. இராமலிங்கசுவாமி அவர்கள்கூட சொல்லியிருக்கிறார். 'சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய மதங்கள், சமயங்கள், மார்க்கங்கள் இவையெல்லாம் என் மனதில் பற்றா வண்ணம் அருள்புரிய வேண்டும்' என்று அவர் சொல்லியிருக்கிறார். எனவே, மதங்களும், சமயங்களும், சன்மார்க்கத்திற்குத் தடையாக இருக்கின்றன என்பதைத் தந்தை பெரியாரோ, அல்லது இன்றைக்கு இருக்கிற முதலமைச்சரோ எப்படிச் சொல்லியிருக்கிறார்களோ, அதேபோல், இராமலிங்க சுவாமிகளும் சொல்லியிருக்கிறார். எனவே, இதுபற்றிய பிரச்சினை இப்போது நமக்கு இல்லை. ஆனாலும்கூட, ஈராயிரம் ஆண்டுகளாக பழக்கத்திலே இருக்கிற அந்தக் கோயிலை, இவர்கள் தூய்மையாக வைத்திருக்கிறார்கள். அந்தக் கோயிலை அவர்கள் நல்லமுறையிலே நடத்துகிறார்கள். சில கட்டுப்பாடுகள் இருந்தாலும்கூட, ஏழ்மையிலே அவர்கள் சிரமப்பட்டாலும்கூட, அவர்கள் அதை நல்லமுறையிலே நடத்துகிறார்கள் என்ற காரணத்தினால், தனி அதிகாரி, அவர்களுடைய அன்றாட அலுவல்களில் தலையிடக்கூடாது. (மணியடிக்கப்பெற்றது). அப்படியே நீதிமன்றம் ஏதாவது ஒரு தீர்ப்பு வழங்கியிருந்தாலும்கூட, நம்முடைய சட்டப்பேரவையில் ஒரு தனி சட்டமுன்வடிவைக் கொண்டு வந்து நடராஜர் ஆலயத்தினுடைய அன்றாடப் பணிகளிலே

நிர்வாக அதிகாரிகள் தலையிடக் கூடாது என்கிற ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். ஒரு கருத்து நிலவுகிறது. தேவாரம், திருவாசகப் பாடல்களை அவர்கள் அங்கே பாட அனுமதிப்பதில்லை என்று சொன்னார்கள். நான் விசாரித்த வகையிலே அங்கே தேவாரப் பாடசாலையே இருக்கிறது. அப்படி ஏதாவது சிரமங்கள் இருந்தாலும்கூட அவர்களோடு பேசித் தீர்க்க முடியும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிர்வாக அதிகாரிகள் அன்றாட அலுவல்களிலே தலையிடாமல் இருப்பதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய முன்வருவார்களா? நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அவர்களுக்கு இடையூறாக இருந்தாலும்கூட ஒரு தனி சட்டமுன்வடிவு கொண்டு வந்து ஈராயிரம் ஆண்டு கால பெருமைமிக்க அந்த நடராஜர் ஆலயத்தினுடைய அன்றாட அலுவல்களுக்குக் குந்தகம் ஏற்படாமல் காப்பாற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகிரியா சிதம்பரம் நடராஜப் பெருமான் கோவிலுக்காக வாதாடுவது என்று யாராவது நினைத்துவிடப் போகிறார்களே என்று இராமலிங்கரை, பெரியாரை, என்னை எல்லாம் இழுத்துப் பகுத்தறிவு வாதத்தை முன்னிலைப்படுத்தி ஒரு சிறந்த உரையை--ஆனால் நாங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய உரையா அல்லவா என்பது வேறு விஷயம்--இங்கே ஆற்றியிருக்கிறார். நான் இந்த நிலை வந்துள்ள வரலாற்றைச் சுருக்கமாக, தங்களுடைய அனுமதியோடு இந்த அவைக்கு எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலுக்குப் பூஜை போன்ற கைங்கர்யங்களுக்காக பல கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்கு சுமார் 465.10 ஏக்கர் நஞ்சை நிலமும், சுமார் 453.19 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது. கட்டளைகளுக்கு அந்தக் கோவிலிலே உள்ள பல கட்டளைகளில் சுமார் 2288.93 ஏக்கர் நஞ்சை நிலமும், 462.29 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது. இவ்வளவு சொத்துக்கள் இருந்தும் நிர்வாகம் நல்லமுறையில் நடத்தப்படவில்லை என்றும், வருமானங்கள் இந்த ஆலயத்தின் பொருட்டு பயன்படுத்தப்படவில்லை என்றும், வரவு, செலவுகளுக்கு முறையான கணக்குகள் இல்லை என்றும் கூறப்பட்டது.

பொதுமக்களும், பக்தர்களும் மேற்படி திருக்கோவில் நிர்வாகம் தீட்சிதர்களால் நன்றாகப் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்ததின்பேரில் தொடர்ச்சியாக துறை அலுவலர்கள் ஆய்வு செய்து குறைகளைச் சுட்டிக்காட்டியும் நிர்வாகத்தில் இருந்து வந்த தீட்சிதர்கள் குறைகளைக் களையாமல் இருந்தனர் என்றும், கடந்த காலத்தில் கூறப்பட்டதன் பேரில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை தனது கடிதம் 52754/82, 20-7-82-ல் பொது தீட்சிதர்களின் செயலாளர் திரு. வி. எஸ். நடனசபாபதி தீட்சிதர் அவர்களுக்கு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை--'Notwithstanding anything contained in this (HR & CE) Act, the Commissioner may appoint, subject to such conditions, as may be prescribed, an Executive Officer for any religious institutions other than a Math or a specific endowment attached to a math'- என்று குறிப்பிடப்பட்டுள்ள அந்த இந்து சமய அறநிலைய சட்ட விதிகளின் சட்டப்பிரிவு 45(1)-ன்கீழ் - ஏன் செயல் அலுவலர் நியமனம் செய்யக்கூடாது என காரணம் கோரும் அறிவிப்பு விதிகளின்படி அனுப்பி வைக்கப்பட்டது. 24-7-82 அன்று காரணம் கோரும் அறிவிப்பினை திரு. வி. எஸ். நடனசபாபதி தீட்சிதர் பெற்றுக் கொண்டு அதை ஆட்சேபித்து ரிட் மனு எண் 5638/82-ஐ சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து தடை உத்தரவும் பெற்றார்.

மேற்படி உயர்நீதிமன்ற வழக்கின் இறுதித் தீர்ப்பில் சட்டப்பிரிவு 45(1)-ன்கீழ் ஏன் செயல் அலுவலர் நியமனம் செய்யக்கூடாது என காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதால், இதனையே ஒரு இறுதி முடிவாகக் கருத முடியாது எனவும், மனுதாரர் தன் மறுப்புகளை முறைப்படி தெரிவிக்கலாம் எனவும், அதனைப் பரிசீலித்து சட்ட விதிகளின்படியும், தகுதியின் அடிப்படையிலும் விசாரித்து உத்தரவிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து 19-5-85, 18-6-85, 12-7-85, 16-10-85, 15-11-85, 19-9-86, 10-12-86, 23-12-86 மற்றும் பல தேதிகளில் விசாரணை குறிப்பிடப்பட்டு, இறுதியாக 22-7-87-ல் விசாரணை முடிக்கப்பட்டு, 31-7-87-ல் செயல் அலுவலர் நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவினைத் தொடர்ந்து 10-8-1987-ல் நிர்வாக அதிகாரியால் தன்னிச்சையாக பொறுப்பு ஏற்கப்பட்டது. மீண்டும் இதனை எதிர்த்து பொது தீட்சிதர்கள் ரிட் மனு எண் 7843/87-ஐ தாக்கல் செய்தும், ரிட் பல்வகை மனு 114/87-ன்படி 11-8-87-ல்

நிர்வாக அதிகாரி நியமனம் செய்த உத்தரவின் மீது தடை உத்தரவும் பெற்றனர்.

முற்பகல் 10-40

17-2-1997-ல் மேற்படி ரிட் மனுவினை முடிவுக்குக் கொண்டு வந்து, உயர்நீதிமன்றம், ஆணையர், நிர்வாக அதிகாரி நியமனம் செய்து பிறப்பித்த உத்தரவினால் பாதிக்கப்பட்ட நபர் சட்டப்பிரிவு 114-ன்கீழ் அரசிடம் மேல்முறையீடு செய்து பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்றும், ஆனால் அதற்கு மாறாக அவசரக் கோலத்துடன் அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 226-ன்கீழ் நேரடியாக சென்னை உயர்நீதிமன்றத்தினை நாடி இடைக்கால உத்தரவு பெற்றனர் என்றும் அரசின் நடவடிக்கைகளை முடக்க முயற்சித்து எவ்வளவு தூரம் காலம் கடத்த இயலுமோ அதற்கு வழிவகுத்தாற்போல் செயல்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்து, காரணம் கோரும் அறிவிப்பில் தெரிவித்த குறைபாடுகள் அனைத்தும் சரியானவையே என்றும், அவை இந்திய தண்டனைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடிய தன்மை வாய்ந்த கடும் குறைபாடுகள் என கருத்துத் தெரிவித்தும், மொத்தத்தில் மனுதாரர்களான பொது தீட்சிதர்களின் கோரிக்கை நியாயமானதல்ல என்றும் கூறி அவர்களது நீதிப் பேராணை மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இதனை எதிர்த்து பொது தீட்சிதர்களால் சென்னை உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை மேல்முறையீடு மனு எண் 145/97 தாக்கல் செய்யப்பட்டது. இதனை இரு நீதிபதிகள் கொண்ட டிவிஷன் பெஞ்ச் 12-3-97-ல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

டிவிஷன் பெஞ்ச் தனது இடைக்காலத் தீர்ப்பில் 31-7-87-ல் செயல் அலுவலர் நியமனம் செய்து பிறப்பித்த ஆணையரின் உத்தரவில், செயல் அலுவலருக்குரிய அதிகாரங்களை வகைப்படுத்தும் பிரிவுகளில் விதி 3-'The Executive Officer shall be the person entitled to receive all the income in cash and kind and all offerings. All such income and offerings shall be in his custody'-என்ற பிரிவிற்கு மாத்திரம் தடை விதித்து, உறுப்பினர் சொன்னதுபோல தடை விதித்து, செயல் அலுவலர் இந்தத் திருக்கோயிலில் அனைத்து வருமானங்களையும் பெறுவதற்கு அதிகாரம் பெற்றவரல்ல என்று தெரிவித்தது. ஆனால் 45 நாட்களுக்கு ஒரு முறை, நியமனம் செய்யப்பட்ட நிர்வாக அதிகாரியிடம், பொது தீட்சிதர்கள் திருக்கோயிலுக்காக தங்களால் பெறப்பட்ட வரவினங்கள் அனைத்திற்கும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றும் இதனைக்

கொண்டு நிர்வாக அதிகாரி கணக்குகள் பேணி வரவேண்டும் என்றும் கூறியுள்ளது. இங்கேதான் 'அங்கே கணக்கு இல்லை, அதற்கு வருமானம் இல்லை' என்று மாண்புமிகு உறுப்பினர் அழகிரி சொன்னார்கள். இது மிகச் சுலபம், வருமானமே இல்லை என்றால், அதை எழுதிக் கொடுத்து, வருமானமே இல்லை. ஆகவே கணக்குத் தேவை இல்லை என்ற அந்தக் கணக்கைக் காட்டிவிடலாம்; அது சுலபமான காரியம் என்று நான் கருதுகிறேன்.

இந்த இடைக்காலத் தீர்ப்பின் சாராம்சத்தை, சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் தனது 12-3-97-ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து, உயர்நீதிமன்ற இடைக்கால உத்தரவின்படி செயல் அலுவலர் பொறுப்புகளைத் தாமாகவே ஏற்று (Assumed Charge) மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் செயல்பட்டு வரலாம் எனத் தெரிவித்ததால், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ந.க. எண் 75860/87 எண் 2, நாள் 14-3-97 உத்தரவின்படி, தென்னாற்காடு மாவட்டம், மணவாளநல்லூர் அருள்மிகு கொளஞ்சியப்பர் திருக்கோயிலில் முதல் நிலை செயல் அலுவலராகப் பணியாற்றும் ஞானகுரு அவர்கள் சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்திலே 20-3-97 அன்று செயல் அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார்.

மேலும் 250 பொது தீட்சிதர்களின் குடும்பங்களின் தனிப்பட்ட நலனைவிட பொது நலனைக் காப்பது முக்கியமானதென்று சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண் 7843/87, நாள் 17-2-97 தீர்ப்பில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தப் பிரச்சினையில் எந்தத் தலையீடும் செய்யவில்லை என்பதையும், நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் காரியங்கள் நடைபெற்றுள்ளன என்பதையும், இதிலே யாருக்காவது பிரச்சினை இருக்குமாயின் அவர்கள் நீதிமன்றத்தின் மூலம்தான் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இயலும் என்பதையும், உடனடியாக இதிலே அரசு எதுவும் செய்வதற்கில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி போன்றவர்கள் அவர்களுக்கு யோசனை கூறி, நீதிமன்றத்தின் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முன்வருவதற்கு அவர்களுக்கு ஆலோசனை கூற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த அளவில் இதனை நான் நிறைவு செய்கிறேன்.

(ஆ) சென்னையில் 'லெப்டோ ஸ்பைரோசிஸ்' நோய் பரவுதலைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. சென்னையில் 'லெப்டோ ஸ்பைரோசிஸ்' நோய் குடிதண்ணீர் மூலமாகப் பரவுவது குறித்து உறுப்பினர்கள் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் மற்றும் திரு. சு. சிவராஜ் ஆகியோர் மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். சுருக்கமாகப் பேச வேண்டும். ஒருவருக்குத்தான் அனுமதி. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

முற்பகல் 10-45

டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காய்ச்சலையும், மஞ்சள் காமாலையையும் மற்றும் சிறுநீரகப் பழுதையும் ஏற்படுத்தக் கூடிய 'லெப்டோ ஸ்பைரோசிஸ்' என்கிற நோய் சென்னை நகரிலே பரவி வருவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். எலிகள், பூனைகள், ஆடுகள், மாடுகள் போன்றவற்றின் சிறுநீர் மூலமாகப் பரவக்கூடிய இந்த நோய், குடிநீர் மாசுபடுவதால் பரவலாகத் தோன்றக்கூடிய வாய்ப்பு இருப்பது குறித்து அரசினுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும், திரு. சு. சிவராஜ் அவர்களும் கொண்டு வந்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பின் மீது, தமிழ்நாட்டு மக்களுடைய கவனத்தையே ஈர்க்கக்கூடிய அளவிற்கு உள்ள ஒரு நோயைப் பற்றிய விவரங்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்ததைப்போல இந்த நோய் முதலிலே, ஆடு, மாடு, நாய், பூனை, பன்றி, எலி போன்ற மிருகங்களுக்கு வந்து, இப்போது மனிதனுக்கே வரக்கூடிய ஒரு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'லெப்டோ ஸ்பைரோசிஸ்' என்ற இந்த நோய்க் கிருமி, மிருகங்கள், எலிகள் ஆகியவற்றின் உடலிலே இருக்கின்றன. இவைகளின்

புழுக்கை அல்லது சிறுநீரின் மூலம் இந்த நோய்க் கிருமிகள், சாக்கடை மற்றும் குடிநீரிலே கலந்து விடுகின்றன. இந்தக் கிருமிகள் கலந்த நீரில் நடக்கும்போதோ அல்லது குளிக்கும்போதோ உடம்பிலுள்ள சிறு காயங்களின் மூலம் அந்தக் கிருமிகள் மனித உடலிலே சென்று விடுகின்றன. அவ்வாறு சென்றபின், தடுப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்குக் காய்ச்சலுடன் இந்த நோய் முதலிலே தாக்குகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு. உடனடியாகக் காய்ச்சல், தலைவலி, குளிர்நடுக்கம், உடல் வலி, கண்கள் சிவத்தல் ஆகியவை காணப்படும். சிலருக்கு மஞ்சள் காமாலை ஏற்பட்டு சிறுநீரகம் பாதிக்கப்படும்போது இறப்பு ஏற்படுகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு ஆரம்ப நிலையிலேயே, 'ஆன்டிபயாடிக்' மருந்து கொடுத்தால் இந்த நோயினை எளிதிலே குணப்படுத்தலாம். சென்னையிலே அயனாவரம், கோடம்பாக்கம், கலைஞர் கருணாநிதி நகர், தியாகராய நகர், அண்ணா நகர், தண்டையார்பேட்டை, வண்ணாரப்பேட்டை, கொடுங்கையூர், பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் இந்த நோய் காணப்பட்டுள்ளது. மேலும், சென்னையைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளான மாதவரம், புழலேரி, மணலி, பூந்தமல்லி ஆகிய இடங்களிலும், வேலூருக்கு அருகாமையில் விருகம்பட்டு மற்றும் சேலம் நகராட்சி போன்ற பகுதிகளிலும் இந்த நோய் இருப்பது காணப்பட்டுள்ளது. இந்த நோய் கண்டவர்களுக்கு, பென்சிலின், டெட்ராசைக்ளின், மற்றும் டாக்சிசைக்ளின் போன்ற ஆன்டிபயாடிக் மருந்துகளின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு பெரு மழையின் காரணமாக ஆங்காங்கு தண்ணீர் தேங்கி சாக்கடை நீருடன் கலந்து விட்டதால் 1996 அக்டோபர் மாதம் முதல் இந்த நோய் சென்னை நகரிலும் அதைச் சுற்றியும் ஏற்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மற்றும் இதர நகராட்சிகள் தற்சமயம் எடுத்து வரும் தீவிர நடவடிக்கைகளின் மூலம் ஆங்காங்கே குவிந்துள்ள குப்பைகளை அகற்றியதால் அங்கு வாழும் எலிகள் கட்டுப்படுத்தப்பட்டு, இந்த நோய் பரவுதல் தடுக்கப்பட்டுள்ளது. தவிரவும், சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், கழிவுநீர்க் கால்வாய்களிலே ஏற்படும் அடைப்புகளை உடனுக்குடன் நீக்கியும் மற்றும் குடிநீரில் போதிய அளவு குளோரின் மருந்து கலந்தும் வருவதன் மூலம், இந்த நோய் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களில் இந்த நோய் பரவாமல் இருக்க, தேவையான தடுப்பு நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சியும், அதைச் சுற்றியுள்ள நகராட்சிகளும்,

குடிநீர் வடிகால் வாரியம் போன்றவைகளும் போர்க்கால அடிப்படையிலே எடுத்து வருகின்றன. எனவே, இந்த நோய் பற்றிய இந்தச் செய்திகளை வானொலி, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம், மக்களுக்குப் பரப்புவோமானால் மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கதர் கிராமத் தொழில் வாரியம் பாக்கித் தொகை வழங்க நடவடிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவை விதி 55-ன் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கதர் கிராமத் தொழில் வாரியம் செலுத்த வேண்டிய சுமார் ரூ. 23 லட்சம் வழங்கப்படாமல் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தேன் நிரப்பும் நிலையத்திற்கு 25-3-1997 வரையில் தேன் கொள்முதல் செய்யப்பட்டதற்கான தொகை ரூ. 23,57,241/- மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் வழங்கப்பட வேண்டியுள்ளது.

26-3--97 அன்று நாகர்கோயில் உதவி இயக்குநருக்கு (கதர் கிராமத் தொழில்) ரூ. 5.00 இலட்சம் பண மாறுதல் வழங்கப்பட்டு, மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை ரூ. 18,57,241/-ஐ விரைவில் அச்சங்கத்திற்கு வழங்க தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும். மும்பையிலுள்ள கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ரூ. 15.00 இலட்சம் மூலதனக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை இச்சங்கத்தின் வளர்ச்சிக்காக நடைமுறை மூலதனக் கடனாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-50

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கதர் கிராமத் தொழில் வாரியம் கடந்த மூன்று வருடங்களாகச் செலுத்த வேண்டிய சுமார் 23 இலட்சம் ரூபாய் என்பது கதர் கிராமத் தொழில் வாரியத்தின்கீழ் வருகின்ற பனை வெல்ல சம்மேளனம் உட்பட, வழங்கப்படாமல் உள்ளது. கடந்த மூன்று மாதங்களாக, தேன் கொள்முதல் நடைபெறுகின்றது. இந்த நேரம்தான் இந்த வருடம் முழுவதற்கும் விற்பனை செய்ய வேண்டிய தேனைக் கொள்முதல் செய்யக்கூடிய காலம். ஏற்கெனவே அவர்கள் 90 ஆயிரம் கிலோ தேனைக் கொள்முதல் செய்துள்ளார்கள். இந்த நேரத்திலே அவர்கள் இன்னும் அதிகமாக 50 ஆயிரம் கிலோ தேன் கொள்முதல் செய்திருக்க வேண்டும். போதுமான நிதி ஆதாரம் இல்லாத காரணத்தால் அந்தச் சங்கத்திலே உறுப்பினர்களாக இருக்கின்ற 1,300 நபர்களுக்கும் அந்த உற்பத்தியாளர் சங்கம் ரூ. 20 இலட்சம் பாக்கி வைத்துள்ளது. எனவே, அரசாங்கமோ அல்லது அந்தத் துறையோ செலுத்த வேண்டிய ரூ. 23 இலட்சத்தை உடனடியாகச் செலுத்துவதற்கும், மேலும் அவர்களுடைய மூலதனச் செலவுக்காக இன்னும் 20 இலட்சம் ரூபாய் கொடுக்கக்கூடிய அளவில் அதைக் கொடுக்க ஏற்பாடு செய்தால், தேன் உற்பத்தியாளர்களும், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள 6,000 குடும்பங்களும் பயனடையும் வகையில் இருக்கும் என்பதால், தேனீ

வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடன் பாக்கியையும். மூலதனச் செலவிற்காக ரூ. 20 இலட்சத்தையும் வழங்க இந்த அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தேன் நிரப்பும் நிலையத்திற்கு 25-3-1997 வரையில் தேன் கொள்முதல் செய்ததற்கான தொகை ரூ. 23,57,241/- கதர் கிராமத் தொழில் வாரியத்தால் வழங்கப்பட வேண்டியுள்ளது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நீங்கள் அந்த அறிக்கையில் உள்ளதைத் திரும்பவும் படிக்க வேண்டாம். அவர் சொன்ன கருத்துக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்கு தற்போது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், ரூபாய் 15 இலட்சம் மூலதனக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை இச்சங்கத்தின் வளர்ச்சிக்காக நடைமுறை மூலதனக் கடனாகத் தொடர்ந்து பயன்பட்டு வருகிறது. விரைவில், ரூபாய் 18 இலட்சத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவு, 1997

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[கலைஞர் மு. கருணாநிதி] [1997 ஏப்ரல் 5

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நகரியப் பகுதி மேம்பாட்டு அதிகார அமைப்புச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5 மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

கோரிக்கை எண் 4--பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்--நிருவாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 1997-98-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4--பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்--நிருவாகம், மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1997 ஏப்ரல் 5] [திரு. வே. தங்கபாண்டியன்]

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 79,32,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1664, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழகத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு விற்பனைக்கென ஏற்றுமதி செய்யப்படும் தேங்காய், கொப்பரைகளுக்கு விதிக்கப்படும் 2 சதவிகித வரியை ரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்--நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,32,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1688, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,32,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1667, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,32,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1650, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பெருந்துறை தொகுதி, ஊத்துக்குளி பகுதியிலும், ஒட்டன்சத்திரம் பகுதியிலும் சிறிய அளவில் நடைபெறும் வெண்ணெய் விற்பனைக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை ரத்துச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,32,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1652, திரு. இ. கணேசன்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'இடைப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வெள்ளையம்பாளையம் வட்டாரத்தில் புளிச்சநாற்றுக் கயிறு உற்பத்தி குடிசைத் தொழிலாக இருப்பதால், இத்தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும், இதில் ஈடுபட்டுள்ளவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஏழைகள் என்பதாலும், புளிச்சநாற்றுக் கயிற்றுக்கு மீண்டும் வரி விலக்கு அளிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,32,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2840, திரு. ஜி. கே. மணி.

திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நாரியற் பொருள்களான கற்றாழை நார் மற்றும் கயிறு, புளிச்சநாற்றுக் கயிறு ஆகியவற்றுக்கு விதிக்கப்படும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,32,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1662, திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மிதிவண்டிகளுக்கு விதிக்கப்படும் வரியை ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 79,32,68,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு அவைமுன் மாண்புமிகு உறுப்பினர்களுடைய பார்வைக்காக

வைக்கப்பட்டுள்ளன. அதிலே தமிழில் அச்சடிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதன்மீது தனது அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் இந்த மானியக் கோரிக்கையின் மீது பேச இருக்கின்றார்கள். ஆகவே, ஆளுக்கு 10 நிமிடம் என்ற அளவிலே அவர்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, திரு. என்.ஆர். அழகராஜா அவர்களை, விவாதத்தைத் துவக்கி வைக்குமாறு அழைக்கின்றேன். திரு. என். ஆர். அழகராஜா.

திரு. என். ஆர். அழகராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும், மத்திய அரசும், மாநில அரசும் நிதிநிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றபோது பொதுமக்கள் யாவரும் ஒவ்வொரு ஆண்டும் எந்தெந்தப் பொருள்களுக்கு வரி விதிப்பு அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்க்கின்ற நிலைமைகள் எல்லாம் மாறி, இன்று மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, பொருள்களுடைய விலைகளைக் குறைக்கக்கூடிய அளவிற்கு வரி விகிதங்களை மாற்றி, வரிகளைக் குறைத்திருக்கின்ற நிலைமைகளை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இன்று கிடைக்கக்கூடிய ஆண்டு வருமானத்தில் சுமார் 70 சதவிகிதம் விற்பனை வரியிலிருந்து கிடைக்கின்றது எனபதை நாம் நன்கு அறிவோம். ஆகவே தமிழக அரசு இந்த விற்பனை வரிக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய வகையில் பல சலுகைகளை அதனுடைய நிதிநிலை அறிக்கையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலமாக அறிவித்திருககிறது. வரிவிதிப்புக் கொள்கையை இங்கே முதல்வர் அவர்கள் அறிவிக்கிறபோது, நீண்டகாலக் கொள்கை ஒன்றினை அறிவித்திருக்கிறார்கள். எல்லா சமுதாயத்தினரும், தொழில் முனைவோரும் பாராட்டத்தக்க வகையில் விற்பனை வரியில்

@ 357 முதல் 379 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

மாற்றங்களைச் செய்வது பற்றி ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. சி. தங்கராசு அவர்கள் தலைமையில், இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, கிட்டத்தட்ட 7 பேர் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறார்கள்.

விற்பனை வரிச் சட்டங்களில் பல மாற்றங்களைச் செய்வதற்கும், அதிலே இருக்கக்கூடிய படிவங்களை மாற்றம் செய்வதற்கும், விற்பனை வரி மூலமாக, அதிகாரிகளுடைய செயல்பாடுகள் பலவற்றை ஆய்வு செய்வதற்கும் இந்தக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு ஆய்வு செய்து, தமிழக அரசுக்கு அறிக்கைகள் தரக்கூடிய அளவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்து, அதைச் செயல்படுத்தி இருக்கிறார்கள். இவைகளை எல்லாம் மக்கள் பாராட்டக்கூடிய இந்த நிலையில், இங்கே நான் ஒரு சில கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன்.

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை வரிப் பட்டியலில் உள்ள பொருள்களுக்கு சரியான விளக்கங்கள் இல்லை என்பதை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்கு எலக்ட்ரானிக் பொருட்களை எடுத்துக்கொள்வோம் என்றால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்கின்றபோது, எலக்ட்ரானிக் ஸ்பேர் பார்ட்ஸ் பொருட்களுக்கு விற்பனை வரி 2 சதவிகிதம் குறைத்திருக்கின்றார்கள். ஆனால் எலக்ட்ரானிக் ஸ்பேர் பார்ட்ஸ் என்பது பல்வேறு விதமான உபயோகத்திற்குப் பயன்படுத்தப்பட வாய்ப்புண்டு. எலக்ட்ரானிக் சர்க்கியூட், எலக்ட்ரானிக் போர்டு, எலக்ட்ரானிக் டிரான்சிஸ்டர்ஸ் இவைகளை எல்லாம் கணிப்பொறியிலே, கம்ப்யூட்டரிலே மட்டும்தான் பொருத்துவது என்று எடுத்துக்கொள்ள முடியாது. இன்று இருக்கக்கூடிய பல்வேறு ஆட்டோமொபைல் தொழிற்சாலைகளில் அல்லது மின் மோட்டார்களை இயக்கக்கூடிய ஸ்டார்ட்டர்கள், வானொலிப் பெட்டிகள் போன்ற பல்வேறு பொருட்களுக்கு அவைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. ஆனால் கணிப்பொறிகளிலே பொருத்துகிற ஸ்பேர் பார்ட்ஸ் பொருட்களுக்கு மட்டும்தான் அந்த விற்பனை வரி 2 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது. பொருள்களில் விளக்கம் இல்லாததால், வியாபாரிகள், எவை எவைகளுக்காக ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குகிறார்கள், எந்தெந்தப் பொருட்களுக்கு வரி விதிக்க வேண்டுமென்று தீர்மானிக்க முடியாமல் அவர்கள் தடுமாறக்கூடிய

நிலை இருக்கிறது. ஆகவே அவைகளை ஆராய்ந்து, சரியான விளக்கங்கள் அளிக்கக்கூடிய வகையிலே செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஓய்வு பெற்ற அரசு அதிகாரி திரு. சி. தங்கராசு அவர்கள் தலைமையிலே ஒரு கமிட்டி அமைத்திருக்கிறீர்கள். பாராட்டக்கூடிய ஒன்றுதான். அதிலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், குழுவின் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆனால், அந்தக் கமிட்டி எந்த வகையில் பரிசீலனை செய்தது; அந்தக் கமிட்டியினுடைய பரிந்துரைகள் என்ன என்பது சட்டமன்றத்தில் வைக்கப்படவில்லை. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அவைகளை எல்லாம் சட்டமன்றத்தில் வைத்தால்தான், அவைகளைப் படித்துப் பார்த்து, எவைகளை அரசு எடுத்துக் கொள்கிறது; எவைகள் அரசின் பரிசீலனையில் இருக்கிறது; எவைகளை அரசு அமல்படுத்த முடியாமல் இருக்கிறது என்பதை நாம் பார்க்க முடியும். இதை என்னவோ பெரிய சிதம்பர ரகசியமாக வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள் என்றுதான் கருதுகிறேன். சிதம்பர ரகசியமே வெளியிலே வந்து விடுகிறது. ஆனால், சிவகாசி ரகசியமாக இதை எடுத்துக்கொண்டு, இதை வெளியே வரவிடாமல் செய்து இருக்கிறார்கள் என்று நான் கருதுகின்றேன். ஆகவே, இந்த சிவகாசி ரகசியத்தையும் உடனடியாக அரசு சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-00

பல பொருள்களுக்கு விற்பனை வரிகளைக் குறைக்க வேண்டும் என்று பல வியாபாரிகள் கூறுவது உண்டு. ஆனால், குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், போடி, தேவாரம், விருதுநகர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய ஏலக்காய் வியாபாரிகள் வெளி மாநிலங்களில், குறிப்பாக கேரளாவிலே ஏலக்காயை விலைக்கு வாங்கி--90 சதவீதம் அங்கேதான் அது விளைகிறது-- அங்கே இருந்து அதைக் கொண்டுவந்து, போடி, தேவாரம், விருதுநகர் ஆகிய பகுதிகளிலே பல்வேறு விதமாக தரப்படுத்தி, சார்ட் அவுட் செய்து, ஒவ்வொரு பொருளுக்கும்-- அதாவது அங்கே ஒரு கிலோவுக்கு 300 ரூபாய் கொடுத்து வாங்குகிறார்கள் என்று சொன்னால், அதைத் தரம் பிரித்து, ஒருசில பொருட்களை 350 ரூபாய்க்கும், மற்றவற்றை 300 ரூபாய்க்கும், 250 ரூபாய்க்கும், 200

ரூபாய்க்கும் என்று வெளி மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால், இதை எல்லாம் அனுப்புவதற்கு அவர்கள் சி.எஸ்.டி. கட்ட வேண்டியது இல்லை. ஏற்கெனவே, கேரளாவிலே 4 சதவீத விற்பனை வரி கட்டிவிட்டுக் கொண்டு வந்து விடுகிறார்கள். ஆனால், இங்கே தரம் பிரித்து விற்கின்றபோது, கணக்குகளை முடிக்கின்றபோது அவர்களுக்குப் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு ஒரு சதவீத வரி போட்டாவது எங்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவிடுங்கள் என்று சொல்கின்றார்கள். இதனால் ஆண்டுக்கு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வரக்கூடிய வழி இருக்கிறது. ஆகவே, அரசு இதைப் பரிசீலனை செய்து உடனடியாக அவர்களுக்கு விற்பனை வரியைப் போட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, வீட்டு உபயோகப் பொருள்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று அரசு கருதுகிறது. ஆனால், அந்த வீட்டு உபயோகப் பொருள்களிலே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கையினால் செய்யப்படுகின்ற செங்கல்--அதற்கு 4 சதவீத வரி உண்டு. சேம்பர் பிரிக்ஸுக்குப் போடுவது என்பது வேறு. சிறிய, சிறிய கிராமங்களிலேகூட சிறிய முதலீடு செய்து அங்கே செங்கற்களை உற்பத்தி செய்து அவர்கள் வீடுகளுக்கு உபயோகப்படுத்துகின்றபோது 4 சதவீத வரி கட்ட வேண்டி இருக்கிறது. இது கடந்த கால அரசிலே போடப்பட்ட நிலை. அவைகளை மாற்றி, சிறிய தொழிலை செய்யக்கூடிய செங்கல் தயாரிப்பாளர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

அதேபோன்று அவர்கள் பக்கத்தில் இருக்கக்கூடிய குளங்களிலே இருந்து வண்டலை எடுத்துக்கொண்டு வந்து செங்கற்களைச் செய்கின்றார்கள். அதை அந்தக் குளங்களிலே இருந்து எடுத்து வருகின்றபோது சட்டப்பூர்வமாகக் கொண்டுவந்து அவர்கள் செய்யவில்லை என்று கூறி, அரசு அதிகாரிகள் அதை நிறுத்தி, கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய் அளவிற்கு அவர்களுக்கு தண்டனை வரி விதிக்கக்கூடிய அளவிலே இருக்கிறது. ஆகவே, அரசு அதைக் கவனித்து, அதைக் குறைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல வீடுகளுக்கு உபயோகப்படுத்துகின்ற மொசைக், மார்பிள், மொசைக் டைல்ஸ் ஆகியவை காஸ்ட்லியான பொருட்கள். அவற்றிற்கு 20% வரி விதிக்க வேண்டியது இருப்பினும் அதைக் குறைக்க வேண்டும்; அது ஒரு பக்கமாக இருந்தாலும்கூட, சாதாரணமாக சிறிய, சிறிய அளவிலே மொசைக் இண்டஸ்ட்ரீஸ் வைத்து இருக்கின்றார்கள். அது சிறிய தொழில். சிறிய தொழில் மூலமாக செய்யப்படுகின்ற மொசைக்குக்கும் 20 சதவீத வரி என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. ஆகவே அந்த 20 சதவீத வரியைக் குறைத்து, 5 சதவீத அளவிற்காவது அவைகளைக் கொண்டுவர வேண்டுமாய் நான் இங்கே மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றேன்.

பொள்ளாச்சியில் மிளகாய் வத்தல் வியாபாரம் மிகவும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல ஊர்களுக்குச் சென்று அந்த வத்தலை வாங்கிவந்து அவர்கள் ஊரில் தரம் பிரித்து, குறிப்பாக கேரளாவுக்கு அனுப்பி வருகின்ற ஒரு வியாபாரத் தொழில் அது. கிட்டத்தட்ட 4 ஆயிரம், 5 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பினைத் தந்து கொண்டிருக்கக்கூடிய தொழில் அது. அங்கே இருந்து அவர்கள் அதை கேரளாவுக்கு அனுப்புகின்றபோது, அங்கு இருக்கக்கூடிய வியாபாரிகள் அதை வாங்கி, அங்கே இருக்கக்கூடிய விலைக்கு ஏற்றவாறு விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கணக்குகளை முடிக்கின்றபோது என்ன ஏற்படுகிறது என்று சொன்னால், ஃபார்ம்-24-ஐ அவர்கள் கொடுத்து கிட்டத்தட்ட கணக்குகளை முடித்து வந்தார்கள்; இது பல ஆண்டுகளாக நடைபெற்று வந்த ஒரு நியதி. ஆனால், கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்ற ஒரு சிறிய பிரச்சினையின் காரணமாக, 1992-93-ஆம் ஆண்டிலே இருந்து, அவர்கள் இந்த ஃபார்மைக் கொடுக்கவில்லை என்ற காரணத்தைக் காட்டி, அவர்களுக்கு அதிகமான வரி விதிப்பை, கிட்டத்தட்ட டர்ன்-ஓவரில் 10 சதவீதம், அந்த 10 சதவீதத்துக்கும் மேலாக 150 சதவீதம் அபராதம் வருகிறது. ஆகவே இவைகள் வாங்கமுடியாத அளவுக்கு அவர்களுக்கு இருக்கிறது. இப்போது நடைபெறுகின்ற வியாபாரத்திற்கு அவர்கள் 'ஃபார்ம்-எப்' கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு முன்னாலே, ஆறாண்டுகளுக்கு முன்னாலே செய்யப்பட்ட வியாபாரத்திற்கு இப்போது 'Form-F' வாங்குவது மிகவும் சிரமம். ஆகவே அவைகளை அரசு கவனத்தில் கொள்ளவேண்டும். தற்சமயம் கடந்த 1992-ஆம் ஆண்டில் இருந்து 1995-ஆம் ஆண்டு வரையிலும்

மூன்றாண்டுகளுக்கு 'Form-F' வாங்கிக் கொடுத்துவிட்டார்கள். கொடுக்கமுடியாத ஒரு சில வியாபாரிகளின் நிலைமைகளை நீங்கள் கருத்தில்கொண்டு அவர்களுக்கு வரிவிலக்கு அளித்து அவர்களுடைய சிரமத்தைத் தவிர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

லாடம், லாட ஆணி இவைகளுக்கு சாதாரணமாக வரிவிலக்கு உண்டு. இந்த ஆண்டு அவைகளை அடிசரக்கு என்ற வகையில் சேர்த்து, அதற்கு வரி 8 சதவீதம் என்று போடக்கூடிய அளவுக்கு இருக்கிறது. லாடம், ஆணி போன்றவைகள் சிறிய பொருட்கள். சாதாரண கிராம மக்கள் பயன்படுத்துகின்ற பொருட்கள். ஆகவே அவைகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, பேப்பர். தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய பேப்பர்களை பேப்பர் தொழிற்சாலைகளில் இருந்து வாங்கி அவர்கள் நோட்டுப் புத்தகங்களாகத் தயார் செய்கிறார்கள். அந்த நோட்டுப் புத்தகங்களை அவர்கள் விற்கிறபோது அவர்களுக்கு வரி கிடையாது. ஆனால் வெளிமாநிலங்களுக்கு, குறிப்பாக, கேரளா போன்ற மாநிலங்களுக்கு அவர்கள் அதை அனுப்புகிறபோது வரி கிடையாது. ஆனால் இன்றைக்கு அதற்கு 4 சதவீத சி.எஸ்.டி. போடப்பட்டிருக்கிறது. இவைகளை ஏன் சொல்கிறேன் என்றால், அந்த மாநிலங்களிலே வாங்கி அவர்கள் நோட்டுப் புத்தகங்கள் தயார் செய்து விற்கிறபோது வரி கிடையாது. இங்கேயிருந்து அனுப்புகிறபோது அவர்களுக்கு 4 சதவீத வரி. அதில் அதிகமான விற்பனைப் போட்டி இருக்கின்ற காரணத்தால், இவைகளைக் குறைக்க வேண்டும். ஏனென்றால், வெளிமாநிலங்களிலிருந்து வாங்கக்கூடிய பேப்பர்களை வாங்கி, 4 சதவீத வரி கட்டாமல் இங்கே தயார் செய்து விற்கின்றபோது அதற்கு வேண்டுமானால் நீங்கள் விற்பனை வரி போடலாம். இங்கே 4 சதவீத வரி கட்டி வாங்கி அதைத் தயார் செய்து வெளிமாநிலங்களுக்கு அனுப்பும்போது, அதற்கு மீண்டும் ஒரு வரியைச் செலுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை ஆராய்ந்து இவைகளுக்கு உடனடியாக வரியை ரத்துச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

பிளாஸ்டிக் பொருட்களுக்கு விற்பனை வரி உண்டு. புதிதாகச் செய்யக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கு விற்பனை வரி செலுத்த

வேண்டியதுதான். ஆனால் பிளாஸ்டிக் பொருட்களை வீடுகளிலோ ஃபேக்டரிகளிலோ உபயோகப்படுத்தியபின், ஸ்கிராப்பாக இருக்கிறபோது, அந்த ஸ்கிராப்புக்கு 8 சதவீத வரி இருப்பது என்பது நியாயமாக இருக்காது. அதைக் குறைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு முக்கியமான விஷயம். பஞ்சு வாங்குகிறபோது கிட்டத்தட்ட 90 சதவீதம் டெக்ஸ்டைல் மில்களில்தான் வாங்குகிறார்கள். அதற்கு 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக வரியைக் குறைத்திருக்கிறீர்கள். ஆனால் அந்த 2 சதவீத வரியைக் கொடுத்து வாங்கி நூற்பாலையிலேயே பல பிரிவுகளாகத் தயார் செய்து, பின்னர் அதிலே வேஸ்ட் காட்டனாக வரக்கூடிய பஞ்சுக்கு 8 சதவீத வரி இருக்கிறது. இது எந்தவகையிலேயும் நியாயம் கிடையாது. நல்ல பஞ்சுக்கு 2 சதவீதம், வேஸ்ட் காட்டனுக்கு 8 சதவீதம் வரி. யாருமே ஒப்புக்கொள்ளமுடியாத ஒன்று இது. ஆகவே இவைகளைக் குறைக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) விவசாய உற்பத்திப் பொருட்கள். குறிப்பாக மஞ்சள், பருத்தி போன்ற, விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விற்பனை வரியைக் குறைக்கவேண்டும். அதேபோன்று 11 சதவீதமாக இருக்கக்கூடிய ரசாயனப் பொருட்கள் மீதான வரி. அதாவது காஸ்டிக் சோடா, சோடா ஆஷ், அசிடிக் ஆசிட் இவைகளுக்கு எல்லாம் 11 சதவீத வரி போடப்பட்டிருக்கிறது. வெளிமாநிலங்களில் இவைகளுக்கு 4 சதவீதம் வரிதான். ஆகவே இங்கேயிருந்து வாங்கக்கூடிய, இங்கே தயார் செய்யப்படுகின்ற பொருட்கள், வெளிமாநிலங்களில் விற்கக்கூடிய அளவுக்கு இங்கே முடியவில்லை. ஆகவே 11 சதவீதத்திலிருந்து குறைக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): அடுத்து, திரு. என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.

THIRU N.S. RAJKUMAR MANDRADIAR: Respected Chairman, Sir, At the outset, I thank your goodself for having given me this opportunity to air my views on Demand No. 4 - Tamil Nadu General Sales Tax and other taxes and Duties Administration for the year 1997-98. I also thank my esteemed leader, the Hon. Chief Minister Dr. Kalaignar avargal and the voters of my Kangeyam constituency who have made this possible for me.

Even during the last year's Budget, the Hon. Chief Minister had announced a long-term taxation policy for fostering a stable, clear and friendly taxation environment, for stimulating industrial growth and commerce in Tamil Nadu. As a follow-up measure, the Sales Tax Reforms Committee was constituted in which I had the pleasure to serve as a Member along with distinguished personalities such as the hon. Fellow Member of the Assembly, Thiru Chokkar.

In the course of this exercise, I had the opportunity to interact, discuss and deliberate on the various problems faced by both the trading community and the tax authorities. This has prepared me well to understand the ground realities to be able to put forward before the esteemed Members of this august House, my following views. There are many issues to discuss, but considering the time, I wish to speak on only a few.

முற்பகல் 11-10

One of the noteworthy features of the State Government Budget for 1997-98 is the exemption from Sales Tax given to all raw materials purchased within the State by 100% Export Oriented Units and Units located in the Madras Export Processing Zone. This is commendable. But this export promotion measure would not achieve the purpose in full if the Industries other than E.O.Us which are situated outside the Export Processing Zone are not extended this benefit. This should be reviewed.

The other matter to be considered is the tax incidence on the premium received on the sale of REP Licences and Exim Scrips, which are given as export incentives by the Central Government. My plea is that the beneficiary exporter, who is the first seller of such licences should not be taxed, since he uses this to offer competitive prices in the international market, resuting in more exports and the gains to the country.

Our respected Chief Minister and the Minister for Industry, Government of India, Hon'ble Thiru Murasoli Maran are leaving no stone unturned to put Tamil Nadu in the top spot of the industrial map of India.

It is an extension of this thinking that makes me appeal, on behalf of the Exporters from Tamil nadu, that the above mentioned requests may please be conceded, in the interest of the export trade of this State.

It will be interesting to note that States like Gujarat, Andhra Pradesh, Madhya Pradesh, Uttar Pradesh, Rajasthan, Orissa, Punjab, Haryana, Delhi and West Bengal do not levy sales tax on the transfer of REP Licences and Exim Scrips.

However, I am very much in favour of levying sales tax on the premium received by the second and subsequent sellers of these R.E.P. Licences/Exim Scrips because the traders, who buy these licences from the original exporters, indulge in such sales only for profit through speculation.

As the President of a Primary Milk Producers' Co-operative Society, it will not be out of place for me to discuss the matter of sales tax on cattle feed.

The Hon. Chief Minister in his latest Budget speech has clearly spelt out that cattle feed is exempt from sales tax. When the farming community was applauding and appreciating the Government for having granted their long term demand, due to non-deletion of the entry in Item 12 of Part 'B' of I Schedule consequent to this announcement, the tax authorities contend that the present Budget gives exemption only to items such as Hay, Husk, Straw and Rice Bran which, in any case, have not been taxed so far.

I wonder how tax exemption can be extended to items which are already not taxed. Therefore, to give effect to the Hon. Chief Minister's good intention of helping the farming community, it is only proper that cattle feed (compounds) should be removed from the entry under Item 12, in the I Schedule under Part 'B' leaving FEED SUPPLEMENTS and CONCENTRATES untouched, and that too only if need be. This will then put cattle feed on par with poultry feed and fish meal which are also compounds that are not taxed at present.

I now move on to the taxes imposed on the edible oil industry in general and the coconut industry in particular. As the hon. members of this House will be aware, about 75% of the cocount oil produced in the State is processed in my Kangeyam constituency, in Periyar District. The coconut processing industry in Kangeyam employs more than 30,000 people either directly or indirectly. Tamil Nadu is the largest producer of coconut, though the largest acreage cultivated is in Kerala. Therefore, we need to take care of this industry which has very good potential.

முற்பகல் 11-15

It is my considered opinion that there is a heavy tax evasion in the Oil Industry as such. This is because of the higher rates of taxes in this State as compared to the taxes charged in the neighbouring States. I sincerely feel that if the tax on Oil, Oil seeds and Cakes are brought down to 1% flat, the tax revenue will increase considerably since the need to spend 1 to 1½% as incidental expenses which they are now incurring will not be any more necessary. I appeal to the Hon. Chief Minister to kindly concede this justified request. If need be, this tax reduction measure can be reviewed after, say, six months as proposed in the case of Cotton, Zari, Man-made yarn and Fibre. In case the anticipated additional sales tax revenue does not materialise, status quo ante can be restored. For any reason should this proposal be not acceptable, I have yet another suggestion to make. Copra which has now been taxed at 2% both for internal and inter-State sales, should be made available tax-free to the crushers in Tamil Nadu which will reduce the present 3½% difference in the tax structure between Kerala and Tamil nadu in Kerala's favour, to 1½%. This will give a big boost to the Tamil Nadu Coconut Industry. However, this concession should be made subject to the condition that the outputs—that is Oil-65% yield and the Cake-33% yield should match the tax-free input of Copra, which will be taxed at the existing rate. This thinking may be extended to the other edible oil Industries also. I feel that this is yet another way of bringing in more people voluntarily into the tax net.

As it is, the Handloom Sector is facing a major crisis. For how long rebate on sales will continue is a question which every genuine weaver

is asking these days. This industry is also facing threat from the power loom Industry which has made inroads into the items reserved exclusively for the handloom sector. Under the circumstances, the issue of taxing goods made up from handloom cloth like Pillow covers, could necessarily and should necessarily be reviewed and exempted from sales tax.

Consignment Sales is another big problem. Today every dealer big or small, in Tamil Nadu, who is doing consignment sales is a much worried and harassed person. This is because the dealers' claims that these transactions are consignment sales are not being accepted by the authorities, though they produce Form 'F' evidencing movement of goods outside the State Agency Agreement and the agent's sale 'pattials' for sales outside the State which is the practice throughout India. But in Tamil Nadu, the Department is insisting on a lot more details based on a circular of the Special Commissioner and Commissioner for Commercial Taxes in Acts Cell III/124278/94, dated 23-12-94. Whereas the Madras High Court in its Judgement in 96 STC 98-A. Dhandapani *Vs.* State of Tamil Nadu, has held.

(i) That Sec. 6A of the CST Act, 1956 is optional and that if the dealer chooses to file Form 'F' declaration, the authority should consider the truth of the particulars contained in this Form 'F' declaration.

(ii) That the authority can only call for information which is relevant to consider the declaration in Form 'F' and the particulars contained therein.

(iii) That Rule 4 (3A) of the CST (Tamil Nadu) Rules, 1957 is only directory and not mandatory and therefore, cannot be insisted upon.

In fact, copies of the bills issued by the agent outside the State cannot be required to be produced.

Despite the clear ruling, the confusion has arisen because in Rule 4 (3A) of the CST (Tamil Nadu) Rules, 1957, the word 'shall' is used instead of the word 'may' and also because in Rule 4 (3A) (d) of the CST (Tamil Nadu) Rules, 1957, it is required to produce the copy of the bills issued by the agents, which is in addition to the sales pattial already being submitted. I do agree that of late a few big companies have wronged in this matter. This should not be taken as a criterion to judge others.

Our Government which is well known for upholding democratic rights and fairness, I am sure, agrees with my view that all traders are honest unless proved otherwise. Unnecessary and unwarranted harassments will only mar the excellent reputation of the trader and consumer- friendly Government. Therefore, I appeal to the Hon. Chief Minister and the Minister for Commercial Taxes to kindly direct the authorities to view the matter in the proper perspective and clear all pending assessments which have been held up causing great inconvenience to the traders especially to the Chilly traders in Pollachi, only because of wrong interpretation.

My observations are but a small contribution to the tireless efforts put in by our beloved leader to rationalise the tax structure for providing greater transparency of tax rates and simplification in collection. Where there is a will, which our revered leader has in abundance, there is a way. Under his able leadership, I have not an iota of doubt that our State will make rapid progress and grow in all directions. This is truly a golden rule. We are blessed. Thank you.

முற்பகல் 11-20

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. எஸ். எஸ். பொன்முடி.

திரு. எஸ். எஸ். பொன்முடி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பல்லடம் தொகுதி மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் இந்த மாமன்றத்தில் நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த எனது தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பல்லடம் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து வணிக வரி மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அனைத்துத் துறை மக்களின் எதிர்பார்ப்புகளையெல்லாம் நிறைவு செய்கின்ற வகையில் ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். சரித்திரக் கதைகளில் கூறுவதுபோல, குசேலர் தன்னுடைய வறுமையையும், கஷ்டங்களையும் கண்ணனிடம் எடுத்துக் கூறிவிட்டு வீடு திரும்புவதற்குள் அவனுடைய குறைகள் தீர்க்கப்பட்டு,

செல்வம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. அதேபோல, இன்றைய அனைத்துத் துறை சான்றோர்களும் எதிர்பார்த்த தேவைகளையெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் மனநிறைவாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவு செய்திருக்கிறார்கள். குறிப்பாக நமது மாநிலத்தின் வேளாண்மை, தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் சிரமைப்புக் குழுவின் அறிக்கையைப் பரிசீலித்து வணிக வரியில் தேவையான மாற்றங்களையெல்லாம் செய்திருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில், நிதிநிலை அறிக்கையில் பல வரிகள் அறிவிக்கப்பட்டு, அவை மானியக் கோரிக்கையில் விவாதத்திற்கு வருவதற்கு முன்பே பேரம் பேசப்பட்டு, அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானங்கள் எல்லாம் அவரவர்கள் சொந்த கஜானாவிற்குச் சென்று வரி மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால் இன்று மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மீது வரிக் குறைப்பு செய்யப்பட்டு மக்கள் நலன் காக்கப்பட்டு இருக்கிறது. மக்கள் நலன் பாதிக்கப்படாதவண்ணம் சில இனங்களின்மீது வரி விதித்து அரசின் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் துணி, நூல், இயந்திர உதிரிப் பாகங்கள், மருந்துகள், இரசாயனப் பொருள்கள் மற்றும் பல பொருள்கள் தமிழகத்தில் மட்டும் விற்பனை செய்யப்படவில்லை. அனைத்து வெளி மாநிலங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர்களும் இதை வலியுறுத்திக் கூறினார்கள். அதாவது, அனைத்துப் பொருட்களும் பல ஆண்டு காலமாக 'கன்சைன்மென்ட் சேல்ஸ்' என்ற முறையில் விற்பனை செய்யப்பட்டு, இது நாள் வரையில் அது கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதற்குப் பல விதிமுறைகள் உண்டு.

நமது அரசு வந்ததற்குப் பின்பு, அரசு அதிகாரிகள் கடந்த கால பழைய கணக்குகளை எல்லாம் ஆய்வு செய்து இன்று 150 சதவீதம் அபராதத்தை விதிக்கிற சூழ்நிலையை உருவாக்கி வருகிறார்கள். எதற்காக அவர்கள் இப்படிச் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. கடந்த காலத்திலே கணக்குகளை சரிபார்க்கிறபோதே அந்தத் தவறுகளையெல்லாம் கண்டுபிடித்து இருக்க வேண்டும். ஆனால் இப்போது பழைய கணக்குகளையெல்லாம் ஆய்வு செய்வதற்காக எடுத்து, அரசின்மீது அநியாயமாகக் குறைபாடுகள் வருகின்ற அளவுக்கான அவர்களுடைய செயல்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டும்.

அந்த வகையில், பல்லடம் தொகுதியிலுள்ள 150 சிறு நூற்பாளர்களுடைய நிலை இன்று மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அவர்களுடைய குறைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். பல்லடம் தொகுதியானது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1990-ஆம் ஆண்டு பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னால் வந்த அரசின் லஞ்ச லாவண்ய முறையின் காரணமாக எந்தவொரு சிறு தொழிலும் அங்கு வளர முடியாது போய்விட்டது. குறிப்பிட்ட, எல்.எம்.டபிள்யூ. போன்ற ஓரிரண்டு பெரிய தொழிற்சாலைகள் வந்ததன் காரணமாகவும், பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்ட காலவரையறை முடிந்ததன் காரணமாகவும், மீண்டும் அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும், இந்த நேரத்தில் அந்த சிறு தொழில்கள் எல்லாம் மீண்டும் தொடங்கப்படவும், அவர்களுக்கு எல்லாம் பின்தங்கிய பகுதிகளுக்கு உண்டான அனைத்து சலுகைகள் கொடுக்கப்படாவிட்டாலும்கூட, பரவாயில்லை. குறிப்பிட்ட வணிக வரிச் சலுகையாவது கொடுத்து, அல்லது வணிக வரியை காலம் தாழ்த்தி செலுத்துகின்ற சலுகையாவது கொடுத்து, அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் மீண்டும் துவங்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-25

பல்லடம் தொகுதியில் அமைந்துள்ள சூளூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள சோமனூர் பகுதியில் நொய்யலாற்றின்மீது பாலம் கட்டுவதன் மூலமும், சோமனூரிலிருந்து மங்கலம் வழியாக திருப்பூர் செல்லும் சாலையை இருவழிச் சாலையாக மாற்றுவதன் மூலமும், அந்தப் பகுதியில் தொழிலும் வணிகமும் அதிகமாக பெருகுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணம்பாளையத்தில் வேளாண்மைப் பொறியியல் மாதிரிப் பண்ணை அமைக்க அனுமதி அளித்த வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தற்போது வறட்சியைச் சமாளிக்க பல்லடம் தொகுதியில் உள்ள அனைத்து குட்டைகளை நிரப்பிக் கொடுத்த-பி.ஏ.பி. தண்ணீர் விட்டு நிரப்பிக் கொடுத்த-மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும், அதற்கு உறுதுணையாக இருந்த நமது வனத்துறை அமைச்சர் அவர்களுக்கும்,

பல்லடம் தொகுதி மக்களின் பல ஆண்டுகால வேண்டுதலான பாண்டியார்-புன்னம்புழா திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்து, இந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் வரி வருமானத்தில் ஏறத்தாழ 70 சதமானத்தை வசூலிக்கின்ற மிக முக்கியமான இந்தத் துறையின்மீது இரண்டொரு விஷயங்களை மாநில அரசின் கவனத்தினை ஈர்ப்பதற்காகச் சொல்லி, என் கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

குறிப்பாக, வணிக வரித் துறையைப் பொறுத்தவரையிலும் வரி விதிப்புக் கொள்கை, மாநில அரசினுடைய வரி விதிப்புக் கொள்கை என்ன என்பது பற்றிச் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த மாநிலத்தில் உற்பத்தி செய்யும் தொழில் துறைகளுக்கு ஊக்கம் அளிக்கின்ற முறையிலேயும் உள்ளூர்த் தயாரிப்புகள் மேலும் வலுவான முறையில் வேரூன்றி வளர்வதற்குரிய முறையிலும் புதிய வரி விதிப்புக் கொள்கை உருவாக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் நான் குறிப்பிட விரும்புவது, திருப்பூர் பனியன் தொழிலைப் பொறுத்தவரையிலும் தொடர்ந்து வலியுறுத்தியதற்குப் பின்னர், கடந்த பட்ஜெட்டில் 4 சதவீதமாக இருந்த வரி ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பது, மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்க விஷயம் என்றாலும், பனியன் தொழிலைப் பொறுத்தவரையிலும் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வந்த விஷயம் விலக்கு அளிக்கப்பட்ட ஒன்றாக பனியன் உற்பத்தி உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான். ஆனால் முற்றிலும் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படாமல் 1 சதவீத வரி விதிக்கப்பட்டிருக்கிறது. நான் இந்த இடத்தில் நம்முடைய வணிக வரித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாநில அரசுக்கும் முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, வரி விதிப்புக் கொள்கையில் மாநில அரசு சொல்லி வந்த விஷயங்களுக்கு நேர் எதிரான முறையிலேதான் பனியன் தொழில்மீது 1 சதவீதம் வரி இன்றைக்கும் நிலுவையில் இருக்கிறது என்பதைத்தான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே திருப்பூர் பனியன் தொழில் என்றால், தமிழ்நாட்டின் பனியன் தொழில், தமிழ்நாட்டின் உற்பத்தி, அத்தகைய திருப்பூர் பனியன் தொழிலுக்கு மிக முக்கிய போட்டியாளர் இந்திய அளவில் கல்கத்தாவினர்தான். கல்கத்தாவில் பனியன் துணி உற்பத்தி செய்வதற்குரிய மூலப் பொருளான நூலுக்கு எந்த வரியும் இல்லை. அந்த மூலப் பொருளான நூலிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற பனியன் விற்பனைக்கும் வரியில்லை. இன்னும் தெளிவாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், கல்கத்தாவிலே 100 ரூபாயில் பனியன் தயாரிக்கப்படுகிறது என்றால் அதே பனியன் தமிழ்நாட்டில் 108 ரூபாய் கொடுத்தால்தான் தயாரிக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. இப்போது 3 சதவீதம் குறைக்கப்பட்டு இருக்கிறது. அதனால் 105 என்று ஆகியிருக்கிறது. ஏன் என்றால் நூல் மீது வரி இருக்கிறது. மாநில அரசு இந்த விஷயத்தில் தயவு செய்து கவனிக்க வேண்டும். எங்கிருந்தாலும் முதலமைச்சர் அவர்கள் கவனிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஏன் என்றால், கல்கத்தாவில் நூலுக்கும் வரியில்லை, பனியனுக்கும் வரியில்லை. தமிழ்நாட்டிலே மட்டும் வரி போடுவது எப்படி நியாயமாகும் என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே, முற்றிலும் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட தொழிலாக பனியன் தொழில் அறிவிக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், அரசுத் துறையிலே 2 வகை உண்டு. ஒன்று துறைகளால் அதிகாரிகள் வளர்ந்துவிடுவார்கள். துறைகளால் அதிகாரிகள் வளர்வது அதிகாரிகளால் துறை வளர்வது என்ற இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. இதில் இந்த வணிக வரியைப். பொறுத்தவரையிலும் நான் மேல் மட்டத்தில் இருக்கிற உயர் மட்ட அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. திறமை வாய்ந்த, நேர்மை நிறைந்த அதிகாரிகள் நிரம்ப மேல் மட்டத்தில் இருக்கிறார்கள், இந்த வணிக வரித் துறையைப் பொறுத்தவரையிலேயும். ஆனால் அவர்களின் நேர்மைக்கும், திறமைக்கும் பொருத்தமானவர்களாக கீழ் மட்டத்தில் இல்லை என்பது வேதனைக்குரிய ஒரு விஷயமாகும்.

முற்பகல் 11-30

பனியன் தொழிலைப் பொறுத்தவரையிலும் ஒரு சத வரி இருப்பது என்பது கீழ் மட்டங்களில் இருக்கக்கூடிய விற்பனை வரி

அதிகாரிகளின் வேட்டைக்கு, கடுமையான நெருக்கடிக்கு பனியன் முதலாளிகள், உற்பத்தியாளர்கள் ஆளாவார்கள். எனவே உற்பத்தியாளர்கள் அவர்களுடைய தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்கும், கல்கத்தாவோடு போட்டியிடுவதிலிருந்து பின்தங்கியிருப்பதற்கு ஊக்கம் அளிக்கின்ற முறையிலேயும், இந்த ஒரு சதமான வரியை எடுத்து, முற்றிலும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் நம்முடைய மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் கௌடில்யர் அவர்கள் சொல்வாராம். அதாவது தண்ணீருக்கு உள்ளே இருக்கிற மீன் எவ்வளவு தண்ணீர் குடித்தது என்று சொல்ல முடியாது. சொல்வது எவ்வளவு கடினமானதோ, அதுபோல் அரசாங்கக் கருவூலங்களின் பணியில் ஈடுபடுகிற அதிகாரிகள் எவ்வளவு கையாடுகிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதும் கஷ்டமானது. அந்த மாதிரி இப்போது வணிகவரித் துறையில் கீழ் மட்டங்களில் இருக்கிற அதிகாரிகள் முழுக்க முழுக்க இந்த வரிக் கொள்கையைப் பயன்படுத்தி முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதும் ஒரு அம்சம். எனவே இந்த இரட்டைத் தன்மை இருப்பதை கவனத்தில் கொண்டு கட்டாயமாக இந்த ஒரு சதவீதத்தையும் நீக்கி முற்றிலும் பனியன் தொழிலுக்கு விலக்கு அளிக்கப்பட்டதாக மாநில அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு விஷயம், நெய். நெய்யைப் பற்றி என்னைக் காட்டிலும் நம்முடைய சொக்கர் போன்றவர்கள் நன்றாக அறிவார்கள். நெய்யைப் பொறுத்தவரையில், கோவை மாவட்டத்திலே இருக்கிற ஒரு பிரதான பிரச்சினை, இந்த நெய்யிலே என்ன பிரச்சினை என்றால், அதாவது பிராண்டு, அன்பிராண்டு. பிராண்டிற்கு ஒரு வரி, பிராண்டு இல்லையென்றால், அதற்கு ஒரு வரி. ஆனால் 1993-க்கு முன்னர் என்ன இருந்தது என்றால், 'ரிஜிஸ்டர்டு அண்டு அன்ரிஜிஸ்டர்டு' என்று தான் இருந்தது. இதுதான் அதிகாரிகள் தவறு செய்யாமல் இருப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருந்தது. கடந்த கால ஆட்சியில் 'ரிஜிஸ்டர்டு அண்டு அன்ரிஜிஸ்டர்டு' என்று இருந்த முறை மாற்றப்பட்டு, பிராண்டு, பிராண்டு இல்லாமல் என்று மாற்றப்பட்டது. பிராண்டு இல்லையென்றால் 4 பர்சென்ட், பிராண்டோடு இருந்தால் 10 சதம் என்று இருக்கிறது. இதில் எல்லா விற்பனையையும் பிராண்டோடு விற்றதாகத்தான் அதிகாரிகள் மிரட்டி, தங்களை வளர்த்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். எனவே மாநில அரசு

பிஸ்கெட்டில் என்ன முறை கையாளப்படுகிறதோ, அதேபோல், எப்படி பிஸ்கெட்டில் பிராண்டிற்கு ஒரு நிலை, பிராண்டு இல்லையென்றால் ஒரு நிலை என்று வரிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகிறதோ. அதேபோல்--நெய் விற்பனையிலேயும், 'ரிஜிஸ்டர்'' செய்யப்பட்ட நெய்க்கு ஒரு குறிப்பிட்ட வரி, ரிஜிஸ்டர் செய்யப்படாத நெய்க்கு ஒரு வரி என்று போடுவதன் மூலம் முறைகேடுகள் தவிர்க்கப்படும். இதனால் அரசாங்கத்தினுடைய ரெவின்யூ ஒரு போதும் குறையாது. எனவே அரசாங்கத்தினுடைய வரி வருமானமும் குறையாது. அதிகாரிகளின் முறைகேடுகளுக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும். எனவே இந்த இரண்டு விஷயங்களையும் கவனத்திலே கொண்டு இந்த நெய்க்கு விதிக்கப்படுகிற வரி முறையில் மாற்றம் செய்யப்பட்டு 'ரிஜிஸ்டர்டு அண்டு அன்ரிஜிஸ்டர்டு' என்கிற பழைய முறையை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். வெண்ணெய்க்கு முற்றிலும் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்பதையும் நான் வேண்டுகோளாக மாநில அரசிடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மிளகாய் வற்றல். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள் இன்றைக்கு மிளகாய் வற்றல் வியாபாரம் அநேகமாக கடுமையான நெருக்கடியில் இருக்கிறது. இதுபற்றி தினமலர் ஒரு விரிவான கட்டுரை வெளியிட்டது. அவர்களுடைய துயரம். மாநில அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக அந்தத் தொழில் எவ்வளவு பாதிக்கப்படுகிறது என்கிற விவரம் எல்லாம் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விவரத்தை வேண்டுமானால் நான் அமைச்சர் அவர்களுக்குத் தருகிறேன். 40 ஆண்டுகாலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிற 'கன்சைன்மென்ட் சேல்ஸ்'-ன்படி வெளி மாநிலங்களில் கமிஷன் ஏஜெண்டுகள் மூலம்தான் விற்பனை நடக்கிறது. கமிஷன் ஏஜெண்டுகளின் மூலம் நடைபெறுகிற விற்பனையில் அவர்களுக்கு கமிஷன் போக விற்பனைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அந்தப் பட்டியல் அடிப்படையில் வரி விதிப்பு முறை நடைமுறையில் தணிக்கை முறை அமலாக்கப்பட்டு வந்தது. அந்த முறை இப்போது மாற்றப்பட்டு, அது ஹைக்கோர்ட்டிற்கு எல்லாம் போய், ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்பில் சொல்லப்பட்டிருப்பதில், கடைசியாக அவர்கள் கேட்டுக் கொள்வதெல்லாம், ஒரேயொரு விஷயம்தான்.

மாநில அரசு பழைய முறையை 1992 ஆம் ஆண்டு வரை அமலாக்க ஹைக்கோர்ட்டில் பெட்டிஷன் போட்டு, ஆர்டராகப் பெற்றிருக்கிறார்கள். அதே முறையை 1995 வரை நீட்டிக்க வேண்டும். அதேபோல் மூன்று ஆண்டுகளுக்கு பழைய முறையை நீட்டித்துக் கொண்டு, இனிமேற்கொண்டு, இப்போது என்ன சொல்லப்படுகிறதோ, அந்த ஆவணங்களைக் கொடுத்து, தணிக்கை முறைக்கு உள்ளாவதற்கு அந்த மிளகாய் வற்றல் வியாபாரிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். 10 ஆம் தேதியோடு ஒரு 'டெட் லைன்'. ஏனென்றால், அது ரெவின்யூ ரெக்கவரி என்று போனால் கடுமையான நெருக்கடி வந்துவிடும். எனவே, மாநில அமைச்சர்கள் இந்த விஷயத்தை கவனத்திலே கொண்டு, மிளகாய் வற்றல் வியாபாரிகளுடைய நியாயமான முறையீட்டை ஏற்று அங்கீகரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

(முற்பகல் 11-35

அடுத்து, மீன் வலைக்கு வரி போடப்பட்டிருக்கிறது. மீன் வலைக்கு வரி போடப்படுவது என்பது நேரிடையாக யாரைப் பாதிக்கும் என்றால், மீன் பிடிக்கின்றவர்களைத்தான் அது பாதிக்கும். தமிழ்நாட்டில், மீன் பிடிக்கின்ற தொழிலில் கட்டுமரங்களை நம்பி மீன் பிடிக்கின்ற சாமானியப்பட்டவர்கள்தான் இன்றைக்கு அதிகமாக இருக்கிறார்கள். எனவே, மீன் வலைக்கு வரி போடப்படுவது நேரிடையாக கட்டுமர மீனவர்களின் தலையிலேதான் போய் விழும். இந்த மாநில அரசைப் பொறுத்தவரையிலும், மாநில அரசின் வரிவிதிப்புக் கொள்கைப்படி, வரி விதிப்பு என்பது சாமானியப்பட்ட மக்களை அதிகம் பாதிக்கக் கூடாது என்பதுதான். அந்த அளவிலே வைத்துப் பார்த்தால், அந்தக் கண்ணோட்ட அடிப்படையிலே எடையிட்டுப் பார்த்தோமேயானால், கட்டுமர மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மீன் வலைக்கு போடப்படுகின்ற வரிக்கு முற்றிலும் விலக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் கட்டுமர மீனவர்களின் தகுதிக்கு ஒரு தற்காப்பை ஏற்படுத்தும். மாநில அரசு இவற்றைக் கவனத்திலே கொண்டு, சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பனியன் தொழிலில் 1 சதவிகிதம் வரி என்பது மாநில அரசினுடைய கொள்கை நிலைக்கு நேர் எதிராக இருக்கின்றது. எனவே, மறவாது இந்த 1 சதவிகித வரியை கைவிட்டு முற்றிலும் விலக்கு அளிக்கப்பட்ட தொழில் இந்தப் பனியன் தொழில் என்பதை முதலமைச்சர் அவர்களோடு தயவு செய்து அமைச்சர்கள் கலந்து

பேசி, அவருடைய பதிலுரையிலேயே இவற்றை அறிவிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பனியன் தொழில் ஒரு சீரியஸ்-ஆன விஷயமாகும். எனவே, இந்த விஷயத்தை முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, பனியன் தொழிலில் நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கின்ற இந்தக் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரையிலேயே 1 சதவிகிதம் வரி எடுக்கப்பட்டு, பனியன் தொழிலுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பூர் பனியன் தொழில் முழுக்க இவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. எனவே, அந்த நல்ல அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதிலே ஒன்று விடுபட்டுபோய் இருக்கிறது. ஓட்டல்களுக்கு 25 லட்சம் ரூபாய் வரை சலுகைக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே குறிப்பிட்டு இருந்தாலும் 1 இலட்சம் ரூபாய் வரை வியாபாரம் செய்யக் கூடியவர்கள் லைசென்ஸ் பெற வேண்டும் என்று சொன்னால், அவர்கள் அந்த லைசென்ஸ் பெறுவதற்கே சுமார் 10,000 ரூபாய் செலவழிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு சாதாரணமாக கையேந்தி பவனில்கூட 300 ரூபாய்க்கு வியாபாரம் செய்தால், ஒரு ஆண்டுக்கு 1 இலட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய நிலை இருக்கின்றது. எனவே, நீங்கள் அதைப் பரிசீலித்து, லைசென்ஸ் இல்லாத அளவுக்கு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. ஏ.எம். ராமசாமி.

திரு. ஏ.எம். ராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி சொல்லி, சேலம் மாவட்டத்தில் அதிகமாக வியாபாரிகள் பயன்படுத்துவது மரவள்ளிக் கிழங்குகள். அந்த மரவள்ளிக் கிழங்குகளைப் பயிர் செய்து, அவற்றை சேகோ

பேக்டரிக்குக் கொண்டு செல்கின்றனர். சேலம் மாவட்டத்திலே, அரசு உற்பத்தி செய்கின்ற மில்கள் 700க்கு மேற்பட்டவை உள்ளன. அந்த சேகோ பேக்டரியில் ஸ்டார்ச், ஜவ்வரிசி முதலியவற்றை உற்பத்தி செய்கிறார்கள். உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் அத்தனையும் சேகோ சர்வ் தொழில் மற்றும் கூட்டுறவு சொசைட்டி மூலமாக, டெண்டர் மூலம் விற்பனை ஆகின்றது. ஆண்டு ஒன்றுக்கு சுமார் 200 கோடி ரூபாய்க்கு மேலே விற்பனை ஆகின்றது. அதற்கு கூடுதலாக அடிஷனல் டாக்ஸ் 2½ சதவிகிதம் உள்ளது. அந்த விற்பனை வரி கூடுதலாக உள்ளதால், அந்த சொசைட்டிகள் நஷ்டத்தில் இயங்குகின்றன. ஆகவே, கூடுதலாக உள்ள 2½ சதவிகிதம் வரியைக் குறைத்து 1 சதவிகிதம் ஆக அறிவித்தால் அந்த சொசைட்டிகள் நஷ்டம் இல்லாமல் இயங்கும். 40% வெளி மார்க்கெட்டில் விற்கிறார்கள். அதுவும் சொசைட்டி மூலமாக வந்தால் 100% சொசைட்டி மூலம் விற்பனையாகும். இந்த வரி விதிப்பை எடுத்தால் வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகின்ற ஜவ்வரிசி, ஸ்டார்ச் சொஸைட்டியில் விற்பனையாகும்போது சொஸைட்டியினுடைய வருமானம் கூடுதலாக வரும். அதனால் சொஸைட்டி லாபத்தில் நல்ல முறையில் இயங்கி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கருணை உள்ளம் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்கள் கூடுதலாக உள்ள எத்தனையோ வரிகளை எல்லாம் குறைத்து இன்றையதினம் சலுகைகள் அளித்திருக்கிறார்கள். விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய இந்த மரவள்ளிக் கிழங்கிலிருந்து உற்பத்தியாகும் ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசிக்கும் கூடுதல் வரியைக் குறைத்து வரிச் சலுகை அளித்தால் அனைத்து மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் அனைவரும் பயன்பெறுவார்கள் என்று கேட்டுக்கொண்டு இந்த வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி.

முற்பகல் 11-40

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரி சம்பந்தமாக சில விவரங்களைச் சொல்ல நான் விழைகின்றேன். குறிப்பாக வரி ஏய்ப்பு என்பது இந்தத் துறையிலே சர்வ சாதாரணமாகும். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கன்னியாகுமரியிலிருந்து வெளி மாநிலங்களுக்கு,

வெளி மாவட்டங்களுக்குச் செல்லுகின்ற ரப்பரிலே அரசாங்கத்தை ஏமாற்றுவதிலே நிறைய கெட்டிக்காரர்கள் இருக்கிறார்கள்.. வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக பல்வேறு விதமான வரி விதிப்பை செய்கின்றபோது, அரசாங்கத்தை ஏமாற்றுகின்றவர்கள் இருக்கின்ற காரணத்தினால், இந்தத் துறை இந்த வரி ஏய்ப்புக்காரர்களை கண்டுபிடிப்பதிலே கவனம் செலுத்த வேண்டும். ரப்பரை அதிகப்படியாக டெல்லிக்கும் அதுபோன்று கல்கத்தாவிற்கும் கடத்திச் செல்கிறார்கள். வரியைக் கட்டுவதில்லை. இதை அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்து அதை வசூலிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் இந்த எல்லைச் சாவடிகள் என்று சொல்கின்ற பகுதியை விட்டுவிட்டு, உள்ளூரிலே இருக்கின்ற இதை பரிசோதனை செய்கின்ற சாவடிகளை பூராவும் எடுத்துவிடுவதான ஒரு கருத்து ஏற்கெனவே சொல்லப்பட்டது. அப்போது ஏராளமான பேருக்கு வேலை இழப்பு ஏற்படும். அதை எடுப்பது சரியாக இருக்காது என்பது என்னுடைய கருத்து. குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்திலே உற்பத்தி பண்ணுகின்ற ஒரு சரக்கை திருச்சியிலே விற்பனை செய்கிறார்கள். அதிலே விற்பனை வரி வருவதற்கான சாத்தியக்கூறுகள் கம்மியாகின்றது. ஏற்கெனவே நம்முடைய வியாபார பெருமக்கள் பெருவாரியாக எந்த அளவிற்கு அரசாங்கத்திற்கு வரியைத் தராமல் இருக்க முடியுமோ அந்த அளவிற்கு உணர்வு படைத்தவர்கள். எனவே அந்த வகையிலே இதைக் கண்காணிப்பதற்கு உள்ளூரிலே சோதனைச்சாவடி இருக்க வேண்டும். மாநிலத்திற்குள்ளே இருக்கக்கூடிய சுங்கச் சாவடிகளை நாம் முழுமையாக பாதுகாத்தால் மட்டும்தான் அதிகப்படியான வரியை அரசாங்கத்திற்கு பெற முடியும். அந்த வகையிலே அதை முழுமையாக எடுத்துவிடக்கூடாது என்பது என்னுடைய கருத்தாகும்.

இரண்டாவது, சிறிய தொழில்கள். குறிப்பாகச் சொன்னால், செங்கல் உற்பத்தி செய்கின்ற யூனிட்டுகள் பல்வேறு இருக்கின்றன. அது கிராமத் தொழில். செங்கல் விற்பனை வரி என்று சொல்லி சாவடிகளிலே அதைக் கட்டாயப்படுத்தி வசூல் பண்ணுகின்ற ஒரு தன்மை இருக்கிறது. ஏதோ பெரிய அளவிற்கு ஒரு பெரிய தொழிலாக நாம் அதைப் பார்க்க முடியாது. எனவே, செங்கல்லுக்கு இருக்கின்ற அந்த வரியை ரத்து செய்ய வேண்டும்.

அதுபோன்று இன்னொரு முக்கியமான பிரச்சினை. நம்முடைய மீனவப் பெருமக்கள் பெருவாரியாகப் பயன்படுத்துகின்ற மீன் வலை. அந்த வலைக்கு நாம் விற்பனை வரியை அதிகப்படுத்திப்போட்டால் அதிலே பாதிக்கின்றவர்கள் பெருவாரியாக தமிழகத்திலே இருக்கின்ற மீனவப் பெருங்குடி மக்கள்தான். ஏனென்றால், அதனுடைய வரி வந்தாலே உடனே வலையினுடைய விலையை, நூலினுடைய விலையை உயர்த்திவிடுவார்கள். ஏற்கெனவே நம்முடைய மாநிலம் முழுவதும் இருக்கின்ற ஆயிரக்கணக்கான மீனவ மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்கள். அவர்களுடைய மீன்பிடித் தொழில் என்பது சுருக்கமாகச் சொன்னால் 4 மாதம் 5 மாதம் தான். மற்ற மாதங்களிலே பிற மாநிலங்களுக்குச் செல்ல வேண்டும். மீன் பிடிக்க வேண்டும் என்று சொன்னால் அவர்களுக்கு இந்த வலையை விற்பனை செய்கின்றபோது இந்த வரியை விதிக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையிலே அரசு அதை ரத்து செய்ய வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்றே, இந்த மரவள்ளிக்கிழங்கிலிருந்து உற்பத்தி செய்கின்ற ஜவ்வரிசி. சேலம் மாவட்டத்தில் இன்னும் பல மாவட்டங்களிலே அதனுடைய வளர்ச்சி ஏகமாக வளர்ந்து வந்தாலும்கூட அந்தத் தொழிலை உருவாக்குகிற வகையில் வரிச் சலுகை அவர்களுக்கு வர வேண்டும். அந்த அடிப்படையில் அந்த ஜவ்வரிசி மீது போட்டு இருக்கின்ற வரியை நாம் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அதேபோல், நம்முடைய பல்வேறு துறைகளில் வரியை வசூலிப்பதற்கு பொதுவாகச் சொன்னால் அந்தத் துறையில் உள்ள விற்பனை வரி அதிகாரிகள் விசேஷமான நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் நடக்கின்ற இந்தக் காலங்களில் வருகிறார்கள். ஒரு கடைக்கு 4 பேர், 3 பேர் என்று சென்று அங்கே எந்தவிதமான பரிசோதனையும் செய்யாமல் அவர்களுக்குத் தேவையான பல நூறு ரூபாய்களை, அது சின்ன கடையாக இருந்தாலும் சரி, பெரிய கடையாக இருந்தாலும் சரி, பெறுகிறார்கள். இது ஒரு மாமூல் நிலையாக நம்முடைய மாநிலம் முழுவதும் இருக்கிறது. விற்பனை வரி அதிகாரிகள் மிகப் பெரிய அளவில் மாமூல் பெற்றுக்கொள்கின்ற ஒரு நடவடிக்கை காரணமாக கணக்குகளைச் சரியாகப் பார்த்து அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணத்தை வசூலிப்பதற்குப் பதிலாக,

இவர்கள் மாற்றுப் பாதையில் சென்று அல்லது இன்னொரு முறையில் அவர்களைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். இதனால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியை சரிவர வசூலிக்காமல், நம்முடைய கஜானாவுக்கு பணம் வருகின்ற அந்த ஏற்பாடுகளைச் செய்யாமல் இருக்கிறார்கள். அதில் முறையான கண்காணிப்பு வேண்டும். இதுபோன்ற பல வியாபாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் 3 விதமான கணக்குகளை வைத்து இருக்கிறார்கள். நம்முடைய அரசுக்குத் தருகின்ற கணக்கு ஒன்று இருக்கும். அவர்களுடைய பங்குதாரர்களுக்குத் தருகின்ற கணக்கு ஒன்றாக இருக்கும். சொந்தக் கணக்கு ஒன்று இருக்கும். இப்படி 3 விதமான கணக்குகளை வைத்துக்கொண்டு நம்முடைய மாநில அரசுக்கு நிச்சயமாக வரவேண்டிய அந்தப் பணம் கள்ளப் பணமாகச் செல்லுகின்றது. அரசின் கணக்கில் வராமல் போகிறது. முறைப்படி கணக்கை வைத்துக்கொண்டு அரசாங்கத்திற்குத் தரவேண்டிய பணத்தை தராமல் இன்று அவர்கள் பணம் சேர்க்கின்ற முறையின் காரணமாக இந்தக் கள்ளப் பணம் என்பது அதிகமாகியிருக்கிறது. இப்படி கள்ளப் பணம் புழக்கத்தில் இருப்பதன் காரணமாக அதன் மூலமாக விலைவாசி ஏறுவதற்கு ஏதுவான காரணமாக அமைந்துள்ளது. எனவே, இவைகளை எல்லாம் கணக்கில் கொண்டு நம்முடைய அதிகாரிகள் அனைவரும் சீரான கணக்குகளை சரிவர பரிசோதனை செய்து அரசுக்கு வரவேண்டிய பணத்தை முழுமையாகப் பெற்றுக்கொள்வதிலே முனைப்பாக செயல்பட வேண்டுமென்று கேட்டு நான் இங்கே குறிப்பிட்ட செங்கலுக்கும் அதேபோல் வலைக்கும் உள்ள வரியை ரத்து செய்ய வேண்டும். அதேபோல் ஜவ்வரிசிக்கான வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) : அடுத்து, திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள், நிர்வாகம் பற்றிய இந்த மானியத்தின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பு கொடுத்தமைக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்திற்கு மிக அதிகமாக வரி வருவாயை அளிக்கக்கூடிய இந்தத் துறை சீர்பட்டு இருக்க வேண்டும். சிறப்பாக இருக்க

வேண்டும். நிர்வாகத் திறமையோடு கவனிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தின் காரணமாக நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய கடந்த கால நிதிநிலை அறிக்கை அளிக்கின்றபோது நீண்டகால வரி விதிப்புக் கொள்கை ஒன்றை அறிவித்தார்கள். நீண்ட கால வரி விதிப்புக் கொள்கையின் மூலமாக வரி விதிப்பில் நவீன முறை, சிறு வணிகர்களுக்கு நிவாரணம், வீட்டுக்குத் தேவையான பொருட்கள் மீதான வரியைக் குறைத்தல் ஆகிய முக்கிய அடிப்படை நோக்கங்களைக் கொண்டு நீண்டகால வரி விதிப்புக் கொள்கை நிர்மாணிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்துதான் அரசு விற்பனை வரி சீர்திருத்தக் குழு ஒன்று மீண்டும் அமைக்கப்பட்டு வணிகர்களுடைய இன்னல்களை நீக்குதல், வரி ஏய்ப்பைத் தடுத்தல், கூடுதல் வரி வருவாயை ஈட்டுதல் என்ற அளவுக்கு நம்முடைய அரசு மிகச் சிறப்பாக நிர்வாக மேம்பாடு செய்வதற்காக பல்வேறு முனையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்திய துணைக் கண்டத்து மாநிலங்களுக்கு எல்லாம் வழி காட்டும் விதமாக இந்த அமைப்புகள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அதிலே குறிப்பாக ஒரு அரசு சிறப்பாக நடைபெற வேண்டும் என்றால் அரசினுடைய செலவுகளைக் குறைத்தல் மூலமாக இருப்பை அதிகரித்தல். அதேபோல் வரி விதித்தல், வரி வசூலித்தல் ஆகிய இந்த 3 முறைகளில் ஒரு அரசு தன் கவனத்தை முழுமையாக செலுத்துகின்றபோது அது சிறப்பாக நடைபெற முடிகிறது. செலவைக் குறைத்தல் என்று சொல்லுகின்றபோது நம்முடைய கழக அரசு இன்றைக்கு நம்முடைய தானைத் தலைவர் தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த நிலையில் கடந்த கால அரசினை நினைத்துப் பார்க்கின்றபோது மலைக்கும் மடுவுக்கும் இருக்கின்ற வித்தியாசமும், நம்முடைய முதலமைச்சருக்கும் கடந்த கால ஆடம்பர முதல்வர் அவர்களுக்கும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது தங்கத்திற்கும் தகரத்திற்கும் இருக்கின்ற வித்தியாசத்தையும் நான் இங்கே குறிப்பிட்டு ஆக வேண்டும். குறிப்பாக இந்த வரி விதித்தல் முறையில் பல்வேறு பொருட்களுக்கான வரிச் சலுகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள்.

முற்பகல் 11-50

சிப்பி மற்றும் சிப்பிகளின் மூலமாக, கடல் பகுதியிலே கிடைக்கக்கூடிய அந்தப் பொருட்களின் மூலமாக உருவாகக்கூடிய பொருட்களுக்கான வரியை முழுவதுமாக ரத்து செய்ததற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

அத்துடன் இன்னொரு முக்கியமான நிலையினை இதிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, 1989-91 ஆம் ஆண்டில் நம்முடைய தலைவர் முதல்வராக இருந்த அந்தக் காலகட்டத்திலேதான் முதன்முதலாகத் தாலிக்கு வரியை நீக்கி, தாய்மார்களினுடைய ஒட்டுமொத்தமான அந்த வரவேற்பினையும், அன்பினையும் பெற்றார்கள். தாலிக்கு வரியை நீக்கிய அந்தச் செயலைப் போலவே இன்றைக்கு நான் கேட்டுக் கொள்ள விரும்புவது அந்த நகைக் கடைகளினுடைய பிரச்சினையிலேகூட அந்த வணிகர்கள், வியாபாரிகள், சிறு வியாபாரிகள் சார்பாகவும் கேட்கப்படுகின்ற ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கொள்முதல் வரி என்று ஒரு வரி இருக்கிறது. அந்தக் கொள்முதல் வரியின் மூலமாக, நடுத்தர ஏழை மக்கள் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு இருக்கிறது. அது ஒன்றும் அதிகமாக இல்லை. பழைய நகையை அவர்கள் வாங்குகின்றபொழுது 2 சதவீதம் கொள்முதல் வரி அங்கே விதிக்கப்படுகிறது. அதைப்போல நாம் நகையை வாங்குகின்றபொழுது-அவர்கள் விற்கின்றபொழுது 4 சதவீதம் வரி இருக்கிறது. ஆக, இது ஒரு வகையில் பார்க்கின்றபொழுது ஏதோ அதிலே மறைமுகமாக இரு முறை வரி இருப்பதற்கான வாய்ப்பும், சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சரவர்களும் அந்தக் கொள்முதல் வரியை ரத்து செய்வதற்கான சாத்தியக்கூறுகள், நிலைகள் இருக்குமேயானால், அதனை ஆய்ந்து, அறிந்து அறிவிப்பார்களேயானால் தமிழகத்திலே இருக்கின்ற ஏராளமான தாய்மார்கள், தமிழகத்திலே இருக்கின்ற சிறு நகைக் கடை வணிகர்கள் அத்தனைபேரும் மகிழ்வதற்கான ஒரு வாய்ப்பு அதிலே இருக்கிறது என்பதை இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள், மீன் வலையின் மீதான வரி. அந்த மீன் வலையின் மீது போடப்படுகின்ற வரி என்பது. பல்வேறு உறுப்பினர்களும் பல கோணங்களிலே இங்கே எடுத்து வைத்துச் சிறப்பாகச் சொல்லப்பட்டது. ஆந்திராவிலே இல்லை, கர்நாடகத்திலே இல்லை, கேரளத்திலே இல்லை என்கின்ற அளவில் அந்த மீன் வலை வரி நமக்கு. எப்பொழுதுமே மீனவர்களின் உற்ற தோழராக இருந்து, மீனவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும் என்ற கருத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற உண்மையான மீனவர்களின் நண்பனாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த மீன் வலையின் மீது விதிக்கப்பட்டிருக்கின்ற அந்த வரியினையும், அதைப்போல சாதாரண மக்கள் அனைவருமே பயன்படுத்தக்கூடிய செங்கல்லின் மீது விதிக்கப்பட்டிருக்கின்ற அந்த வரியினையும் மாற்றியமைப்பதற்கு, அடியோடு ரத்து செய்வதற்கு வழிவகைகள் இருக்குமேயானால் அவற்றைச் செய்து தர வேண்டுமென்று மெத்தப் பணிவுடன் மாண்புமிகு தமிழக முதல்வரவர்களையும், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சரவர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு நடைமுறையிலே பார்க்கின்றபொழுது, நிர்வாகங்கள், நிர்வாகத்தினுடைய நிலைப்பாடுகள், நிர்வாகத்தினுடைய செயல்களிலே ஏற்படக்கூடிய கோளாறுகள், கடந்த ஆட்சிக் காலத்தில் நம்முடைய அவையிலே-நேற்றையதினம் வைக்கப்பட்ட மத்தியத் தணிக்கைத் துறையினுடைய அறிக்கை நம்மைப் பார்த்து-நம்மை அல்ல - கடந்த ஆட்சியாளர்களைப் பார்த்துக் கை கொட்டிச் சிரிப்பதைப் போல தலையிலே அடித்துக் கொள்வதைப் போல, வேதனையோடு சிலவற்றை அதிலே வெளியிட்டிருக்கிறார்கள். திட்டங்களை அறிவிப்பதற்கு முன்பாக, அந்தத் திட்டங்களை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற நிலையை வகுத்துக்கொண்டு அறிவிப்பது என்பதுதான் அறிவுள்ளோர் செயல். ஆனால் கடந்த ஆட்சிக் காலத்தில் மத்திய தணிக்கையினுடைய அறிக்கையிலே தெளிவாகச் சொல்கிறார்கள். பெண் குழந்தைகள் நலனுக்கு அந்த முதலமைச்சர் பெயரில் ஒரு திட்டத்தை அறிவித்து, 800 ரூபாய்க்குப் பெறுமானம் உள்ள 2 கிராம் மோதிரம் வழங்கப்படும் என்ற ஒரு திட்டத்தை கை தட்டுவதற்காக மட்டும் அறிவித்து விட்டுப் போன அந்தச் செயலை வன்மையாகக் கண்டித்து, அதற்கான ஒழுங்குமுறை இல்லாமல், நிதி இல்லாமல், வாங்குவதற்கு டெண்டர் கோருவதற்கான

நிலைப்பாடுகள் எதுவும் இல்லாமல் அத்திட்டத்தை இங்கே அறிவித்ததால்--அது முடங்கிக் கிடக்கின்ற அந்த நிலையையும் அவர்கள் குறிப்பிட்டு, 8 மானியக் கோரிக்கைகளுக்கான நிதிகளை கூட சரிவர ஒதுக்காமல், அந்த மானியக் கோரிக்கைகள் மீது ஒதுக்க வேண்டிய நிதிநிலைகளைச் சொல்லி சட்டமன்றத்தினுடைய அனுமதியைக் கூடப் பெறாமல், 112 கோடி ரூபாய்க்கு மேல் அந்த நிலையிலே முடக்கப்பட்டதைச் சொல்லி, நிர்வாகத்தினுடைய சீர்கேட்டினை அவர்கள் கண்டித்திருப்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல. இன்னும் ஒன்றை மட்டும் நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தந்தை பெரியார் அவர்களுடைய பெயரிலே அமைந்திருக்கின்ற கடலூர் அரசுக் கலை கல்லூரியில் புதியதாக கணினி வகுப்புக்கள், அதைப்போல புதியதாக வேதியியல் வகுப்புக்கள் சென்ற மாதம் துவக்கப்பட்டன. நானே துவக்கி வைத்தேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் மனமுவந்து அளித்த அந்த வகுப்புகள் துவங்கப்பட்டன. அந்த வகுப்பிலே மகளிரும் சேர்ந்து படிக்கின்ற விதத்திலே, ஆண்கள் கல்லூரியாக இருந்தாலும், மகளிரும் படிக்கின்ற ஒரு வாய்ப்பை அங்கே உருவாக்கித்தர வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே எப்படிச் சொல்லலாம் என்று தயவுசெய்து கருத வேண்டாம். அதிலே எந்தவிதமான பண இழப்பும் இல்லாத நிலையில் அதை இங்கே குறிப்பிட்டு அதற்காக இரண்டு அறைகள் கட்டித்தர வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் வழங்கினார்களே அந்த அடிப்படையில் தலைவர் அவர்களுடைய ஒப்புதலோடு அந்த 25 இலட்சம் ரூபாயில் தந்தை பெரியார் அரசு கலைக் கல்லூரியில் இரண்டு வகுப்பு அறைகள் கட்டித் தருவதற்காக இந்த ஆண்டே முடிவு செய்யப்பட்டு, அந்த மாணவர்களுக்கு அங்கே அறிவிக்கப்பட்டது. எதற்காக 25 இலட்சம் ரூபாய் என்று கேட்டவர்களுக்காக இதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

ஆகவே, சிறந்த நிர்வாகத்தின் மூலமாகத்தான் அனைத்துமே சிறப்பாகச் செயல்படும் என்ற அடிப்படையில் (மணியடிக்கப்பெற்றது)

இந்த மானியக் கோரிக்கை, மிகச் சிறப்பாக, சீர் மிகுந்த, சீரிய நிலையில், தந்தை பெரியார் அவர்களுடைய சிக்கனத்தை நிலைநிறுத்துகின்ற வகையிலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவாற்றலைச் சொல்லிக் காட்டுகின்ற விதமாகவும், பெரியாராக, அண்ணாவாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பாக இந்தத் தமிழகத்தை நிர்வகிக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கக்கூடிய இந்த மானியக் கோரிக்கையினை முழுமையாக, முழு மனதோடு வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. பி. என். வல்லரசு.

***திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், தீர்வைகள் நிருவாகம் மானியத்தின்மீது நான் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். வணிக வரித் துறை என்பது அரசுக்கு மிக மிக அதிகமான வருவாயை ஈட்டித்தருகின்ற ஒரு சிறந்த துறையாகும். வணிக வரித் துறை மாநில அரசுக்கு ஒரு பொன் முட்டையிடும் வாத்து என்றால் அது மிகையாகாது. காரணம் 1995-96-ல் வணிக வரித் துறை ஈட்டித் தந்த மொத்த வசூல் 5,023 கோடி ரூபாய் ஆகும். அதே போல, 1996-97-ல் வணிக வரித் துறை ஈட்டித் தந்த மொத்த வசூல் 5,137 கோடி ரூபாய் ஆகும். எனவே, இந்த மொத்த வசூலானது மாநிலத்தின் மொத்த வருவாயில் வணிக வரித் துறை மட்டும் ஈட்டித் தந்திருப்பது 70 சதவீதம் நிதி என்றால் அது மிகையாகாது. அதனால்தான் வணிக வரித் துறையை பொன் முட்டையிடும் வாத்து என்று நான் கூறினேன். அதற்காக, பொன் முட்டையிடுகின்ற வாத்து என்பதற்காக, அந்தப் பொன் முட்டையிடுகின்ற வாத்தை அறுத்து ஒரே நாளில் அனைத்து முட்டைகளையும் பெற்றுவிடலாம் என்று எண்ணினால் அதுவும் தவறாகிவிடும். அதுபோல, மிகவும் கூடுதல் வரி போட்டு வணிக வரித் துறையை நசுக்கிவிடக் கூடாது. இன்றையதினம், இதைவிட இன்னும் கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாய் நிதி வசூல் செய்ய முடியும். காரணம், அரசு அதிகாரிகளுக்கும் வணிகர்களுக்குமிடையே ஒரு பேரம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த பேரத்தை அரசு தடுத்து நிறுத்துமேயானால் இந்த ஆண்டு 1996-97-ல் வசூலாகியிருக்கின்ற 5,137 கோடி ரூபாயைவிட ஆயிரம் கோடி ரூபாய் கூடுதலாக வசூல் செய்ய முடியுமென்று நான் அரசுக்குக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரிக் கொள்கையைச் செம்மைப்படுத்திட டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு விற்பனை வரி சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். இந்தக் குழு, வணிகர் சமுதாயத்தினுடைய உண்மையான இன்னல்களை நீக்குவதற்கும் வரி ஏய்ப்பவர்களைத் தடுப்பதற்கும் அமைக்கப்பட்ட ஒரு சிறந்த குழு என்றால் மிகையாகாது. அதேபோல வரி வீதங்களை சீரமைக்க வரி வீதங்கள் சீரமைப்புக் குழு ஒன்றை டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு அமைத்திருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் வணிகர்கள் நல வாரியம், சென்னையில் வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையம் போன்றவற்றை கலைஞர் அரசு அமைத்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்) தலைமை]

அதுமட்டுமல்ல, கலைஞர் அவர்களுடைய அரசு கீழ்க்கண்ட பொருள்களுக்கு வரிவிலக்கு அளித்திருப்பதை மனதார பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

மீன் உணவு, சிகைக்காய்த்தூள், தயிர், பஞ்சாமிர்தம், பழைய வெள்ளி, மெட்டி, கொலுசு மற்றும் அரைஞாண், மூங்கில் தட்டு, முறம், கூடைகள், புற்றுநோய், தொழுநோய், காசநோய் போன்ற நோய்களின் சிகிச்சைக்கான உயிர்காக்கும் மருந்துகள், கால்நடைத் தீவனம், சாம்பிராணி போன்ற பொருள்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பருத்தி மீதான கொள்முதல் வரியை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்திருப்பதையும், சரிகை மீதான வரியை 8 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்திருப்பதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு வணிகப் பெருமக்கள் அத்தனைபேரும் வணிக வரிச் சட்டம் எளிமையாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். வணிக வரிச் சட்டம் கடுமையாக இருக்கிறது. அதிலே பல்வேறு குழப்பங்கள் இருக்கின்றன. எனவே, வணிக வரிச் சட்டத்தை எளிமையாக ஆக்க வேண்டுமென்று தொடர்ந்து

வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். வணிக வரிச் சட்டத்தை எளிமையாக்கிட வணிக வரி சீரமைப்புக் குழுவினுடைய பரிந்துரைகளை அரசு ஏற்றுச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி, வணிக வரிகள் சீரமைப்புக் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்கின்றபோது, அமைச்சர் அவர்கள், அதிகாரிகள், வணிகர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு கூட்டுக் குழுவை அமைத்து, அதன் வாயிலாக சட்டங்களை, வணிகவரிச் சட்டங்களை எளிமையாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நண்பகல் 12-00

மாணவர்களுடைய நோட்டுப் புத்தகங்களுக்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு முழு வரிவிலக்கு அளித்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நோட்டுப் புத்தகங்கள் வெளி மாநிலங்களுக்குச் செல்கின்றபோது, 4 சதவீதம் வரி விதிக்கப்படுகின்றது. அதனால், கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருக்கின்ற வணிகர்கள் விழித்துக்கொள்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல், இங்கே தமிழ்நாட்டில் வாங்குகிற அத்தனை பேர்களும், நமது தமிழக அரசினுடைய காகித ஆலைகளிலிருந்துதான் காகிதத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, வெளி மாநிலங்களுக்கு அவை செல்கின்றபோது, அந்த வரியைக் குறைக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற, கீழ்க்கண்ட உணவு சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கின்றேன். 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ள பொரிகடலைக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 4 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ள பட்டாணி, பட்டாணிப் பருப்புக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பயறு, பருப்பு வகைகளை ஒரே பட்டியலில் கொண்டு வந்து, முழு வரிவிலக்கு அளிக்க வேண்டுமாய் நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். பயறு, பருப்புகளின் பொட்டு தூசிக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சமையல் எண்ணெய்களுக்கு வரிவிலக்கு அளித்து உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல், கால்நடைத் தீவனமாகப்

பயன்படுகின்ற புண்ணாக்குக்கு 4 சதவீத வரியை, ஒரு சதவீத வரியாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெண்கள், குறிப்பாக தாய்மார்கள் மாவு ஆட்டுகின்ற இயந்திரத்திற்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கோவில் பூஜைகளுக்கு பயன்படுத்துகின்ற, விபூதி, சூடம் போன்ற பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், கோடைகாலங்களில் ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற நன்னாரி சர்பத்திற்கு விதிக்கப்பட்டுள்ள வரிக்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்): அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. இராமலிங்கம்.

திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டிற்கான வணிகவரித் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த வணிகவரிகள் மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பு ஒரு தொலைநோக்குப் பார்வையோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு சீர்திருத்தங்களோடு, எதிர்காலத்தில், வணிகர்கள், தொழில் முனைவோர்கள் ஆகியோர்களுக்கும் மற்றும் அரசுத் துறை அதிகாரிகளுக்குமிடையே ஒரு நியாயமான நெருக்கமான உறவுமுறையோடு கூடிய பல நல்ல திட்டங்களையெல்லாம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் காண முடிகிறது. அதிலும், குறிப்பாக, தமிழினத் தலைவர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு இந்தச் சீரமைப்புக் குழுவை அறிவித்தார்கள். அந்தச் சீரமைப்புக் குழுவின் அறிக்கையின்படி இன்றையதினம் பொதுமக்களையும், வணிகர்களையும் அச்சுறுத்திக் கொண்டிருந்த சோதனைச் சாவடிகள் படிப்படியாக நீக்கப்படும் என்கிற ஒரு நல்ல அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். இது வணிகர்களாலும், பொதுமக்களாலும் பரவலாக வரவேற்கப்படுகிறது. அதே போல், இன்றையதினம் பெரும்பாலான பொருட்கள், பாமர மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய பொருட்களுக்கு எல்லாம் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உயிர்காக்கும் மருந்து வகைகளுக்கு வரி நீக்கம் செய்யப்பட்டு, வரிச் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. அதே போன்று, வணிக வரித்துறை அதிகாரிகள் என்றாலே, வணிகர்கள் எல்லாம் பயந்து கொண்டு இருந்த ஒரு நிலையும் இருந்தது. அந்த

நிலை இன்றைய தினம் மாற்றப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அரசுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டிய வரியைத் தானாகவே மனமுவந்து செலுத்தக்கூடிய அளவிற்கு ஒரு இணக்கமான உறவு இன்றையதினம் இந்தச் சீரமைப்புக் குழுவினுடைய அறிக்கையின் மூலமாக ஏற்படுத்தப்பட்டிருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கதாகும்.

அதேபோல், வணிகர்கள் நல வாரியம் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது. அது, இரக்க மனத்தோடு, இன்றையதினம் நலிவடைந்த பல வணிகர்களுக்குப் பல நல்ல சலுகைகளையெல்லாம் வழங்கியிருக்கிறது. கடந்த காலத்தில் வணிகர்களுக்கு இருதய அறுவை சிகிச்சைக்காக உதவித்தொகை, ஊனமுற்றோருக்கு உதவித்தொகை, அவர்களுடைய குழந்தைகளுக்கு எல்லாம் கல்விக்கான உதவித்தொகை, இப்படி பல்வேறு நல்ல திட்டங்கள் இந்த வணிகர்கள் நல வாரியத்தால் செயல்படுத்தப்படுவது உள்ளபடியே பாராட்டுதலுக்குரியதாகும். நீண்டகால வரி விதிப்புக் கொள்கையை செம்மையாகச் செயல்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்களெல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. எளிதான, நேரடியான வரிவிதிப்பு முறை மற்றும் மாநிலத்தின் வரி வருவாயைப் பெருக்குவதற்கான நல்ல யோசனைகளெல்லாம் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் வரி ஏய்ப்பைத் தடுக்கின்ற வகையில் நல்ல ஆலோசனைகளும் இதில் சொல்லப்பட்டிருக்கின்றன.

பிற்பகல் 12-05

சென்னை, கோவை, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பல வியாபாரிகள் போலியான முகவரிகளைக் கொடுத்து விற்பனை வரி ஏய்ப்பு செய்திருக்கிறார்கள். அதுமட்டுமன்றி, இலட்சக்கணக்கான ரூபாய் வரி பாக்கி உள்ளவர்கள், வெகு எளிதில் நடுவர் மன்றத்தை அணுகி, மிகச் சாதாரணமாக ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்து, தடையாணை பெற்றிருக்கிறார்கள். இந்தத் தடையாணையின் மூலமாக, அரசுக்கு பல ஆண்டுகளாக வரவேண்டிய வரித் தொகைகளெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. எனவே, காலம் கடத்துவது . என்பது வரி ஏய்ப்புச் செய்வதற்கு மறைமுகமான இலாபமாக அமைந்துவிடுகிறது. எனவே நடுவர் மன்றத்தில் தேங்கிக் கிடக்கின்ற தடையாணைகளை உடனடியாக அகற்றுவதற்கு

நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்றையதினம் தணிக்கைக் குழுவின் அறிக்கை இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டது. அதில் தெளிவாக ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், "1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம்' 12-3-1993-ல் திருத்தப்பட்டது, இதனால் பல இனங்களில் அரசுக்கு வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தங்கத்தாலி, வெள்ளிக் கொலுசு, கோதுமைத் தவிடு போன்ற பொருட்கள் 12-3-1993 முதல் வரி விதிப்புக்கு உட்பட்டதாக இருந்தபோதிலும், முந்தைய ஆணைகளின்படி, தவறாக அவற்றுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏறக்குறைய 2680 இலட்ச ரூபாய் அரசுக்கு வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

சென்னை வள்ளலார் நகர் மற்றும் துறைமுகப் பகுதியில் உள்ள 1-வது சரகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட் விற்பனைமீது 'அறிவிக்கப்பட்ட பொருள்' என்ற அடிப்படையில் 8 விழுக்காடு என்பதற்குப் பதிலாக, 4 விழுக்காடு என்று வரி விதித்திருப்பதால், ரூபாய் 1.7 இலட்சம் வரிக் குறைவு ஏற்பட்டுள்ளது. மதுரை, உத்தமபாளையம் சரகத்தில் ரூபாய் 43.79 இலட்சம் மதிப்புள்ள ஏலக்காய், மிளகு போன்ற பொருட்கள் ஒரிஸ்ஸா மாநிலத்திலுள்ள வியாபாரிக்கு இருப்பு மாற்றம் செய்யப்பட்ட அடிப்படையில் இரண்டு வியாபாரிகளின் வரி விலக்குத் தொகை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த வியாபாரிகள் வியாபாரம் செய்யும் மின்னணுப் பொருட்களுக்கும் மற்றும் அதனைச் சார்ந்த மற்ற பொருட்களுக்கும் எந்தவிதமான இருப்பும் இல்லாததால், தணிக்கைக் குழுவின் யோசனையின்பேரில் அதைப் பரிசீலனை செய்ததால், இந்தச் சரக்கு மாற்றம் பொய்யானது என்று தெரிய வந்தது. இதனால் அரசுக்கு ஏறக்குறைய 4.38 இலட்சம் ரூபாய் கூடுதலாக வரி இழப்பு ஏற்பட்டு இருக்கிறது. அதேபோன்று, சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஒரு வியாபாரி 30.30 இலட்சம் ரூபாய் வரிக்காக கொடுத்த காசோலை மீது வங்கியில் பணம் கொடுக்க மறுத்ததால் ஏறக்குறைய ஒரு மாதம் 29 நாட்கள் தாமதமாக அந்த வரி செலுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு இனங்களில் கடந்த காலத்தில் அரசுக்கு வரி இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் எதிர்காலத்தில்

தவிர்க்கின்ற வகையில் இந்தச் சீரமைப்புக் குழு நல்ல யோசனைகளை கூறி இருப்பதற்காக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, சென்னையில் கையினால் சலவை நீலம் தயார் செய்யப்படுகின்ற சிறிய தொழிற்சாலை இயங்கி வருகின்றது. இந்தச் சலவை நீலம் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழைப் பெண்கள் வேலை செய்து வருகிறார்கள். கையினால் தயாரிக்கப்படும் அனைத்து வகை சோப்புகள், சோப்புப்பவுடர், சோப்புத் திரவம் ஆகியவற்றுக்கு 4% வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் கையினால் தயாரிக்கப்படும் 'ராபின் புளூ' என்று சொல்லப்படுகின்ற சலவை நீலத்திற்கு மட்டும் 16% வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதனால், இந்த சிறிய தொழிற்சாலைகளெல்லாம் அண்டை மாநிலமான பாண்டிச்சேரி போன்ற பகுதிகளுக்குச் சென்றுவிடக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. எனவே, இதை 4% ஆக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): அடுத்து, திரு. ஜி. நிஜாமுதீன்.

பிற்பகல் 12-10

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள் மற்றும் தீர்வைகள் நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கையின் விவாதத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி கூறி என் உரையைத் துவங்குகின்றேன். நமது மாநிலத்தின் மொத்த வருமானத்தில் இந்த வரிகளுடைய பங்கு சுமார் 68 சதவீதமாகும். இந்த அளவுக்கு வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய இந்தத் துறை மிகவும் சீர்பாட்டோடு, ஒழுங்காக நடைபெறுவதற்கு இந்த அரசு தேவையான முயற்சிகளை செயல்படுத்தி வருகிறது என்பதை நாம் அறிவோம்.

கடந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு சலுகைகளை நியாயமான முறையில் வழங்கினார்கள். அதைப் பலரும் பாராட்டினார்கள். அதிகாரிகள் உள்ளிட்ட சிலர் 'அரசுக்கு வருவாய் குறைந்துவிடும், அரசை எப்படி நடத்துவது' என்று விமர்சனம் செய்துள்ளனர். அவர்களுடைய கூற்று தவறானது என்பதை நிரூபிக்கின்ற வகையில் 1995-96-ஆம் நிதியாண்டைவிட 1996-97-ல் சுமார் 150 கோடி ரூபாய் வரிவசூல் உயர்ந்து ரூ. 5,150 கோடி

அளவுக்கு வரி வரவு வந்திருக்கிறது. இதிலிருந்து நாம் ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். வியாபாரிகளிடத்திலே ஒரு பழமொழி உண்டு.

'அதிக லாபம், குறைந்த விற்பனை, குறைந்த லாபம்
குறைந்த லாபம், அதிக விற்பனை, அதிக லாபம்'

என்பார்கள். அதைப்போல், வரிக் குறைப்பால், வரி ஏய்ப்பைக் குறைத்து, அதிகமானவர்கள் வரி செலுத்துகின்ற வாய்ப்பை ஏற்படுத்தி வருமானத்தைப் பெருக்கியிருக்கிறது இவ்வரசு.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்) தலைமை)

வரி அதிகமாக இருந்தால் கெட்ட நோக்கமுடைய சில வியாபாரிகள், கெட்ட நோக்கம் கொண்ட அதிகாரிகளோடு கூட்டு சேர்ந்து வரியை ஏய்த்து, அவர்களுடைய பொருள்களை மார்க்கெட்டிலே விற்கின்றபோது, உண்மையிலே வரியைச் செலுத்தி வரக்கூடிய வியாபாரிகளால் அந்த வியாபாரப் போட்டியிலே பங்குபெற முடியாமல் போகின்றது. இதைக் கருத்தில் கொண்டு வரியைக் குறைத்து, வரி ஏய்ப்பைத் தடுத்து, 'குறைந்த வரிதானே, ஏன் பிரச்சினை, வரியைச் செலுத்திவிடலாம்' என்று வியாபாரிகள் வியாபாரத்தை ஒழுங்காகச் செய்து, இந்த ஆண்டிலேதான் வரி வருவாய் அதிகமாக வந்துள்ளது. ஆகவே வரிக் குறைப்புச் சலுகைகளை வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சோதனைச் சாவடிகளை நீக்கி சுழற்படையை அமைப்பது என்ற நிலையை இந்த அரசு எடுத்திருக்கிறது. சுழற்படை என்பது நடைமுறைக்கு ஒத்துவராதது. நடைமுறையில் வரி ஏய்ப்பை சுழற்படை முழுமையாகத் தடுக்க முடியாது. உதாரணமாக கடந்த 2-4-1997 அன்று என்று நினைக்கிறேன். போரூர் செக் போஸ்ட் அருகே டேங்கர் நிறைய ஃபாம் ஆயில் பிடிக்கப்பட்டது. அந்த ஃபாம் ஆயில் டேங்கர் பிடிபட்டவுடன், அந்த லாரியிலிருந்து ஒருவர் இறங்கிச் சென்று, அவர்களுடன் பின்னால் வந்த சுமார் 8 டேங்கர்களை வழிமறித்து, வேறு வழியாக, பெருங்களத்தூர், தாம்பரம் வழியாக சென்னைக்கு திருப்பி அனுப்பியதாக நாம் செய்திகளை அறிகிறோம். இதுமாதிரி அதிகமான டேங்கர்களில் கடத்தப்பட்டு, உள்ளே வருவதால் நமக்கு நிறைய வரி இழப்பு ஏற்படுகிறது.

ஆகவே இந்த சுழற்படைத் திட்டத்தை மீண்டும் நீக்கி தேவையான இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைத்து, நியாயமான முறையில் வரியை வசூலித்து, வருவாயைப் பெருக்க இவ்வரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைத் துறைமுகத்தில் நமது தமிழ்நாட்டிற்குத் தேவையான பல்வேறு பொருட்கள் இறக்குமதி ஆகின்றன. குறிப்பாக ஃபாம் ஆயில், ஸ்க்ராப், கம்ப்யூட்டர் சாதனங்கள், கெமிக்கல்ஸ், டிம்பர், பருப்பு வகைகள் எலக்ட்ரானிக் ஐட்டம்ஸ் ஆகியவைகள் இறக்குமதி ஆகின்றன. அந்தப் பொருட்களுக்கு மத்திய சுங்கத் தீர்வை விதிக்கப்பட்டு, வெளியிலே எடுத்துச் சென்று விடுகிறார்கள். அவர்கள் வெளியிலே எடுத்துச் செல்லும்போது மாட்டினாலோ அல்லது தானாகவே வந்து காட்டினாலோதான் வரி விதிக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. ஆகவே ஹார்பர் வெளி வாயிலில் 'சேல்ஸ் டேக்ஸ் செக் போஸ்ட்' அமைத்து, அங்கே வரியைச் செலுத்திவிட்டு, உள்ளூருக்கு எடுத்துச் செல்கின்ற நிலையை ஏற்படுத்தினால் நாம் இன்னும் அதிகமான வருவாயை ஈட்ட முடியும். ஆகவே இதை அரசு கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வெட்டிங் கார்டு. வெட்டிங் கார்டு என்றாலே கவருடன் கூடிய கார்டு என்றுதான் பொருள். ஆனால், வெட்டிங் கார்டுக்கு என்று குறிப்பிட்ட தலைப்பு, 'செப்பரேட் ஹெட்டிங்' இல்லாததாலே, வெட்டிங் கார்டுக்கு 11 சதவீத வரியும், அதை வைக்கக்கூடிய கவருக்கு 8 சதவீத வரியும் போடுகின்ற நிலைமையால் பல குளறுபடிகள் நடந்து கொண்டிருக்கின்றன. வெட்டிங் கார்டுக்கு ஒரு வரி, வெட்டிங் கார்டைப் போடும் கவருக்கு ஒரு வரி என்றிருந்தால் குழப்பம் ஏற்பட்டு ஊழலுக்கு வழிவகுக்கும். ஆகவே வெட்டிங் கார்டு என்பது கவருடன் சேர்ந்ததுதான் என்பதை கருத்தில் கொண்டு, இரண்டுக்கும் சேர்த்தே ஒரே வரியை விதித்து, இந்தக் குழப்பத்தைப் போக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பிரிண்டிங் செய்யப்படாத கார்டுகளுக்கு 5 சதவீத வரி, பிரிண்ட் செய்யப்பட்ட கார்டுகளுக்கு 8 சதவீத வரி, இரு வகையான வரிகள் விதிக்கப்படுகின்றன. வியாபாரிகள் பொருட்களை விற்கும்போது, அனைத்து 'க்ரீட்டிங்ஸ்'-ம் 'பிரிண்ட்' செய்யப்படாமல்தான் விற்கப்படுகின்றது என்று குறிப்பு எழுதி, விற்றுவிடுவதால், வரி ஏய்ப்புச் செய்யப்படுகின்றது. இதிலும்

குளறுபடிகள் நிலவுகின்றன. தவறுகள் நடைபெறுகின்றன. இதற்கு அதிகாரிகளே வழிகளைச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். ஆகவே, இதிலுள்ள குளறுபடிகளை நீக்கி, இரண்டிற்கும் ஒரே விதமான வரியை உண்டாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதேபோன்று, பிரிண்டிங் பேப்பருக்கு 4 சதவிகிதம் வரி என்று ஏற்கெனவே வரிச்சலுகையினை அறிவித்தார்கள். மற்ற பேப்பர்களுக்கெல்லாம் 8 சதவிகிதம் வரி என்றிருக்கிறது. ஆனால், அனைத்து பேப்பர்களும் பிரிண்டிங்கிற்குப் பயன்படுவதுதான். இந்த நிலையில் கம்பெனிகளிலிருந்து பேப்பர் வெளிவருகின்றபோது, அதிகமாக விற்பனை ஆகக்கூடிய மேப் லித்தோ போன்ற பேப்பர்களுக்குக்கூட, பிரிண்டிங் பேப்பர் என்று பேக்கேஜிலே முத்திரையிட்டு வருவதால், அதற்கு 4 சதவிகித வரி என்று சொல்லி, ஊழல் நடந்துகொண்டிருக்கின்றது. இதற்கு அதிகாரிகளே வழிகளைச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். ஆகவே, இதுபோன்ற வேறுபாடுகள் இருந்தால் ஊழல் நடைபெறுவதுடன், நிர்வாகக் கோளாறுகளும் ஏற்படும். ஆகவே, பேப்பர் என்றால், இவ்வளவு சதவிகிதம்தான் வரி என்று ஒருமித்த, ஒரேமாதிரியான வரியை இந்த அரசு கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஈ.ஐ. பேசிஸ்ஸில், சி.எஸ்.டி. கொடுத்து, 4 சதவிகித வரிச் சலுகை பெற்று, வெளி மாநிலத்திலேயிருந்து வரப்பெற்ற பேப்பர்களை வைத்து நோட்டு தயாரிப்பவர்களுக்கு வரியும், உள்ளூரிலே பேப்பர் வாங்கி நோட்டு தயாரிப்பவர்களுக்கு வரி விலக்கும் அளிக்கப்பட்டுள்ளது. அதை நான் தவறு என்று கூறவில்லை. வரவேற்கின்றேன். அதேசமயம், இந்தக் கல்வியாண்டிற்காக சென்ற ஆண்டே பேப்பரை வாங்கி, இருப்பு வைத்து, நோட்டு தயாரித்து விற்பனை செய்ய இருக்கின்றார்கள். இதிலும் ஊழல் நடப்பதற்கு வழிவகையுண்டு. ஆகவே, அப்படி பேப்பரை வாங்கி வைத்திருப்பவர்களுக்கு கால அவகாசம் கொடுத்து, வரும் ஆண்டுகளில் நடைமுறைகளில் மாற்றம் வருகின்றது என்பதைச் சொல்லி, வரும் ஆண்டுகளிலிருந்து உள்ளூரிலேயே பேப்பரை வாங்கி, நோட்டுக்களைத் தயாரித்து, உள்ளூர் வர்த்தகத்தைப் பெருக்குவதற்கு ஆவன செய்யும் பொருட்டு, அவர்களுக்குக் கால அவகாசம் வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் எவ்வளவோ பொருட்களுக்கு வரிச்சலுகை அளித்துள்ளோம். எவ்வளவோ பொருட்களுக்கு வரிக் குறைப்பும், வரி இல்லாமலும் செய்திருக்கின்றோம். ஆனால், முக்கியமாக, மக்கள் தினமும் பயன்படுத்தக்கூடிய 'எடிபிள் ஆயிலுக்கு' நாம் வரிவிலக்கு அளிக்கவில்லை. சமையல் எண்ணெயைப் பொறுத்தவரையில், எண்ணெய் வித்துக்களுக்கு 4 சதவிகித வரியும், உற்பத்தி செய்யப்பட்ட எண்ணெய்க்கு 4 சதவிகித வரியும், மொத்தம் 8 சதவிகித வரியினை விதித்திருக்கின்றோம். கெட்ட நோக்கமுடைய சில வணிகர்கள், கெட்ட நோக்கமுடைய சில அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டு, வரியை ஏய்த்து, மார்க்கெட்டிலே குறைந்த விலைக்கு விற்பனை செய்வதனால், உண்மையிலேயே வரி செலுத்தக்கூடிய வியாபாரிகள் போட்டியிலிருந்து பின்வாங்கக்கூடிய நிலை ஏற்படுகின்றது. இதுபோன்ற நிலையைப் போக்கவும், மற்ற மாநிலங்களில் உள்ளதைப்போல வரி விகிதம் இருந்திடவும்--நான் அந்த வரியை எடுத்து விடுங்கள் என்று கூறவில்லை. வரியைக் குறைக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன்--வரி ஏய்ப்பைக் குறைக்கும் வகையில், அதற்குப் போடப்பட்டுள்ள வரியைக் குறைத்து, நியாயமான முறையில், அவர்களே, தாங்களாக முன்வந்து வரியைச் செலுத்தக்கூடிய நிலையினை உருவாக்கிட இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மினரல் வாட்டர், மினரல் வாட்டரைப் பொறுத்தவரை, அது ஆடம்பரம் என்று கருதுகிறார்கள். அது தவறானது. அதனை ஆடம்பரம் என்று சொல்ல முடியாது. சுத்தம், சுகாதாரம் என்று பல வழிகளில் இந்த மினரல் வாட்டர் பயன்படுகின்றது. மினரல் வாட்டரைப் பயன்படுத்தினால், உடல்நலத்திற்குச் சுகம்தான் ஏற்படுகின்றதே தவிர, அதனால் தீங்கு ஏற்படுகின்றது என்று கூற முடியாது. பின்னால் வரக்கூடிய செலவுகளை, மருத்துவச் செலவுகள் உள்ளிட்ட பல செலவுகளை மிச்சப்படுத்துகின்ற வகையில் இந்த மினரல் வாட்டர் பயன்படுகின்றது. ஆனால், அதற்கு வரி போடப்பட்டிருக்கின்றது. உப்புக்கே வரி போடக்கூடாது என்று காந்தியடிகள் கூறியிருக்கின்றார்கள். இந்த நிலையில், இந்த நாட்டில் தண்ணீருக்கு வரியா என்ற நிலையைக் கருத்தில் கொண்டு, முடிந்தவரை அந்த வரியை எடுத்து விடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லையென்றால்

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய

வாதத்தை நிலைநாட்டுவதற்காக, தண்ணீருக்கு வரியா என்று மககள் கேட்பதாகச் சொன்னார்கள். ஒரு லிட்டர் பாலின் விலை 7 ரூபாய்தான். ஆனால், ஒரு லிட்டர் தண்ணீரை 14 ரூபாய், 15 ரூபாய் கொடுத்து வாங்கிச் சாப்பிடுகின்ற அளவிற்கு வசதி வந்திருக்கும்பொழுது, கூடுதலாக ஒரு பத்து பைசா கொடுப்பதிலே தவறில்லை என்று இந்த அரசு கருதுகின்றது.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு லிட்டர் தண்ணீரை 16 ரூபாய்க்கு விற்றால் அதற்கு நாம் வரி போடுவதில்லை. ஆனால், பாட்டிலிலே வைத்து விற்கக்கூடிய மினரல் வாட்டருக்குத்தான், ஒரு லிட்டருக்கு 10 ரூபாய். ஆனால், 12 லிட்டர் கன்டெய்னர்களில அந்த மினரல் வாட்டர் இப்பொழுது விற்கப்படுகிறது. அதனுடைய விலையும் ரூ. 16 தான். ஆக, அந்தத் தண்ணீரினுடைய விலை ரூ 1.33 ஆகின்றது. அதேபோன்று, கூலி வேலை செய்கின்றவர்கள்கூட, காலையிலே ஒரு வேளை, மாலையிலே ஒரு வேளை காபியோ, டீயோ குடித்தார்களென்றால், ஒரு நாளைக்கு ரூ. 6 ஆகின்றது. ஆனால், ஒரு லிட்டர் தண்ணீருக்கு, சுத்தமான தண்ணீருக்கு ஒரு ரூபாய் செலவிடுவோமானால்-இன்றைக்குக் காலையிலேகூட பேசப்பட்டதே, தண்ணீரினால் பரவக்கூடிய நோய்களைப் பற்றி, அதனுடைய கொடுமைகளைப் பற்றி--நலமாக இருக்கும். இந்த மினரல் வாட்டரைப் பணக்காரர்கள், வசதியுள்ளவர்கள்தான் வாங்கிச் சாப்பிடமுடியும் என்ற நிலையை மாற்றி, ஏழையெளிய மக்களும், குடிசையிலே வாழ்கின்ற ஏழையெளியவர்களும், கூலித் தொழிலாளர்களும் வாங்கிச் சாப்பிட முடியும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால்தான், சுகாதாரம் வளர்ச்சி அடையும் என்ற கருத்தையும் நீங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சாமானியப்பட்ட மக்கள் வாங்குவதற்கு உரிய முறையிலே இருக்க வேண்டுமென்று. நான் கேட்டுக்கொள்வது எல்லாம், உண்மையிலேயே அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நான் முழுமையாக உடன்படுகிறேன். ஒரு லிட்டர் பால் 8 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால், ஒரு லிட்டர் தண்ணீரை

16 ரூபாய்க்கு விற்கிறார்கள். எனவே, நான் மாநில அரசை என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால், ஒரு விலை அளவை, நியாயமான விலை அளவைத் தீர்மானிப்பதற்கு, மாநில அரசு முன்வருமா? 'பாட்டில்' வியாபாரம் என்பது பெருத்துவிட்டால், அது சாமானியப்பட்ட மக்கள் வாங்க முடியாத அளவுக்கு விலை அதிகரித்துக் கொண்டிருப்பதால், அந்த விலைக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்க, மாநில அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தண்ணீரை, தனிப்பட்ட முறையிலே ஒரு லிட்டர் பாட்டிலிலே விற்றால்தான் அந்த விலைக்கு விற்கப்படுகிறதேயொழிய, மொத்தமாக விற்றால், ஒரு ரூபாய் 30 பைசாவுக்குத்தான் விற்கப்படுகிறது. இன்று ஏழை மக்கள், கண்ட தண்ணீரைக் குடித்து உடலைக் கெடுத்துக் கொண்டு, நாளைக்கு மருத்துவச் செலவு என்று ஆயிரம், ஐநூறு செலவு செய்ய வேண்டும் என்பது ஏன்?

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்குத்தான் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் யோசனை ஒன்றைச் சொன்னார்கள். ஏழைகள் தங்களுக்குக் கிடைக்கிற தண்ணீரைக் காய்ச்சிக் குடித்தாலே போதும். அந்தப் பழக்கத்தைக் கொண்டு வந்து விட்டாலே, இவ்வாறு வரும் வரிகள் தொந்தரவிலிருந்து விடுபடலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீட்டிலே இருக்கிறவர்கள் தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கலாம். ஆனால், அன்றாடம் வெளியிலே செல்லக்கூடியவர்கள், அல்லது சுற்றுலா செல்லக் கூடியவர்கள், தங்களுடைய வேலை நிமித்தமாக வெளியூர் செல்லக்கூடியவர்களுக்கெல்லாம் அது சாத்தியம் அல்ல. மேலும், உணவு விடுதியிலே கொடுக்கக்கூடிய தண்ணீரின் தன்மை மிகவும் மோசமானது. குறிப்பாக, காமாலை வியாதி, அமீபியாஸிஸ், இன்று காலையிலே சொல்லப்பட்ட 'லெப்டோ ஸ்பைரோஸிஸ்' இவை போன்ற பல வியாதிகளும், காலரா, டைபாய்டு போன்ற வியாதிகளும் தண்ணீர் மூலமாகத்தான்

பரவுகின்றன. எனவே, மக்களுக்குப் பொதுவாக இதுபோன்ற பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதை மிகக்குறைந்த விலையில் கொடுப்பதுதான் சரியானது. அது பல வியாதிகளைக் கட்டுப்படுத்தவும் செய்யும்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கார் போன்ற பல பொருட்கள் ஒரு காலத்திலே ஆடம்பரப் பொருட்களாக இருந்தன. இன்று அவை அத்தியாவசியப் பொருட்களாக மாறிவிட்டன. ஒரு காலத்திலே 'மினரல் வாட்டர்' என்பது, நம்முடைய தமிழ்நாட்டு மக்களால், ஆடம்பரப் பொருட்களாகக் கருதப்பட்டது. இன்று அது அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்ட சூழ்நிலையில், அதற்கு வரிக் குறைப்பு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே, மது வகைகளுக்கு விற்பனை வரி கூட்டப்படவில்லை. 'வெண்ட் ஃபீண்' மட்டும் கூட்டப்பட்டிருக்கிறது. மது வகைகளுக்கு மேலும் வரிகளைக் கூட்டுவது தவறில்லை என்கிற எனது கருத்தையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

சில இரசாயனப் பொருட்களுக்கு மற்ற மாநிலங்களிலே வரிச் சலுகை, வரிக் குறைப்பு செய்திருக்கிறார்கள். அந்த நிலையைத் தமிழ்நாட்டில் உருவாக்க வேண்டும். இங்கே 11 சதவிகிதம் அவற்றிற்கு விதிக்கப்படுகிறது. அவற்றை இங்கே குறிப்பிடுகிறேன். காஸ்டிக் சோடா, சோடா ஆஷ், சோடியம் ஹைட்ரோஸ் சல்ஃபைட், ஆசிடிக் ஆஸிட் போன்ற பொருட்களுக்கு வரியைக் குறைத்து நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, அவை விற்பனைக்கு வரும்போது, 8 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. அதே நேரத்தில், உடைந்த பழைய பிளாஸ்டிக் பொருள்களைக் கையாளும் வியாபாரிகளிடமும், இதே வரியை விதிப்பது முறையல்ல. ஆகவே, அதையும் குறைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அடுத்து, கன்ஸ்யூமர் சேல்ஸ். இந்த கன்ஸ்யூமர் சேல்ஸில், சி.எஸ்.டி. போட்டு மற்ற மாநிலங்களிலிருந்து பொருட்களை வாங்கும்போதும் சரி, ஃபார்ம் 20 மூலம் மற்ற மாநிலங்களுக்குப் பொருட்களை விற்கும்போதும் சரி, இந்த நிலையை வியாபாரிகள்

ஏற்றுக் கொள்ளுமாறு, அவர்களை மிரட்டி, அவர்களிடமிருந்து அதிகமாக இலஞ்சத்தைப் பெற முயல்வது, தொன்றுதொட்டு நடைபெற்றுக் கொண்டே வருகிறது. இதனைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்குப் போதுமான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதேநேரத்தில், கடந்த 2-4-1997 அன்று, அண்ணாசாலை, வணிக வரித் துறையைச் சார்ந்த சி.டி.ஓ.-வும், டி.சி.டி.ஓ.-வும், 1½ இலட்சம் ரூபாய் வியாபாரியிடமிருந்து இலஞ்சம் கேட்டதற்காக மாட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஆகவே, இதுபோன்ற நிலைகளைத் தடுத்து, இதற்கு ஒருங்கிணைந்த ஒரு நடைமுறையைப் பின்பற்றுவதற்கு, இவ்வரசு வழிவகைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்னொரு கருத்தையும் நான் இந்தச் சபைக்கு வைக்க விரும்புகிறேன். வெளியிலே சிலரும் சரி அல்லது நம்முடைய உறுப்பினர்கள் சிலரும் சரி, விலைவாசி உயர்வுக்கு அரசு மற்றும் வியாபாரிகள்தான் காரணம் என்ற ஒரு தவறான கருத்தை வைத்து உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறானது. விலைவாசி உயர்வுக்கு வியாபாரியோ அல்லது அரசோ எப்படி காரணமாக இருக்க முடியும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விலைவாசி உயர்வு என்பது, அந்த மாநிலத்தில் ஏற்படக்கூடிய, அந்தப் பொருளினுடைய சப்ளையையும், அந்தப் பொருளினுடைய தேவையையும் அடிப்படையாக வைத்துத்தான் விலை என்பது உருவாகிறது. ஒரு பொருளின் சப்ளை ஒழுங்காக இருக்கும்போது, அந்தப் பொருளின் விலையும் ஒழுங்காக இருக்கும். சப்ளை அதிகரித்து தேவை குறைந்தால் விலை குறையும். சப்ளை குறைந்து டிமாண்ட் அதிகரித்தால் விலைவாசி உயர்வுதான் ஏற்படும். ஆகவே இதற்கு இந்த அரசோ அல்லது வியாபாரிகளோ காரணமானவர்கள் அல்ல. வியாபாரிகளைப் பொறுத்தவரையில் ஒருவர் 10 சதவிகித ஆதாயத்தில் ஒரு பொருளை விற்க முன்வருகிறார் என்றால் போட்டி போட்டுக் கொண்டு பக்கத்தில் இருப்பவர் 11 சதவிகிதத்திற்கு விற்கமாட்டார். 9 சதவிகிதத்திற்கு விற்று பக்கத்திலுள்ள வியாபாரியினுடைய வியாபாரத்தை கெடுக்கத்தான் நினைப்பார். இதுபோன்ற நிலைகளில் அரசைக் குற்றம்சாட்டுவது தவறு. அதேசமயத்தில் அந்த அரசுக்கு விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய பொறுப்பும் உண்டு என்பதையும் கூறிக்கொண்டு இன்னொன்றையும் கூறி விடைபெற உள்ளேன். *(மணியடிக்கப்பெற்றது).*

பிற்பகல் 12-25

விற்பனை சீரமைப்புக் குழு என்ற ஒரு குழுவை அமைத்தார்கள். அதிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு திரு. சொக்கர் அவர்களும், மாண்புமிகு திரு. ராஜ்குமார் மன்றாடியார் அவர்களும் உறுப்பினர்களாக இருந்து நல்ல முறையிலே செயலாற்றினார்கள் என்பதையும் நாம் கேள்விப்பட்டோம். அந்தக் குழுவின் அறிக்கையை அரசுக்கு அளித்து அது பரிசீலிக்கப்பட்டு வணிக வரிகள் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதை தெரிவித்தால் அவர்கள் எவ்வாறு செயல்பட்டிருக்கிறார்கள், அவர்களுடைய நிலை என்ன, அதுபற்றி இந்த அரசினுடைய முடிவு என்ன என்பதை நாங்கள் அறிந்துகொள்ள வசதியாக இருக்கும். ஆக அவற்றையும் தெரிவிக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்தமைக்கு உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. இராமலிங்கம்): திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிருவாகம் விவாதத்தில் கலந்து கொள்கிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் துறை அரசாங்கத்திற்கே ஒரு அச்சாணியாக, ஒரு ஆதாரமாக இருக்கக்கூடிய ஒரு துறை. இந்தத் துறை 1996-97 பிப்ரவரி மாதம் வரையிலே கிட்டத்தட்ட 5137 கோடி ரூபாயை அரசுக்கு வருவாயாக ஈட்டித் தந்திருக்கக்கூடிய ஒரு துறை. வருவாயில் இது கிட்டத்தட்ட 70 சதவிகிதத்தை அரசாங்கத்திற்கு வருவாயாகப் பெற்றுத் தந்திருக்கிறது. இந்தத் துறை எப்படி அரசுக்கு ஒரு ஆதாரமாக இருக்கிறதோ அதேபோல அரசாங்கத்திற்குக் கெட்ட பெயரை உங்களுக்கும் தெரியாமல் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டிருக்கிற துறை என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது.

பொதுவாக இருக்கக்கூடிய துறைகளிலே இந்த வணிக வரிகள் துறை, அதேபோல ரிஜிஸ்ட்ரேஷன் அலுவலகம், ஆர்.டி.ஓ. அலுவலகம் என்ற இந்த 3 இடங்களும் லஞ்சம் குடிகொண்டிருக்கக்கூடிய இடமாகவே கருதப்படுகிறது. அங்கே மேல்மட்டத்திலே நாம் ஊழலை ஒழித்துவிட்டாலும்கூட, ஏ.சி.டி.ஓ. அலுவலகம் என்றாலோ, பத்திரப் பதிவு அலுவலகம் என்றாலோ, ஆர்.டி.ஓ. அலுவலகம் என்றாலோ மக்கள் லஞ்சத்தைக் கொடுக்க வேண்டுமென்று தயாராக பணத்தைக் கொண்டு போக வேண்டிய நிலைக்கு ஆளாக்கிக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் தடுக்க வேண்டுமென்பதற்காக வரி ஏய்ப்பை எப்படித் தவிர்ப்பது, லஞ்ச லாவண்யத்தை எப்படி ஒழிப்பது, லஞ்ச லாவண்யத்தினுடைய ஊற்றுக் கண்களை எப்படி நாம் அடைப்பது என்பதற்காக சீரமைப்பு என்கிற பெயரால் ஒரு குழுவை இந்தத் துறையிலே கொண்டு வந்திருக்கிறோம். இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற அந்தச் சீர்திருத்தக் குழுவைப் பற்றி பல சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர், அதேபோல திரு. மன்றாடியார் போன்றவர்களைக் கொண்டும் மற்றும் இந்தத் துறையிலே தேர்ச்சி பெற்றிருப்பவர்களை எல்லாம் கொண்டும் இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழு மும்பை, பெங்களூர், பாண்டி போன்ற இடங்களுக்கு எல்லாம் சென்று ஆய்வுகளை நடத்திவிட்டு வந்தது.

ஏற்கெனவே பல உறுப்பினர்கள் இந்த மாமன்றத்தில் சொன்னதைப் போன்று இந்தக் குழு மும்பையிலிருந்து தொடங்கி பெங்களூர் வரை பல மாநிலங்களைச் சுற்றிப் பார்த்து ஆய்வு செய்து அவர்கள் கண்டறிந்த உண்மைகளை இன்னும் நீங்கள் இந்த மாமன்றத்தின் முன்னால் வைக்கவில்லை. அதைத்தான் எங்களுடைய திரு. அழகராஜா அவர்கள் சொல்கிறபோது ஏன் இன்னும் அந்த சிவகாசி இரகசியம் வெளிப்படவில்லை என்றுகூடக் கேட்டார்கள். திரு. சொக்கர் அவர்கள் இந்தத் துறையிலே அதிகமான தேர்ச்சி பெற்றவர்கள். திரு. மன்றாடியாரும் அதேபோலத்தான். இந்தத் துறையிலே மிகவும் அனுபவசாலிகளாக இருக்கக்கூடிய அவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் வந்து சேர வேண்டும்.

அதேபோல, இந்தப் பணியை ஆற்றி என்னென்ன முறைகளை இவர்கள் இங்கே ஆலோசனைகளாகத் தந்திருக்கிறார்கள்; அந்த

ஆலோசனைகள் முழுவதும் இங்கே கடைபிடிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறியக்கூடிய ஒரு நிலையில் நாங்கள் இருக்கிறோம். காரணம் இந்த அரசு வெளிப்படையான அரசு என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள். 'டிரான்ஸ்ஃபரன்ஸி'-யில் தான் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்வார்கள். அப்படி வெளிப்படையாக இருக்கக்கூடிய அரசு இந்தச் சீர்திருத்தக் குழுவினுடைய அறிக்கையை மட்டும் ஏன் இன்னும் மறைத்து வைத்திருக்கிறது என்ற காரணம் எங்களுக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே அது குறித்து தெளிவாகக் குறிப்பிட்டு அவர்கள் என்ன ஆலோசனை தந்திருக்கிறார்கள்; அந்த ஆலோசனை அரசுக்கு வருவாய் ஈட்டக்கூடிய ஒன்றாக இருக்கிறதா என்பதை எல்லாம் நீங்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-30

அடுத்து, கடந்த ஆட்சி ஊழல் ஆட்சி என்பது நாட்டுக்கே நன்றாகத் தெரியும். ஊழலின் உச்சாணியில் இருந்தவர்கள் எப்படியெல்லாம் கொள்ளையடித்தார்கள் என்பதைப்பற்றி சி.ஏ.ஜி. ரிப்போட்டில் சொல்லப்பட்ட விஷயத்தை தாங்களே, மாற்றுத் தலைவராக இருக்கின்ற தாங்களே கொஞ்ச நேரம் கீழே இறங்கிச் சென்று பேசிவிட்டு, மீண்டும் நீங்கள் மாற்றுத் தலைவராக வந்து அமர்ந்து இருக்கிறீர்கள். நீங்கள்கூட அதைப்பற்றிக் குறிப்பிட்டீர்கள் (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வரி சீரமைப்புக் குழு என்ற ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு பல்வேறு கருத்துக்களை எல்லாம் சேகரித்து தன்னுடைய அறிக்கையை அரசுக்குத் தந்திருக்கிறது. அரசு அந்த அறிக்கையைப் பரிசீலித்த பிறகுதான் அவைக்குத் தெரிவிக்க இயலும். அதிலே ஒன்றும் இரகசியம் இல்லை. அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. பின்னர் இந்த அவைக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்லுவது எனக்கு வேடிக்கையாகவும், வினோதமாகவும்

இருக்கிறது. ஏனென்றால் நாங்கள் எல்லாம் 3, 4, மாதகாலம் கடுமையாக உழைத்து, ஒரு அறிக்கையைக் கொடுத்து, அதற்குப்பின்னர் 3, 4, மாதங்கள் ஆகிவிட்டது. நாங்கள் என்ன நினைத்தோம் என்றால், அந்த அறிக்கையைப் பரிசீலித்துத்தான் பட்ஜெட் போடுவதற்கு முன்பாகவும், அதற்குப் பிறகு இந்த மானியக் கோரிக்கையின்போதும் செய்திருப்பார்கள் என்றும் நினைத்தோம். (குறுக்கீடு) அதுதான் உண்மை என்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் வேளாண்மைத் துறை அமைச்சர் இன்னும் பரிசீலனை செய்யவில்லை, பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார். எங்களுக்கு ஒரு உண்மை நிலை தெரிய வேண்டும்.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே வரி சீரமைப்புக் குழு வழங்கியுள்ள பரிந்துரையைப் பற்றி விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்களுடைய சந்தேகம் நியாயமானது. அரசின் சார்பாக அந்தப் பரிந்துரைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து பல்வேறு வரிச்சலுகைகளைத் தந்திருக்கிறார்கள். இதிலே நிர்வாக சீர்திருத்தம் சம்பந்தமாக சில அறிவிப்புகள் வர இருக்கின்றன. அதற்குப் பின்னர், சம்பந்தப்பட்ட அறிவிப்புகள் கொடுத்த பல்வேறு குழுக்களை அழைத்து சில விளக்கங்கள் பெற்று, பரிந்துரைகளோடு கூடிய அரசினுடைய ஆணைகள் உட்பட அனைத்தும் இந்த அவையில் வைக்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் சார்பாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆர்வமும், ஆதங்கமும் மாண்புமிகு சொக்கர் போன்ற திறமைசாலிகள் எல்லாம் இதிலே சென்று அரிய பல கருத்துக்களை எல்லாம் அவர்களுடைய அறிக்கையிலே சொன்னது ஏன் எங்களுக்குக் கிடைக்கவில்லை? (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** அவர் வணிகர்கள் சார்பில் சென்றார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு அமைச்சர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர் வியாபாரியாக இருந்தாலும் மிகவும் தாராள மனப்பான்மையுடன் ஏழைகளுக்கு

உதவக்கூடிய நல்ல உள்ளம் படைத்தவர். அவர்கள் தந்திருக்கின்ற அறிக்கையை நீங்கள் வைத்தால்தான் எப்படி அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பதற்காக நான் சொன்னேன்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. ஞானசேகரன் சொல்லுவதில் எனக்கு ஒரு கருத்து வேறுபாடு உண்டு. அரசாங்கத்திற்கு எத்தனையோ விதமான அறிக்கைகள் வரும். சில அறிக்கைகள் குறித்து உடனடியாக வெளிப்படையாகச் சொல்ல இயலும். சில அறிக்கைகளை படிப்படியாக, ஒவ்வொரு காலகட்டமாகத்தான் சொல்ல முடியும். அந்த அறிக்கையிலே பலவிதமான கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கலாம். உடனடியாக வெளியே சொல்வோமானால், சில வியாபாரிகள் 'ஐயோ இவர்கள் பரிந்துரை செய்தும் அரசு ஏற்றுக்கொள்ளவில்லையே' என்றும் சில வியாபாரிகள் 'நாம் எவ்வளவோ மனுக்கள் கொடுத்தோம், பரிந்துரை செய்யவில்லையே' என்று எங்கள் மீது கோபப்படவும், ஆதங்கப்படவும் வாய்ப்பு உண்டு. வீட்டுக்கு அழைத்த ஒருவர் வரும்போது, சாப்பிட்டுக்கொண்டிருந்தால், வாங்க 'டைனிங் ஹாலில்' உட்காருங்கள் என்று சொல்லலாம். ஆனால் படுக்கை அறையில் இருக்கும்போது, வாருங்கள், வந்து பாருங்கள் என்று சொல்வதில்லை. ஆகவே எதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறது. ஆகவே, அரசு எடுக்கின்ற முடிவை இந்தக் கமிட்டி ஏற்றுக்கொள்ளும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாற்றுத் தலைவர் அவர்களே, 'டைனிங் ஹால்' வரைதான் சென்றிருக்கிறோம். படுக்கை அறைக்கு நாம் போகக்கூடிய நிலையில் இல்லை. இங்கே நான் சொல்லவந்த கருத்துக்கள் எல்லாம், கடந்த ஆட்சியில் நடந்த ஊழலைப் பற்றி நேற்று இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்ட சி.ஏ.ஜி. ரிப்போர்ட்டில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-35

தங்கத் தாலி, வெள்ளிக்கொலுசு, கோதுமைத் தவிடு போன்ற விற்பனைக்கு 12-3-1993 முதல் வரிவிதிப்புக்கு உட்பட்டதாக இருந்தபோதிலும், முந்தைய ஆணைகள்படி தவறாக விதிவிலக்கு அளிக்கப்பட்டதால் ரூ. 26.80 கோடி அரசுக்கு இழப்பு என்று மிகத்

தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தங்கத் தாலி, வெள்ளிக் கொலுசு போன்ற இந்தப் பொருட்கள் மீது விதிக்கப்பட வேண்டிய வரி விதிப்பை ஏற்கெனவே அந்த அரசு விதிக்காத காரணத்தாலே, 26.80 கோடி ரூபாய் இழப்பு. வெறும் இழப்பாக இருந்தாலும்கூட பரவாயில்லை. அந்த இழப்புகளுக்கெல்லாம் ஒரு பேரம் நடந்தது. அந்தப் பேரத்தின் வாயிலாக யார் யாருக்கு எங்கே இலாபம் என்பதையெல்லாம் நாம் கண்டறிந்தாக வேண்டும். ஆகவே, இது போன்ற நிலைகளையெல்லாம் தவிர்க்கும் பொருட்டுதான் இந்தச் சீரமைப்புக் குழு என்ற ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த இடத்திலே அமைத்து, அவர்கள் பல மாநிலங்களுக்குச் சென்று, அந்த மாநிலங்களிலே அவர்கள் பெற்றிருக்கக் கூடிய அனுபவங்களையெல்லாம் இங்கே வெளிப்படுத்தி பல கருத்துக்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் சில கருத்துக்களை நாங்கள் படிப்படியாக நிறைவேற்றுவோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை "சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்பது. ஆனால், இந்த அதிகாரிகள் அவர்களைச் செய்ய விடுகிறார்களா என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. இதிலே நான் எல்லா அதிகாரிகளையும் குறை சொல்லவில்லை. நிதிநிலை அறிக்கையிலே கூட, 179-வது பாராவில் "விற்பனை வரி சீரமைப்புக் குழு விற்பனை வரி விதிப்பு முறையை எளிமையாக்குவது தொடர்பாக பரிந்துரைகள் செய்துள்ளது. இது பரிசீலிக்கப்பட்டு அரசின் முடிவுகள் வணிகவரித் துறையின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்படும்" என்று மிகத் தெளிவாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதிலே இன்று சில அறிவிப்புகளை நீங்கள் அறிவித்தால்தான், நிச்சயமாக செய்வதைச் சொல்வதற்கும், சொல்வதைச் செய்வதற்கும் அரசு இங்கே ஒரு உறுதி பூண்டு செயல்படுகிறது என்ற பொருளாகும். 'சொன்னதைச் செய்ய விடமாட்டோம்' என்று அதிகாரிகள் நண்டு போல நம்முடைய காலை இழுக்கிறார்கள். அதை மீறி நீங்கள் செயல்படாவிட்டால், இந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் அதிகாரிகளே என்று ஆகிவிடும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்தக் குழுவினுடைய பரிந்துரையை முழுமையாக ஏற்று நீங்களாக ஒரு முடிவுக்கு வந்து அரசுக்கு வருவாயை ஈட்டித் தரவேண்டுமென்பதுதான்.

இந்த நகை வியாபாரங்களைப் பொறுத்தளவில், இப்போது நீங்கள் ஒரு புதிய சீரமைப்புத் திட்டத்தைத் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதாவது 'கம்பௌண்டிங்' முறையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்த 'கம்பௌண்டிங்' முறை சென்ற ஆட்சியிலும் முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அப்போது 7 கோடி ரூபாய் பேரம் கேட்ட காரணத்தினாலே அப்போது அது தடைப்பட்டு போய்விட்டது. இப்போது அந்த 'கம்பௌண்டிங்' முறையை எல்லா நகை வியாபாரிகளும் வரவேற்கிறார்கள். இதனை நகை வியாபாரிகள் வரவேறகக்கூடிய இதே நேரத்தில் நான் ஒன்றை அரசுக்கு ஆலோசனையாக சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதிலே 'கிராஸ் டார்ன் ஓவர்' என்ற அடிப்படையில் வரிவிலக்கு இருப்பதற்கு பதிலாக, இப்போது 'கிராஸ் சேல்ஸ்' என்ற அடிப்படையிலே இன்று வரி விதிக்கப்படுகிறது. காரணம் இந்த 'பார்ச்சேஸ்' ஏற்கெனவே அடங்கி விடுகிறது. அப்போது 'கிராஸ் சேல்ஸ்' என்ற அடிப்படையிலே வரி விதிக்கப்படுகிறபோது, இந்த அதிகாரிகள் நகை வியாபாரிகளிடம் மீண்டும் மீண்டும் போய் மிரட்டி பணம் பறிக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே, நீங்கள் 'கிராஸ் சேல்ஸ்' முறை என்பதற்குப் பதிலாக 'கிராஸ் டார்ன் ஓவர்' என்ற அடிப்படையில் வரிவிதிப்பு செய்ய வேண்டும். அப்படி செய்வீர்கள் என்று சொன்னால், உதாரணமாக 9 கோடி ரூபாய் கிடைக்கும் என்று இருந்தால், அதிலே 25 கோடி ரூபாயாக தாங்களாகவே அவர்கள் கணக்கைக் கொடுத்து பணம் கொடுப்பதற்கான ஒரு சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாலிக்கு இருந்த வரியை ஏற்கெனவே நீக்கினார்கள். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் குறிப்பிடும்போது தாய்மார்களுக்கு வாழ்வு அளித்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். தாலிக்கு நீங்கள் வரி விலக்கு அளித்தால் மட்டும் போதாது. நம்முடைய பெண்கள் அழகுக்கு பேர் போனவர்கள். அழகுக்கு அழகு சேர்க்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் மற்ற ஆபரணங்களையும் போட்டாக வேண்டும். ஆடவர்கள் அவர்களை விட்டபாடில்லை. திருமணத்தின்போது அவர்களுடைய பெற்றோர்கள் 'டௌரி' என்ற பெயரில் இல்லாவிட்டாலும், நீங்கள் போடுவதைப் போட்டு அனுப்புங்கள் என்று சொல்கிறபோது, பெண்களுக்கு நகையென்பது ஒரு அத்தியாவசியப் பொருள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பெண்களுக்கு 15 சவரன் வரை

வரிவிதிப்பே கூடாது என்ற நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து அவர்களுக்கு அந்த வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, 'கன்சைன்மென்ட் சேல்ஸ்' என்ற ஒன்று இருக்கிறது. இந்த 'கன்சைன்மென்ட் சேல்ஸ்'-ல் ஏற்கெனவே இப்போது இருக்கக்கூடிய 'இண்டர்ஸ்டேட்' வியாபாரத்தில் 'கன்சைன்மென்ட் சேல்ஸ்'லே கடந்த வியாபாரத்தையெல்லாம் இப்போது 'ரீ ஓப்பன்' செய்து 5 ஆண்டுகளுக்கு மீண்டும் கணக்கிட்டு, அந்த 5 ஆண்டுகளுக்கு அவர்கள் எப்படியெல்லாம் வரி ஏய்ப்பு செய்கிறார்கள் என்று சொல்லி 10% வரியும் சேர்த்து அதோடு 150% அபராத வரியையும் இப்போது போட்டு அவர்களுடைய 'அக்கௌண்ட்டையே' இப்போது பிடிப்புச் செய்கிறார்கள். அவர்களுடைய கணக்கே இப்போது முடக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே பொள்ளாச்சியில் மிளகாய் வியாபாரத்தைப் பற்றி, வத்தல் வியாபாரத்தைப் பற்றி எல்லாம் சொன்னார்கள்.

பிற்பகல் 12-40

அதேபோல, துணிகளை ஏற்றுமதி செய்யக்கூடிய 'எக்ஸிம் ஸ்கிரிப்ஸ்'-ஆர்.இ.பி. லைசென்ஸ் பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தவர்கள் இறக்குமதி செய்ததற்கான கணக்குகளையெல்லாம்கூடக் காட்ட வேண்டிய நிலை உள்ளது. இதிலே அசஸிங் ஆபீஸர்களுக்கு, அதாவது ஏ.ஓ'ஸ்-களுக்கு அதிகமான அதிகாரத்தை நாம் கொடுத்திருக்கிறோம். அந்த அசஸிங் ஆபீஸர்களுடைய சப்ஜக்டிவ் சேட்டிஸ்ஃபேக்ஷன் இல்லை என்ற அளவுக்குச் சொல்லி, அவர்கள் அடிக்கடி அங்கே சென்று கணக்குகளைக் காட்டவேண்டும் என்று தொல்லை செய்து வருவதால் இன்றைக்கு சாயத் தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்க முடியாத நிலை, எதற்குமே கூலி கொடுக்க முடியாத நிலை உள்ளது. மிளகாய் வியாபாரிகள் ஏற்கெனவே கடந்த காலத்தில் பணம் ஈட்டினார்களோ, ஈட்டவில்லையோ, அதற்கெல்லாம் இப்போது கணக்குக் கேட்டு அவர்களை வதைப்பதை அரசு தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வரி விலக்கு, வரிக் குறைப்பு, தவறான வரி விதிப்பு, நோட்டிஃபிகேஷன் தெளிவாக இல்லை, நீதிமன்றத் தீர்ப்பை எப்படி அமல்படுத்துவது, சட்டத்திலே இருக்கக்கூடிய குழப்பங்கள்

இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்பதற்காக ஒரு ஆலோசனையை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நாம் வரிகளைப் போட்டு, பின்னர் எடுத்துவிட்டாலும், அரசாங்கத்தின் மீது ஏதாவது ஒரு உள் அர்த்தம் கற்பித்து, அரசாங்கம் இதிலே ஏதோ பேரம் பேசிவிட்டது என்று நினைத்து, நினைத்து நாம் சில காரியங்களைச் செய்யாமல் விட்டு விடுகிறோம். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு ஆலோசனை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் 7 பேர்களைக் கொண்ட ஹைலெவல் கமிட்டி ஒன்றை அமையுங்கள். அதிலே சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்தத் துறையிலேயிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள், இதே துறையிலே ஏற்கெனவே ஜட்ஜாக இருந்து ரிடையர் ஆனவர்கள் ஆகிய 7 பேர்களைக் கொண்டு ஹைலெவல் கமிட்டி ஒன்றை நிரந்தரமாகப் போட்டு, எந்தெந்தப் பொருட்களுக்கு வரி விலக்களிக்கலாம், எந்தெந்தப் பொருட்களுக்கு வரியைக் குறைக்கலாம் என்ற நிலையினை நீங்கள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர். அவருடைய எழுத்து எல்லோரையும் கவரக்கூடிய சக்தி படைத்தது. அவர் ஒரு எழுத்தாளர் என்கிற காரணத்தால் இன்று அவர்கள் பிரிண்டிங் பேப்பருக்கு 8 சதவிகித வரி என்பதை 4 சதவிகிதமாகக் குறைத்துள்ளார்கள். ஆனால், பிரிண்டிங் பேப்பர் எது என்பதற்கு இன்னும் மாபெரும் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் அதற்குண்டான கிளாரிபிகேஷன் எதுவும் இல்லை. இன்னும் 8 சதவிகிதம் வரியை விதித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி முதல்வர் அவர்கள் சொல்லியே நடக்கவில்லை என்று சொன்னால், பிறகு யார் சொல்லி இந்த அதிகாரிகள் செய்யப்போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதற்கே இன்னும் விளக்கம் பெறமுடியாமல் நாம் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம். எனவே, முதல்வர் அவர்களும் மற்ற அதிகாரிகளும் எப்படி வேகத்தோடு செயலாற்றுகிறார்களோ அந்த அளவுக்கு அதிகாரிகளும் வேகத்தோடு செயலாற்றி, தயவுசெய்து பிரிண்டிங் பேப்பர் எது என்பதற்கான கிளாரிபிகேஷனைக் கொடுத்து, நீங்கள் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வரிச் சலுகையினைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரே பொருளுக்குப் பலவிதமான வரிவிதிப்பு வருகின்றது. உதாரணத்திற்கு, ஆட்டோமொபைல் ஸ்பேர் பார்ட்ஸ் என்று வைத்துக்கொள்வோம். அதிலே நாம் சிகப்பு விளக்கு ஒன்றை வாங்குகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், இன்னும் எவ்வளவு நேரம் பேசப் போகிறீர்கள்? இன்னும் ஐந்து நிமிடங்கள் உங்களுக்குப பேசுவதற்கு அனுமதி கொடுக்கிறேன். அதற்குள் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சீக்கிரம் பேச்சை முடித்து விடுகிறேன். அதாவது, டிராக்டருக்கு சிகப்பு விளக்கு வாங்கினால் 4 சதவீதம் வரி விதிப்பு; அதையே யாராவது மோட்டார் சைக்கிளுக்குப் பொருத்துவதற்காக வாங்குகிறேன் என்று சொன்னால் அதற்கு 8 சதவிகித வரி விதிப்பு; அதையே காருக்குப் பொருத்தப்போகிறேன் என்று சொல்லி வாங்குகிறார்கள் என்றால், அதற்கு 11 சதவிகிதம் வரி விதிப்பு; சரி, நான் மோட்டார் சைக்கிளுக்கும் வாங்கவில்லை, காருக்கும் வாங்கவில்லை என்னுடைய வீட்டில் கொண்டுபோய் அழகுக்காக வைத்துக்கொள்கிறேன் என்று சொல்லி யாராவது வாங்கினாலும், அதற்கு என்ன வரி விதிப்பு என்றும் விளக்கம் கொடுக்கப்படவில்லை என்பதால் அதற்கும் 11 சதவிகிதம் வரி கொடுத்துவிட்டுப் போ என்று சொல்லக்கூடிய நிலைமை உள்ளது. இதிலே, வாங்குவது என்னவோ ஒரே சிகப்பு விளக்குதான். ஆனால், அதற்கு நான்கு விதமான வரி விதிப்பு வருவதாலே குழப்பம் உண்டாகிறது. ஆகவே, இதுபோன்ற குழப்பங்களைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றிற்கு 4 சதவிகிதம் வரி என்று ஒட்டுமொத்தமாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, எலக்ட்ரானிக் கூட்ஸ். ரேடியோவுக்கு ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கலாம், டி.விக்கு வாங்கலாம், கால்குலேட்டருக்கு வாங்கலாம், இப்படி வாங்குகிற தன்மையைப் பொறுத்து ஒரே பொருளுக்கு நான்கு விதமான வரி விதிக்கப்படுகிறபொழுது குழப்பங்கள் ஏற்படுகிற காரணத்தினால், அந்தக் குழப்பங்களைத் தவிர்ப்பதற்கு ஒரேமாதிரியான வரி விதிப்பு இருக்க வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் கூட ஓட்டல்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஓட்டல் லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று சொன்னால் 10 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. ஏற்கெனவே, நகராட்சியிலும் பேரூராட்சியிலும் லைசென்ஸ் பெற்றுத்தான் ஓட்டல் நடத்துகிறார்கள். அப்படி லைசென்ல் பெற்றாக வேண்டும் என்று சொல்கிறபோது வரிச் செலவு வருகிறது. ஓட்டல்களுக்கு கம்பவுண்டிங் முறையிலே விதிக்கக்கூடிய வரியினை முழுமையாக ரத்து செய்து விடுங்கள். இல்லையென்று சொன்னால் 1 சதவிகிதமாவது குறைத்து வரி போடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கர்ம வீரர் காமராசர் அவர்கள் இலவசக் கல்வியைக் கொண்டுவர வேண்டும், கல்விக் கண்ணைத் திறக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டு, பட்டி தொட்டிகளில் எல்லாம் பள்ளிக்கூடங்களை நிறுவினார்கள். இந்த அரசும் அதே முறையைக் கடைப்பிடித்து இலவசக் கல்வியை இன்றும் தந்து கொண்டிருக்கிறது. இப்படிக் கொடுத்துக் கொண்டிருக்கிற இலவசக் கல்விக்காக நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் பள்ளி மாணவர்கள் பயன்படுத்தக்கூடிய நோட்டுப்புத்தகங்களுக்குமா வரி என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே நீங்கள் ஏற்கெனவே உள்மாநிலத்திலே பேப்பருக்கு வரி செலுத்திவிட்டிருந்தால், அந்த நோட்டுப் புத்தகங்களுக்கு வரி விலக்கு அளித்திருக்கிறீர்கள். ஆனால் வெளி மாநிலங்களிலிருந்து வருகிற பேப்பர் என்கிறபோது, வரி விதிக்கப்படுகிறது. ஒட்டுமொத்தமாக நீங்கள் புத்தகங்களுக்கு, பள்ளி மாணவர்கள் படிக்கக்கூடிய ஒன்று என்கிற காரணத்தால், வரியை முழுமையாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.....

பிற்பகல் 12-45

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி இந்த அவைக்கு விளக்கம் சொன்னால் பயனுள்ளதாக இருக்கும் என்பதற்காகச் சிறிது நேரத்தை எடுத்துக்கொள்கிறேன். இந்த அறிவிப்பு வருவதற்கு முன்னால், நோட்டுப் புத்தகங்களுக்கு, வரி இல்லை என்று இருந்தது. ஆனால் வாணிபத்தில் என்ன நடந்தது என்றால், வெளி மாநிலங்களிலிருந்து பேப்பரைக் கொண்டு வந்து ரீ சேல் செய்தால், தமிழகத்திற்கு வரி வராது. அந்தப்

பேப்பரைப் பயன்படுத்தி பலவிதமான பொருட்களைத் தயாரிக்கிறார்கள். புத்தகங்கள், காலண்டர்கள், டயரிகள் போன்ற பொருட்களைத் தயாரிக்கிறார்கள். அதற்கெல்லாம் வரி உண்டு. ஆனால் அவர்கள் விற்பனை செய்யும்போது புத்தகங்கள் என்று வரி ஏய்ப்புச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு சில பேர் தவறு செய்துவிடுகிறார்கள். நான் எல்லோரையும் சொல்லவில்லை. ஆகவே இதில் ஏற்படக்கூடிய வரி ஏய்ப்பு, தடுக்கப்பட வேண்டும். அதேசமயத்தில் தமிழக அரசுக்கும் வருவாய் வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு செய்திருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே அவர் என்ன சொன்னார் என்றால், வரி செலுத்திய பேப்பரிலிருந்து நோட்டுப் புத்தகங்களைத் தயார் செய்து விற்பனை செய்தால் அதற்கு விற்பனை வரி இல்லை. இப்போதும் கிடையாது. வெளி மாநிலத்திலிருந்து, தமிழக அரசுக்கு வரி வராமல் பேப்பரை வாங்கி நோட்டுப் புத்தகங்களை விற்பனை செய்தால் அதற்கு வரி உண்டு என்ற நல்ல நோக்கத்தோடு செய்யப்பட்டது. இதற்கு கன்டிஷனல் எக்சம்ஷன் என்று பெயர். இந்த கன்டிஷனல் எக்சம்ஷன் கொடுக்கும்போது, இந்த வரி விலக்கு தமிழகத்தில் விற்பனை செய்வதற்கு மட்டும்தான் பொருந்தும்; ஆனால் இது, மற்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்வதற்குப் பொருத்தமானதாக ஆக்கப்படவேண்டும். ஆகவே தமிழகத்திலே, வரி செலுத்திய தாள்களை வாங்கி நோட்டுப் புத்தகங்களைத் தமிழகத்திலே விற்றாலோ அல்லது மற்ற மாநிலங்களில் விற்றாலோ அதற்கு வரி விலக்கு உண்டு என்ற திருத்தத்தைச் செய்தால் சரியாக ஆகிவிடும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் விளக்கம் சரி. நீங்கள் அரசாங்கத்திற்கு விளக்கம் கொடுத்தீர்களா அல்லது திரு. ஞானசேகரன் அவர்களுக்குக் கொடுத்தீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. அதனால்தான் சொன்னேன், நீங்களே தனியாகப் பத்து நிமிடங்கள் பேசுங்கள் என்று. திரு. ஞானசேகரன் பேசும்போது, நீங்கள் அவருக்கு விளக்கம் சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை. திரு. ஞானசேகரன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் விளக்கத்தை ஏற்றுக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலக்ட்ரானிக் கூட்ஸ் பொருட்களுக்கு வரி விலக்குத் தந்திருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாளும் பயன்படுத்துகிற உணவுப் பொருளான எண்ணெய்க்கு 4 சதவிகிதம் வரி போட்டிருக்கிறார்கள். அது மாபெரும் சுமையாகத் தெரிகிறது. அதேபோல எண்ணெய் வித்துக்களிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பொருள்களான எண்ணெய், பிண்ணாக்கு போன்றவற்றிக்கு 4 சதவிகிதம் வரி என்று, சதவிகிதத்தைக் கூட்டிக்கொண்டே போவதைவிட--அதைக் குறைக்க, முடிந்த அளவு குறைக்க, எல்லா வரியையும் நீக்க 2 சதவிகிதமாக அல்லது 1 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பகுத்தறிவுக் கொள்கைப் பற்றி நேற்றைக்கு முன்தினம் இந்த அவையில் விளக்கம் தந்தார்கள். பகுத்தறிவுக் கொள்கைகளுக்கு நீங்கள் உடையவர்களாக இருந்தாலும்கூட, நாங்கள் எல்லாம் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக, கடவுளை வணங்குகிறவர்களாக இருக்கிறோம். நீங்கள் ஏற்கெனவே சாம்பிராணிக்கு வரி விலக்கு அளித்திருக்கிறீர்கள். அதுபோல, நாங்கள் பூஜைக்குப் பயன்படுத்துகிற விபூதி, சூடம், கற்கண்டு போன்ற பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் பகுத்தறிவுவாதியாக இருந்தாலும்கூட, எங்கள் கோரிக்கையை, கடவுளை நம்புகிறவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். நாங்கள் கேட்கவில்லை என்ற குறை வந்துவிடும். நாங்கள் கேட்கிறோம்., நீங்கள் அதற்கு தயவு செய்து வரி விலக்குக் கொடுங்கள். விபூதி, சூடம், கற்கண்டு போன்ற பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து ஒரு நிமிடத்திற்குள் பேசி முடியுங்கள். இல்லாவிட்டால் நான் உங்களை உட்கார வைத்துவிடுவேன். *(குறுக்கீடுகள்)* திரு. ஞானசேகரன் அவர்களுக்கு ஏற்கெனவே மைக் வேண்டியதில்லை. இப்போது இரண்டு மைக்குகள் வைத்துக்கொண்டார்கள். *(சிரிப்பு)*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்தில் இருக்கக்கூடிய ஆந்திரப்பிரதேஷ், கர்நாடகா போன்ற இடங்களில் மீன் வலைக்கு வரி கிடையாது. பாண்டிச்சேரியில்கூட வரி கிடையாது. ஆகவே நீங்கள்

மீனவர்களுக்கு உதவி செய்கின்ற முகத்தான் மீன் வலைக்கு வரியை தயவு செய்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய துணைத் தலைவருடைய கோரிக்கை; நெய் விற்பனைக்கு 10 சதவிகிதம் என்று வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். Unregistered Brand நெய் விற்பனைக்கு 10 சதவிகிதம் வரி என்று இருக்கிறது. நீங்கள் அதை 4 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதேபோல மொலாசஸுக்கு நாம் 30சதவீதம் வரி விதிக்கிறோம். அதில் லிக்குவருக்கு 30 சதவீதம் வரி இருந்தால் பரவாயில்லை; ஆனால் மருந்துக்கு என்று வருகிறபோது, நம்முடைய உடலை காக்கின்ற மருந்துகளுக்குத் தரக்கூடியவற்றிற்கு எல்லாம் 3 சதவீதமாக நீங்கள் வரியைக் குறைத்துத் தர வேண்டும்.

சிட்டா நூலுக்கு 2 சதவீதம் வரியை நாம் வசூலித்துக் கொண்டு இருக்கிறோம். பக்கத்து மாநிலமான ஆந்திராவிலே வரியே கிடையாது. இங்கு இருக்கக்கூடியவர்கள் எல்லாம் அங்கே போய் விடுகிறார்கள். ஆகவே, சிட்டா நூலுக்கு விதிக்கப்படுகிற வரியை நீங்கள் தயவுசெய்து குறைக்க வேண்டும்.

பனியன்களுக்கு இருக்கக்கூடிய ஒரு சதவீத வரியை எடுத்து விட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேங்காய்க்கு ஏற்கெனவே வரி இல்லாமல் இருந்தது. வெளி மாநிலங்களுக்குக் கொண்டுபோகிறபோது அதற்கு 2 சதவீதம் வரி இருக்கிறது. அதையும் நீங்கள் எடுத்துவிட வேண்டும்.

கிரைண்டருக்கு விதிக்கப்பட்டு இருக்கிற அந்த வரியையும் நீங்கள் எடுத்துவிடவேண்டும்.

குடைக்கு 8 சதவீத வரி இருக்கிறது. ராஜஸ்தானில் வரியே அதற்கு இல்லை. மற்ற இடங்களிலே அதற்கு வரி இல்லாத காரணத்தினாலே குடை அல்லது குடைக்கு இருக்கக்கூடிய சாமான்களுக்கு வரியை எடுத்துவிடுங்கள்.

வறுகடலை, பட்டாணி, பட்டாணி பருப்பு போன்றவற்றிற்கு எல்லாம் 4 சதவீதம் வரி இருக்கிறது. அதையும் எடுத்துவிட வேண்டும்.

பாக்கு, தொக்கம் பாக்கு போன்றவற்றிற்கு எல்லாம் 5 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாக வரி உயர்த்தி இருக்கிறீர்கள் அதை 4 சதவீதமாக குறைத்துவிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எல்லா வீடுகளிலும் மொசைக் போடுகிறார்கள். மொசைக்குக்கு ஏற்கெனவே 20 சதவீதமாக வரி இருக்கிறது; அதை 5 சதவீதமாக குறைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வணிகர் நல வாரியம் என்று ஒன்று இருக்கிறது. அதிலே உறுப்பினராக இருப்பவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு நாம் ரூபாய் கொடுத்தாக வேண்டும். எங்களுடைய வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் ஆம்பூரில் குருசாமி என்பவர் இறந்துவிட்டார்; ஜெயராமன் இறந்துவிட்டார்; அப்துல் மாலிக் இறந்துவிட்டார்; லட்சுமி அம்மாள் இறந்துவிட்டார்; பத்மநாப செட்டி இறந்துவிட்டார்; பல நாட்களாக மனு செய்தும், அவர்கள் குடும்பத்தினருக்குப் பணம் வந்தபாடில்லை. ஆகவே வணிகர் நல வாரியத்தின் மூலமாகக் கொடுக்கக்கூடிய அந்தப் பணத்தை உடனடியாக நீங்கள் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

... மாண்புமிகு உறுப்பினர் செங்கை சிவம் அவர்களுடைய கோரிக்கை, கையினால் தயாரிக்கப்படுகிற . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உங்கள் கட்சிக் கோரிக்கைகளை எல்லாம் சொல்லி முடித்துவிட்டு, இப்போது ஆளும் கட்சி உறுப்பினர் கோரிக்கையைப்பற்றி நீங்கள் என்ன பேசுவது? உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் என்றால் ஒரு நிமிடம்தான். அதற்குள் பேசி முடியுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கையினால் தயாரிக்கப்படுகிற சலவை நீலத்திற்கு 16 சதவீதம் என்று இருக்கக்கூடிய அந்த வரி விதிப்பை நீங்கள் மாற்றி 4 சதவீதமாகக் குறைத்துக்கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கேபிள் டி.வி-க்கு ஏற்கெனவே அரியர்ஸ் வரியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறைத்துவிட்டார்கள்; நன்றி, ஆனால், கேபிள் டி.வி. வைத்து இருக்கக்கூடிய சாதாரண மக்கள் எல்லாம், படித்த

இளைஞர்கள் எல்லாம் கேபிள் டி.வி. போட்டு, நிறைய வரி பாக்கி வைத்துக்கொண்டு ஒரு லட்சம் ரூபாய், 2 லட்சம் ரூபாய் கட்ட வேண்டிய நிலை இருக்கிறது. அதை நீங்கள் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டு, பேசுகின்ற வாய்ப்பு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

6. தகவல் கோரல்

லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் தொடர்தல்

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே கடந்த நான்கு நாட்களாக லாரிகள் ஓடாத காரணத்தினால், லாரிகள் எல்லாம் நிறுத்தப்பட்டு இருந்தன. அது விஷயமாக நேற்று அவையிலே, முதல்வர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி லாரி ஸ்ட்ரைக் வாபஸ் பெறப்பட்டது என்று அறிவித்தார்கள். அதிலே ஒரு பகுதியினர், தமிழ்நாடு சம்மேளத்தினுடைய தலைவர், அதுவும் குறிப்பாக ராஜாஜி மாவட்டத்திலே, நாமக்கல்லிலே இருக்கின்ற லாரி உரிமையாளர்கள் சங்கம்தான் மிகப் பெரிய சங்கம்; அந்த சங்கத்தினர்கூட அதிலே கலந்து கொள்ளவில்லை. முதல்வர் அவர்கள் நேற்று கூறும்போது, அவர்கள் டில்லியிலே இருந்து வரவில்லை; அவர்களிடம் மாலையிலே பேச்சு வார்த்தை நடக்கும் என்று கூறினார்கள். தற்போது அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் லாரியினுடைய ஸ்ட்ரைக் தொடரும் என்று கூறி இருக்கின்றார்கள். அதற்கு இணங்க நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் தற்போது பேச்சுவார்த்தை நடத்தி இருப்பார்கள் என்று நினைக்கின்றேன். பேச்சுவார்த்தை வெற்றி பெற்று இருந்தால் அனைவருக்குமே நல்லதுதான். ஆனால், சற்றுக் கவலை தோய்ந்த முகத்துடன் அவர் இருக்கின்ற காரணத்தினால் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சுவார்த்தை என்ன ஆயிற்று என்பதுதான் பிரச்சினை. அவர் கவலையோடு இருந்தார், முகத்தில் சிரிப்போடு இருந்தார்; உங்களுக்கு இதுவா பிரச்சினை? நீங்கள் பிரச்சினையைச் சொல்லிவிட்டீர்கள்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: அந்தப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்து விட்டதோ என்று நான் நினைக்கின்றேன். எப்படி இருந்தாலும், இந்தப் பேச்சுவார்த்தையைப் பொறுத்த வரையில், வெற்றி பெற்று இருந்தால் சரி; தோல்வி அடைந்து இருந்தால், தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவர்களை அழைத்துப்பேசி ஒரு தீர்வு காண்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எந்த அடிப்படையிலே உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்புகிறார் என்று எனக்குப் புரியவில்லை. ஜீரோ ஹவரும் இல்லை இது. நடந்து கொண்டு இருப்பது வணிக வரித் துறையினுடைய மானியம். அதிலே உறுப்பினர்கள் எல்லாம் பேசிவிட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டிய கட்டம். இதிலே, எந்தக் கட்டத்தில், பாயின்ட் ஆஃப் ஆர்டரா அல்லது பாயின்ட் ஆஃப் இன்ஃபர்மேஷனா என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஒருவேளை தங்களிடத்திலே அறையிலே அதைச் சொல்லிவிட்டு இங்கே வந்து இந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கிறாரா என்பதும் எனக்குப் புரியவில்லை. இருந்தாலும், அவருக்கு இருக்கின்ற ஆவலைப் போலவே, நாட்டு மக்களுக்கும் ஆவல் இருக்கிற காரணத்தால், அவர் எழுப்பிய பிரச்சினைக்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-55

நேற்று நான் கூறியதைப்போல, லாரி உரிமையாளர்களில் ஒரு பகுதியினர் என்னைச் சந்தித்து, அமைச்சரையும் சந்தித்து, அதிகாரிகளையும் சந்தித்து, நேற்றையதினம் பேசி, இந்த லாரி வேலை நிறுத்தத்திற்கு ஒரு முடிவு கட்டுவதாக உறுதியளித்ததுடன், அவர்களுக்கு நானும் உறுதி அளித்திருக்கின்றேன். சேவை வரி 5 சதவீதம் என்பதை மாற்றச் சொல்லி அல்லது ரத்துச் செய்யச் சொல்லி, மத்திய அரசிடத்திலே நாங்கள் அரசின் சார்பாகவும் பரிந்துரை செய்வோம், திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ் மாநிலக் காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பிலே நாடாளுமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களின் வாயிலாகவும் வலியுறுத்துவோம் என்று சொல்லியிருக்கின்றோம்.

நாங்கள் அவ்வளவுதான் சொல்வோம். நாங்கள் அதை ரத்துச் செய்துவிடுவோம் என்று சொல்கின்ற அதிகாரம் எங்களுக்கு இல்லை.

ஆனால் அங்கே இருக்கின்ற ஐக்கிய முன்னணி அரசிலே திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், நான் குறிப்பிட்ட கட்சிகளுக்கும் அங்கம் இருக்கின்ற காரணத்தால் அதைச் சொல்கின்ற, உறுதி அளிக்கின்ற உரிமை எங்களுக்கு உண்டு என்ற அந்த அடிப்படையிலே உறுதி அளிக்கப்பட்டது. அதை ஏற்று நேற்றையதினம் வந்த லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர், லாரிகளை ஓட்டத் தொடங்கியிருக்கின்றார்கள். பாதிக்கு மேற்பட்ட லாரிகள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஓடிக்கொண்டிருக்கின்றன. பாதி எண்ணிக்கைக்கு மேற்பட்ட லாரிகள் ஓடிக் கொண்டிருக்கும்போது, நேற்று நான் அறிவித்தவாறு நேற்று வந்து சந்திக்க முடியாதவர்கள், போக்குவரத்துத் துறை அமைச்சரை இன்று காலையிலே சந்தித்துப் பேசியிருக்கின்றார்கள். நான் உறுதியளித்தாலும், அதை மத்திய அரசு அல்லவா செய்ய வேண்டுமென்ற சந்தேகத்தை அவர்கள் எழுப்பிச் சென்றிருக்கின்றார்கள். மத்திய அரசு செய்வதற்கு, தமிழக அரசு நிச்சயமாக வற்புறுத்தும், வலியுறுத்தும் என்ற உறுதி மீண்டும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. இதற்குப் பிறகு என்ன முடிவு எடுப்பார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. அவர்கள் இதை அரசியலாக்க எண்ணி முடிவு எடுப்பார்களேயானால், மத்திய சர்க்கார் எங்களுக்கு இட்டிருக்கின்ற கட்டளையை நாங்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை மாத்திரம் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

5. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

கோரிக்கை எண் - 4 - பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்--நிருவாகம்--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணக்கத்திற்குரிய முதல்வர் அவர்கள் இதுகாறும் தங்கள் பொறுப்பில் வைத்திருந்த வணிக

வரித் துறையை இந்த முறை எனக்களித்து, மானியக் கோரிக்கையில் இந்த அவையிலே உங்களுடைய நல்ல கருத்துக்களைக் கேட்கிற மகத்தான வாய்ப்பை உருவாக்கித் தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிக வரித் துறை பற்றி மாண்புமிகு 11 உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். தங்களுடைய கருத்துக்களை அழுத்தமாகவும், குறிப்பாக நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் வழக்கம்போல் உரத்த சிந்தனையோடு அடர்த்தியான எண்ண உணர்வுகளோடு, திருப்பூரைப் பற்றிப் பேசுகையில், பனியன் தொழில் அங்கே எப்படிப் பரிமளிக்க வேண்டும் என்றும், இந்தக் குரல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கிருந்தாலும் அவர்களை இது எட்டும் என்று இந்த அவையிலேயிருந்து தன்னுடைய உரிமைக் குரலைக் கொடுத்தார்கள். எந்தப் பிரச்சினையை எடுத்தாலும், அது திருப்பூரைச் சுற்றிச் சுற்றி வந்து அதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்ற முடிவோடு இருக்கின்ற நம்முடைய திரு. சுப்பராயன் அவர்களும் மற்றவர்களும் சொன்ன அரிய கருத்துக்களை இந்த அரசு பரிவோடு பரிசீலிக்கும் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும்.

அதைப்போலவே நமது மாண்புமிகு ராஜ்குமார் மன்றாடியார் அவர்கள், ஏற்கெனவே அரசு அமைத்த வரி சீரமைப்புக் குழுவில் இடம் பெற்றிருந்த அந்தக் காரணத்தாலும், தனக்கிருக்கின்ற ஆற்றல் மிக்க அனுபவத்தாலும் பல்வேறு கருத்துக்களை இந்தத் துறைக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 11 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இங்கே இந்தத் துறைக்குத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தத் துறை உடனடியாக சில கருத்துக்களை ஏற்று நடைமுறைப்படுத்தவும், சில கருத்துக்களைப் பரிசீலனை செய்து மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முடிவுக்குப் பின்னர் தெரியப்படுத்தும் வாய்ப்பு உண்டு என்பதையும் நான் முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிக வரித் துறை இன்றைக்கு மிகச் சிறப்போடு, எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்பதுபோல நம்முடைய தமிழகத்தினுடைய வரி வருவாய்த் துறைக்குச் சிகரம் போல் மிக அதிகமான வருவாயை ஈட்டித் தருகிற துறையாக இருக்கிறது. இதனுடைய தாய்த்துறை ரெவின்யூ துறை என்று அழைக்கப்படுகிற வருவாய்த்துறைதான். அதிலிருந்து பிரிந்து இன்றைக்குத் தனித் துறையாக மிகச் சிறப்பாக விளங்குகிறது. அதிலும் இந்தத் துறை

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொறுப்பில் இருந்தபோது, எவ்வளவு சிக்கனமாக, சிறப்பாக, கட்டுப்பாட்டோடு இயங்கியது என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

பிற்பகல் 1-00

ஒரு நாட்டினுடைய குறிப்பாக 'வெல்ஃபேர் ஸ்டேட்' என்று சொல்வோமே, அந்தச் சேம நல அரசுக்கு விரும்புகிற, வேண்டுகிற நிதியைப் பெற்றுத் தருகிற ஒரு பெரிய துறையாக இன்றைக்கு இருப்பது வணிக வரித் துறைதான். ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு அந்தப் பொருளாதாரத்தினுடைய உச்ச கட்டத்தை எட்டிப் பிடிப்பதற்கு மிகுந்த உறுதுணையாக இருக்கிறது. நிதியைத் திரட்டித் தருவது இந்த வணிக வரித்துறைதான். அதனால்தான் சென்ற முறை 1996-97-ஆம் ஆண்டு வணிக வரித் துறையினுடைய பொறுப்பை வகித்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வரவு-செலவுத் திட்டத்தில், நிதிநிலை அறிக்கையில் பெரும்பாலான பங்கை இந்த வணிக வரித் துறை பெற்றிருந்தது. இன்னும் சொல்லப்போனால், சென்ற நிதிநிலை அறிக்கையிலே அவர்களுடைய பேச்சினுடைய பெரும்பகுதி, அறிவிப்புகளினுடைய பெரும் பகுதி இந்தத் துறையே இடம் பெற்றிருந்தது. அத்தகையதொரு சிறப்புமிக்க துறையாக இந்தத் துறை விளங்குகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய, 1997-98-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு அறிக்கையில்கூட, அதிகமான அறிவிப்புகளை, சலுகைகளை இந்தத் துறை குறித்து அறிவித்தார்கள் என்றால், எந்த அளவுக்கு இந்தத் துறை சிறந்து விளங்குகிறது என்பது நமக்குத் தெரியும். இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் இந்த மாமன்றத்திலே வாசிக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் வரவு-செலவுத் திட்டங்களைப் பல நிதி அமைச்சர்கள் வாசித்திருக்கிறார்கள், தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த பல்வேறு விதமான நலத் திட்டங்களை, பல்வேறு சிறப்பம்சங்களை நாம் படிக்கிறபோது, தமிழகத்தினுடைய ஒரு 'காலக் கண்ணாடி' யாகத்தான் இந்த வரவு-செலவுத் திட்டத்தை நம்மாலே தெரிந்துகொள்ள முடிந்தது.

வரவு-செலவுத் திட்டத்திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களேகூட பெருமையாக 'ஒரு காவியத்தை படிப்பது போல இருக்கிறது' என்று சொன்னார்கள்.

'மினி லிட்டரேச்சர்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார்கள். அந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையைப் பாராட்டாதவர்கள் யாருமே இல்லை. அனைத்துப் பத்திரிகைகளும் பாராட்டின. பொருளாதார மேதைகளெல்லாம் போற்றி வரவேற்றார்கள். அரசியல்வாதிகளிலே நடுநிலை அரசியல்வாதிகள், நல்ல அரசியல்வாதிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வரவு-செலவுத் திட்டத்தை, வரிக் கொள்கைகளை, சிலாகித்துப் பெருமையாக வரவேற்றார்கள். அப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ஒரு மையக் கருத்து, நம்முடைய மாண்புமிகு தமிழ்க்குடி மகனார் அவர்கள் அடிக்கடி சொல்வதுண்டு. அவருக்குப் பிடித்த குறள் அது என்று கருதுகிறேன்.

'வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி'

என்ற அந்த வள்ளுவப் பெருந்தகையின் கருத்துக்கு முத்தாய்ப்பாக நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கை அமைந்தது. என்ன காரணம் என்றால், நான் சம்பிரதாயத்திற்காகச் சொல்லவில்லை; அந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கிறபோது ஒவ்வொரு பக்கத்திலே பார்த்தாலும், வார்த்தைகளை வெறும் வார்த்தைகளாக அல்ல. 'வைர வரிகளாக்கி' கோடுகள் என்று நாம நினைப்பதையெல்லாம் 'கோலங்களாகக் காட்டி' இருக்கின்றார்கள். உங்களுக்குத் தெரியும், நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு அற்புதமான படைப்பாளி. அவர்களுடைய நெஞ்சத் தடாகத்திலே பூத்த காவிய மலர்கள் ஏராளமாக உண்டு. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில், புள்ளி விவரங்களை அள்ளித் தந்து வாசனை மிகுந்த மலராக, காவியமாக அவர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையினுடைய மிக முக்கியமான கண்ணோட்டமாக அமைவது இந்த வணிக வரித் துறைக்குத் தந்திருக்கிற பல்வேறு விதமான சலுகைகளும் பல்வேறு விதமான குறிக்கோள்களும்தான். அவர்கள் விரும்புவது, இந்த அரசு விரும்புவது இரண்டே இரண்டு காரியங்கள். ஒன்று, நேர்மையான ஆட்சி அமைக்க வேண்டும். இன்னொன்று, நியாயமான நிர்வாகம் இருக்க வேண்டும். இந்த நேர்மையும், நியாயமும் கைகோர்த்துச் செல்லவேண்டுமானால், நாம் கடைப்பிடிக்கிற தொழில் வளர்ச்சியிலும், வணிக முன்னேற்றத்திலும் சில சிறப்பான

பிற்பகல் 1-05

பயன்படுத்தி சில கடமைகளை நிறைவேற்ற வேண்டும். அப்படி நிறைவேற்றுவதற்கு நம்முடைய வரிக் கொள்கை முதன்மையாக அமைய வேண்டும். அப்படிப்பட்ட வரிக் கொள்கையை அறிவிக்கிறபோதுதான்--இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு முக்கிய எண்ணத்தை, கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். இங்கே பேசிய ஏராளமான மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரு கடமைக்காக, நாம் வரி போடுகிறோம் என்கிறபோது, 'போட்ட வரிகளையெல்லாம் நீக்க வேண்டும்; இருக்கிற வரிகளையெல்லாம் குறைக்க வேண்டும்' என்று அரசியல் கட்சிக்கேயுள்ள அந்த இலக்கணத்தோடு இங்கே எடுத்துச் சொன்னார்கள். மக்கள் பிரதிநிதி என்ற முறையிலே வாதிட்டார்கள். ஆனால் Taxes are the price, we pay for the civilised society, வரி என்பதை நாம் வழங்கினால் தான் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க முடியும். இன்னமும் சொல்லப்போனால் ஆடம் ஸ்மித் என்கிற பொருளாதார நிபுணர் பற்றி உங்களுக்கு தெரியும். ஏற்கெனவே பல்வேறு பொருளாதாரப் புத்தகங்களை எழுதியிருக்கிறார். அந்த மேதை சொல்லும்போது Government depends upon taxation as a chief source of revenue என்று சொல்கிறார்.

ஆகவே வரி விதிப்பதைத் தவிர்க்க முடியாது. வளர்கிற நாடுகளில் கட்டாயமாக இது பின்பற்றப்பட வேண்டிய முக்கியமான கொள்கையாகும். வரி விதிப்பதில், எந்தவிதமான வரியை விதிக்க வேண்டுமென்றால்--Good tax system should ensure maximum social benefits to the society— நல்ல வரிக் கொள்கை என்பது சமுதாயத்திற்கு மிக அதிகபட்சமான நன்மையைத் தருவதாக இருக்க வேண்டும். நாம் அணுகுகிற முறையும் போடுகிற வரியும் சமுதாயத்திற்கு உதவுகிற வகையில் சிறப்பான முறையில் அமைய வேண்டும் என்று பொருளாதார நிபுணர்கள், மேதைகள் சொல்வார்கள். அந்த அடிப்படையில் தான் இந்தத் தூய்மையான ஆட்சி நேர்மையான நிர்வாகத்திற்காக இந்த வரிகளைப் போட்டுள்ளது. தொழில் முனைவோர்கள், வணிகர்கள் நீண்டகாலத்திற்கு நிரந்தரமாக சில கொள்கைகளை பின்பற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் a long-term taxation policy என்ற ஒரு கொள்கையை தொலை நோக்கோடு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையான வரிக் கொள்கை இருந்தால்தான் தொழில் முனைவோர்க்கும் வணிகர்களும்

தங்களுடைய தொழிலையும் வணிகத்தையும் சிறப்பாகச் செய்து, அரசுக்கு முறையாக வரியைச் செலுத்த முடியும். அதற்கு அரசு பின்பற்றுகிற நடவடிக்கை என்னவென்றால், பொருள்களின் உற்பத்தியை ஊக்கப்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குவதை அரசு ஒரு கடமையாகக் கருத வேண்டும். உற்பத்தியாகும் பொருள்களுக்கு சந்தையைத் தேட வேண்டும். சந்தையிலே நுகர்வோர்கள் சங்கடப்படாமல் நுகர்வோர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டும். அதேசமயத்தில் விதிக்கப்படுகிற வரி அரசினுடைய கஜானாவுக்கு, கருவூலத்திற்கு ஏமாற்றப்படாமல் வந்து சேர வேண்டும். அதிலே சட்டப்படியும் நடந்து கொள்ள வேண்டும், சில இடங்களில் மனிதாபிமானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்றம் கடுமையாக இருக்க முடியாது என்று சொன்னார்கள். தொழில் அபிவிருத்தி என்று பார்க்கிறபோது சிறு கைத்தொழில்கள் போன்றவைகளில் ஈடுபடுகிற கைவினைஞர்களுக்கு, கிராமப்புறங்களில் நடத்தப்படுகிற சிறுதொழில்களுக்கு கடுமையாக வரி வசூலித்தால் அந்த மக்களும் நொடித்து விடுவார்கள். தொழில்களும் நசிந்துவிடும் என்பதால் நாம் சில சலுகைகளைத் தருகிறோம். எனவே இரண்டு விதமான கொள்கையை இன்றையதினம் நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய வரி விதிப்புக் கொள்கையில் அறிவித்து இருக்கிறார்கள். இதிலே ஒரு விஞ்ஞான கண்ணோட்டம் இருக்க வேண்டும். ஒரு modern rationalisation உருவாக்கப்பட்டால்தான், வரி விதிப்பதிலும், வரி வசூலிப்பதிலும் ஒரு புதிய நடைமுறையை, நவீன முறையை, கையாண்டால்தான், போட்ட வரி ஒழுங்காக அரசுக்கு வந்து சேரும்.

வரி வசூலிப்பதில் கடுமையையும் கொடுமையையும் தவிர்க்க வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கை. பல்வேறு சீர்திருத்தங்களை வெளிப்படையாக வரி விதிப்புக் கொள்கையில் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும். பல ஆண்டுகளாக இங்கே வியாபாரிகள் சார்பாக, வணிகர்கள் சார்பாக விருப்பம் தெரிவிக்கப்பட்டு, 1989-90 ஆம் ஆண்டு தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. அது வரிக் கொள்கையிலே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்கள் போராட்டம் செய்தார்கள். மாநாடு நடத்தினார்கள். ஊர்வலம் வந்தார்கள்,

கோஷம் போட்டார்கள். அப்படியும் பல ஆண்டுகளாக நடக்காத காரியம் அது. தங்களுடையப் பொருள்களுக்கு ஒரு முனை வரி விதிக்க வேண்டுமென்று கேட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1989-90-ஆம் ஆண்டு முதலமைச்சராக வந்த பின்னால்தான் ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அதற்குப் பின்னால் வந்த ஆட்சி அந்த வரிக் கொள்கையை சிதைத்து விட்டது. மீண்டும் இப்போது முதலமைச்சரான பிறகு இந்த ஒருமுனை வரியை எல்லா பொருள்களுக்கும் போட வேண்டுமென்று சென்ற நிதிநிலை அறிக்கையில் மிகத் தெளிவாக, வெளிப்படையாக அறிவித்து இருக்கிறார்கள். இன்னமும் ஆறு முக்கிய அம்சங்களை வரி விதிப்புக் கொள்கையில் பின்பற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன் காரணமாக இந்தத் துறை அந்தக் கொள்கையை வெளிப்படையாகப் பின்பற்றி வருகிறது. வரி வீதங்கள் பெருமளவுக்கு வெளிப்படையாக இருத்தல் வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் குறிப்பிடுகிறபோது எதுவும் வெளிப்படையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழக அரசு புதிதாக ஏற்படுத்தி இருக்கின்ற எந்தவொரு வரிக் கொள்கையிலும் ஒளிவு மறைவு இல்லை. மிக வெளிப்படையாகவே அரசின் வரிக் கொள்கை இருக்கிறது.

பிற்பகல் 1-10

வரி விதிப்பு மற்றும் வரி வசூலை எளிமையாக்குதல், வரிவீத அமைப்பு பதிவு முறைகளையும் சீரமைத்தல், சீர்திருத்தமாக, வரிவிதிப்பில் மிக நவீன முறைகளையும், புதிய நடைமுறைகளையும் பின்பற்றுதல், மூன்றாவதாக, நம்முடைய சொந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்தல், நான்காவதாக, உள்ளூர் கொள்முதல் மற்றும் உள்ளூர் தயாரிப்பை ஊக்கப்படுத்துதல், ஐந்தாவதாக வரிவிலக்கு, இணக்க வரி, சுய வரி மதிப்பு முறை, இந்த வகையில் சிறு தொழில் முனைவர்களுக்கு சிறு வணிகர்களுக்கு நாம் சலுகைகள் அளிக்க வேண்டும். ஆறாவதாக, வீட்டுத் தேவைகளுக்கு அடிப்படைப் பொருட்களுக்கு வரிவீதங்களைக் குறைக்க வேண்டும். இந்த ஆறு முக்கிய கொள்கைகளை அடிப்படையாக வைத்து வரி சீரமைப்புக் குழுவினுடைய பரிந்துரைகளை இந்த அரசு ஏற்று நடத்துகிறது. இப்படிப்பட்ட சீர்திருத்தங்களை 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே

கூறியபோதுதான் பல்வேறு இனங்களில் வரி விலக்கப்பட்டது. பல்வேறு பொருட்களுக்கு வரி குறைக்கப்பட்டது. வரி விலக்கத்தின் காரணமாகவும், வரிக் குறைப்பின் காரணமாகவும் ஏறக்குறைய 414 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகைகள், சென்ற 1996-97-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இந்த முறையில் ஒரே வரி விதிப்புக் கொள்கைமூலம் மேலே சொன்ன இந்தச் சீர்திருத்தங்களின் அடிப்படையில், வரிவிலக்கு, வரிக்குறைப்பு செய்வதன் மூலம் சிறு தொழில் வளருகிறது. வணிகர்கள் தங்களுடைய வாணிபத்தில் அதிகமாக இலாபம் பெறுகிறார்கள். அந்த இலாபத்திலிருந்துதான் அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்கிறார்கள். அந்த வகையில்தான் இம்முறை கடைபிடிக்கப்பட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு தகவல். தமிழ்நாட்டில் சென்ற ஆண்டு நிலவரப்படி பதிவு பெற்ற வியாபாரிகள், வணிகர்கள் 3,31,844 பேர். இவர்களில் 1,41,784 பேர்கள் மட்டுமே வரி விதிக்கப்படுகிறார்கள். இப்படி வரி விதிக்கிறபோது அரசாங்கம் ஒரு தலைபட்சமாக இல்லாமல்--எடுத்தேன். கவிழ்த்தேன் என்று இந்த வரிகளை நாங்கள் விதித்தோம். இந்த வரிகளை நாங்கள் எடுத்து விட்டோம் என்று இல்லாமல், அப்படிப்பட்ட குறைபாடுகள், விமர்சனத்திற்கு ஆளாகக்கூடாது என்பதற்காக, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பாராட்டிச் சொன்னது போன்று, வரி சீரமைப்புக் குழு என்கிற ஒரு குழுவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமித்தார்கள். இதிலே ஒரு தத்துவம் அடங்கி இருக்கிறது. Taxation without representation is a tyranny--ஒரு சர்வாதிகார மனப்பான்மையோடு நாம் வரிகளை விதிக்கக்கூடாது. எல்லோருடைய பங்கேற்பும், எல்லோருடைய ஆலோசனையும இடம்பெற வேண்டும் என்பதற்காகத்தான் அனுபவம் பெற்ற திரு. தங்கராஜ் என்ற ஓய்வு பெற்ற அதிகாரியின் தலைமையில், குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவிலே--இங்கே சிறப்பாக பல நல்ல கருத்துக்களைச் சொல்கிற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் இந்தத் துறையிலே எக்ஸ்பர்ட். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை 'என்சைக்ளோபிடியா' என்று நாம் எவ்வாறு சொல்கிறோமோ, அதேபோல வியாபாரத் துறையிலே, வணிகவரித் துறையிலே தன்னுடைய முழுமையான கருத்துக்களைக் கூறிய திரு. சொக்கர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜ்குமார்

மன்றாடியார் அவர்களும், திரு. ரத்னவேலு, தலைவர், தமிழ்நாடு வணிக வரிக் கழகம், மதுரை அவர்களும், திரு. எல். ஞானராஜ், தலைவர், திருச்சி வணிகர் கழகம், திரு. ஜெயசீலன், சேலம் மாநகர வணிகர் கழகம், திரு. நடராஜன், மூத்த வரித் துறை வழக்கறிஞர் அவர்களும், மரியாதைக்குரிய திரு. ராம் தியாகராஜன், தலைவர், நிர்வாக இயக்குநர், ஆரூரான் சர்க்கரை ஆலை அவர்களும் இக்குழுவிலே இடம் பெற்றிருந்தார்கள். இக்குழு தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களுக்குச் சென்றது. இவர்கள் பல்வேறு வணிகர்களையும், வணிகர் கழகங்களைச் சார்ந்தவர்களையும் சந்தித்தார்கள். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற வழக்கறிஞர்களையும் சந்தித்து, அதேபோல தனிப்பட்ட வியாபாரிகளையும், பல்வேறு சங்கங்களையும் சந்தித்து ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பெற்றார்கள். இரண்டு வால்யூம்; 2 பகுதியாக, இரண்டு பார்ட்டாக, ஒன்று வரி சம்பந்தப்பட்ட சீரமைப்பு. எப்படி, எந்தெந்த வரியை எல்லாம் குறைப்பது, சீரமைப்பது அல்லது வரி போடுவது. இதில் அவர்கள் ஒன்றும் தயக்கமே காட்டவில்லை. எந்தெந்த இனங்களுக்கு எல்லாம் வரி போடவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். எந்தெந்த இனங்களுக்கு வரி குறைக்க வேண்டும் என்ற கருத்துக்களையும் தெரிவித்திருக்கிறார்கள். இன்னொரு பகுதி என்பது இந்தத் துறை சம்பந்தப்பட்ட, நிர்வாகச் சீர்திருத்தம் பற்றியது. எனவே, இரண்டு பகுதியாகப் பிரித்து இருக்கிறார்கள்.

பிற்பகல் 1-15

இதிலே அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன சில கருத்துக்களை மட்டும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதாவது போலியான பதிவுகள் இருக்கின்றன. வியாபாரத்தில் இதன்மூலம் வரி ஏய்ப்பு நடக்கிறது. இதை எப்படித் தடுப்பது என்ற கருத்து. அரசு ஆணையின் பொருள் விளக்கமும் தெளிவற்று இருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். கிரந்தம் போல் இருக்கிறது என்று. நம்முடைய வணிகவரித் துறை ஆணையாளர் அவர்கள் வெளியிடுகிற கருத்துக்கள் தெளிவாக இல்லாத காரணத்தால், கீழே உள்ள அதிகாரிகள் தவறாக இண்டர்பிரட்டேஷன் செய்கிறார்கள். அதன் மூலமாக லஞ்சத்திற்கு வழிகோல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த உத்தரவுகள் தெளிவான முறையில் இருக்கவேண்டும் என்பதற்காக, அவர்களே விளக்கம் தந்திருக்கிறார்கள். எந்தெந்த

அடிப்படையிலே உத்தரவுகள் வரவேண்டும், ஆணைகள் இருக்க வேண்டும் என்று விளக்கமும், மேல் முறையீடுகள், மறு ஆய்வு மனுக்கள் ஆகியவற்றுக்கான நடைமுறைகளை சீரமைத்தல் நடுவர் மன்றத்தின் சில ஆணைகளுக்கு எதிராக மேல் முறையீடு செய்வதற்குப் பதிலாக இந்தத் துறையிலேயே மேல் முறையீட்டு ஆணைகளை துறை தாமாகவே, 'சுயோ-மோட்டோவாகவே' மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரங்களை நீக்குதல். சோதனைச் சாவடிகளின் நிர்வாகத்தை மேம்படுத்தல், மாநிலத்திற்கு வெளியில் தலைமை அலுவலகங்களைக் கொண்டுள்ள பொறுப்பு முகவர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோரின் முகவர்களுக்கான கூடுதல் விற்பனை வரி விதிப்பில் உள்ள வேறுபாட்டை நீக்குதல், இதுபோன்ற முக்கியமான கருத்துக்களை அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில், அரசுக்கு அளித்திருக்கிற அந்த ரிப்போர்ட், ஆய்வு அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிக்கையை மனதிலே வைத்துத்தான் சென்ற முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில், 1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில்-- ஏற்கெனவே 414 கோடி ரூபாய்க்கு வரி விலக்கு அளித்து இருந்தார்கள். இந்த அறிக்கையினுடைய சிறப்புகள் மீது உடனடியாக அறிவிக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு இனங்களுக்கு வரிவிலக்கு கொடுத்து, 40 கோடி ரூபாய்க்கு மேல் வரி விலக்கு தந்தார்கள். ஆகவே, மொத்தம் ஒரே ஆண்டில் கொடுக்கப்பட்டிருக்கிற சலுகை 454 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சலுகை அளித்து இருக்கிறார்கள். இந்த ஒரு ஆண்டில் மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) 1996-97, 1997-98 ஏறக்குறைய 11 மாத காலத்திற்குள் இந்தச் சமுதாயத்திற்கு, மெர்ச்சன்ட் கம்யூனிட்டி என்று சொல்லப்படுகிற வணிக சமுதாயத்திற்கு, தொழில் அதிபர்களுக்கு, தொழில் முனைவோர்களுக்கு இவ்வளவு பெரிய சலுகையைச் செய்திருக்கிறார்கள். இருந்தாலும் தாகம் தீரவில்லை என்று சொல்வதைப்போல, பல்வேறு உறுப்பினர்கள் இன்னும் பல்வேறு பொருட்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனக்கு இங்கே நினைவுக்கு வருகிறது. நமது சட்டமன்றத்திலே சிறப்பாகப் பணியாற்றுகின்ற திரு. அழகிரி அவர்களே உரத்த குரலில் சொன்னார்கள். ஒரு சமுதாயத்திற்கு மட்டும், வியாபாரிகளுக்கு மட்டும் இவ்வளவு சலுகைகளைச் செய்கிறீர்களே, வேறு பிரிவினரைப் பார்க்கவில்லையா என்று. ஆகவே, அந்த ஒரு சிந்தனையும் எங்களுக்கு இருக்கிறது. ஆனால், அதே சமயத்தில்

தொழில் முனைவோர்களுக்கும், சிறு தொழில் செய்பவர்களுக்கும், வணிகர்களுக்கும் இந்தச் சலுகையை அளித்தால் அதன்மூலமாகக் கிடைக்கிற லாபம் அரசுக்கு எந்த வகையிலேயும் பாதிப்பு ஏற்படாது என்ற வகையிலேதான், இந்தச் சீர்திருத்தங்களை எல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். இருந்தாலும் இந்தச் சீர்திருத்தத்தில் பலருக்கு இன்னும் முழு திருப்தி ஏற்படவில்லை. இன்னமும் அவர்களுக்குப் பாராட்ட வேண்டுமென்ற மனது இல்லை. Appreciation is a kind of civilisation-- பாராட்டுவதற்கு ஒரு பண்பாடு வேண்டும் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். நிலை தடுமாறுகிறபோது, நினைப்பு தடுமாறுகிறது. இருக்கிற இடத்திலே இருக்கிறபோது, பிரமாதமாக இருப்பார்கள். சேர்ந்த இடத்திலே இருக்கிற நிலை காரணத்தால் அவர்களுக்குச் சிந்தனை மாறுகிறது. ஒரு பூசாரி வேப்ப மரத்தைப் பார்த்தால், அவனுக்குத் தோன்றுவது எல்லாம் வேப்ப மரத்திலே இருக்கிற தழையை அந்த வேப்பந் தழையைப் பிடித்துக் கொண்டு 4 தெருக்களுக்குச் சென்று வந்தால், இன்றைக்கு பொழுது போகும், பசி அடங்கும், ஒரு வருமானம் கிடைக்கும் என்பதுதான். ஆனால் அதே வேப்ப மரத்தைப் பார்க்கின்ற விஞ்ஞானிக்கு வேறு எண்ணம் வரும். இந்த வேப்பந்தழையிலிருந்து மருந்து தயாரிக்கலாம். மார்கோ சோப்போ, நீம் சோப்போ தயாரிக்கலாம் என்ற எண்ணம் வரும்; அல்லது வேறு பல தைலங்களைத் தயாரித்து, வியாதிகளுக்கு மருந்தாக பயன்படுத்தலாம் என்ற எண்ணம் வரும். ஆகவே, நிலை எப்படி இருக்கிறதோ, அப்படித்தான் நினைப்பு இருக்கும். நான் கல்லூரியிலே படிக்கிற காலத்திலே பேராசிரியர் ஒருவர் ஒரு கதையைச் சொன்னார். நம்முடைய பேராசிரியர் அல்ல. நான் படித்த காலத்திலே ஒரு ஆங்கிலப் பேராசிரியர். அமெரிக்க நாட்டிலே ஒரு பிரபலமான ஜேப்படி திருடன் மாலை நேரத்திலே ரயிலிலே பயணம் செய்கிறான். அவன் பயணம் செய்து கொண்டிருக்கிற சீட்டிற்குப் பக்கத்திலே அழகான பெண் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். இருவரும் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். பயணத்தினுடைய பொழுது போக்காக இருவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தான் இறங்க வேண்டிய ரயில் நிலையம் வந்தவுடன், தன்னைத் தயார்படுத்திக் கொண்டு இறங்குவதற்கு, தன் பையைத் தேடிப் பார்க்கிறான். பையில் இருந்த பர்ஸ் காணவில்லை. திரும்பிப் பார்க்கிறான். அந்தப் பெண்ணின் கையில் அந்த பர்ஸ் இருக்கிறது.

பிற்பகல் 1-20

தன் பையிலே இருந்த பர்ஸ் அந்தப் பெண்ணுடைய கைக்குச் சென்றுவிட்டது. அவனுக்கு ஆச்சரியம். பிரமிப்பு ஒருபுறம். நாமோ பிரபல ஜேப்படித் திருடன். அமெரிக்காவிலே நாம் பெயர் வாங்கி விட்டோம். நம்மிடமே ஒரு பெண்மணி கைவரிசையைக் காட்டிவிட்டாளே என்று அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இருவரும் இறங்கிப் பேசிக்கொண்டு போகும்போது அவன் ஒரு விருப்பத்தை வெளியிட்டான். நானோ பிரபல ஜேப்படித் திருடன். என்னிடமே உன்னுடைய கைவரிசையைக் காட்டிவிட்டாய். நான் ஒரு யோசனை சொல்கிறேன். உன் விருப்பத்தைச் சொல் என்றான். இருவரும் கணவன், மனைவி ஆகிவிட்டால் நமக்கு ஒரு குழந்தை பிறந்து அது ஒரு ஆண் குழந்தையாக இருந்தால் உலகத்திலேயே மிகப் பெரிய ஜேப்படித் திருடனாக்கிவிடலாமே என்று அந்த யோசனையைச் சொல்லியிருக்கிறான். அந்தப் பெண்மணி ஏற்றுக்கொண்டார். ஒரு வருடம் கழித்து ஒரு அழகான குழந்தை பிறந்தது. ஆனால் ஆண் குழந்தை பிறந்ததில் மகிழ்ச்சி இருந்தது. பிறந்த குழந்தை கையை பொத்திக்கொண்டு பிறந்துவிட்டது. அவர்களுக்கு வேதனை ஒரு பக்கம். உடனடியாக அந்தக் குழந்தையை தூக்கிக்கொண்டு போய் ஒரு மனோதத்துவ டாக்டரிடம் எடுத்துச் சென்றார்கள். அந்த மனோதத்துவ டாக்டர் அந்தக் குழந்தையினுடைய நிலைமையைக் கண்டு, பெற்றோருடைய வாழ்க்கையைப் பற்றி கேட்கிறார்கள். இருவரும் மனம் திறந்து ஒளிவு மறைவின்றி சொன்னார்கள். உடனடியாக அந்த மருத்துவர் தனது கழுத்திலே மாட்டியிருந்த அந்தத் தங்கச் சங்கிலியை எடுத்து அந்தக் குழந்தையின் முன்னாலே ஆட்டுகிறார். தங்கச் சங்கிலியைப் பார்த்தவுடன் அந்தக் குழந்தை தாவிப் பிடிப்பதற்கு கையை விரித்தது. கைக்குள்ளே அழகான தங்க மோதிரம். அந்தக் குழந்தை பிறக்கிறபோதே நர்ஸ் கையிலிருந்த தங்க மோதிரத்தைப் பிடித்துக்கொண்டே பிறந்திருக்கிறது. அப்படி இருவருடைய நிலைதான் அவர்களுடைய பிள்ளைப் பிறப்பு. ஆகவே எந்தக் கண்ணோட்டத்தோடு இந்த நிதிநிலை அறிக்கையை அணுகுகிறார்களோ, வரிக் கொள்கையை அணுகுகிறார்களோ, அந்த வகையிலேதான் இந்த நிதிநிலை அறிக்கை இருக்குமென்பதை நான் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறையில் ஏறக்குறைய 4 பிரிவுகள் பிரிந்து செயலாற்றுகிறது. (1) வரி மதிப்பீடு—'அசெஸ்மெண்ட் விங்' (2) மேல்முறையீடு— 'அப்பெலட் விங்' (3) செயலாக்கப் பிரிவு— 'என்ஃபோர்ஸ்மென்ட்' (4) தணிக்கை—'ஆடிட்' என்று 4 பிரிவுகள் இருக்கின்றன. இதற்கு மேலே சேல்ஸ்டாக்ஸ் அப்பெலட் டிரிப்யூனல் என்று ஒரு மேல் முறையீடு நடுவர் மன்றம் இருக்கிறது. அதைப்போலவே தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர்மன்றம்—"தமிழ்நாடு டேக்சேஷன் ஸ்பெஷல் டிரிப்யூனல்'. இந்த நடுவர், மன்றம் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை விசாரிக்கும். பல்வேறு விதமான விளக்கங்கள் இருக்கின்றன. இந்தத் துறையில் பணியாற்றுவதிலே ஒன்றே ஒன்று. இந்தச் செயலாக்கப் பிரிவிலே மிக முக்கியமானது. இதைக் கவனிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். செக் போஸ்ட் பற்றிச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே 61 செக் போஸ்ட்கள் இருக்கின்றன. அதிலே நம்முடைய மாநிலத்தினுடைய எல்லைகளிலே— பார்டர்களிலே 31-ம், உள் பகுதியிலே உள்நாட்டிலே 31 செக் போஸ்ட்களும் இருக்கின்றன. இது வேண்டுமா, வேண்டாமா என்று இங்கே ஒரு பட்டிமன்றம் நடைபெற்றது. நம்முடைய மாண்புமிகு கம்யூனிஸ்டு கட்சியினுடைய சி.பி.எம்.-உடைய தோழர், மணி அவர்கள் வேண்டுமென்று சொன்னார்கள். பலபேர் வேண்டாம் என்று சொன்னார்கள். அதிலே நிர்வாகச் செலவிலே அவர் சொன்ன ரப்பர் எஸ்டேட்டுடைய 5 செக் போஸ்ட்டுகளுக்காகவே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 லட்சம் செலவாகிறது. அந்த அளவிற்கு அதில் வருமானம் இல்லை. இப்போது அரசாங்கத்தினுடைய கொள்கை, முழுமையாக எடுத்துவிடவில்லை. அதற்கென ஒரு குழு போடப்பட்டது. அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு போடப்பட்டது. இன்று அந்தக் குழு என்ன பரிந்துரைகளைச் செய்ததோ, அதே பரிந்துரைகளைத்தான் அந்த வணிக வரி சீரமைப்புக் குழு செய்திருக்கிறது. படிப்படியாக தேவையில்லாத 'நான்-வையபிள்' செக் போஸ்ட்டுகளை எடுத்துவிடலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் சில செக் போஸ்ட்டுகள் எடுக்கப்படும். ஆனால் அதற்குப் பதிலாக அதைக் கண்காணிப்பதற்கு 'ரோலிங் ஸ்குவாட்' அமைக்கப்படும். இது மூவிங் ஸ்குவாட் மாதிரி ஃபிளையிங் ஸ்குவாட் மாதிரி--பறக்கும் படையைப் போல பல்வேறு இடங்களுக்குச் சென்று கண்காணிக்கும். அத்தகைய தகுந்த மாற்று அமைப்பு ஏற்படுத்தப்படும். ஆனால் ஒரு பயம். பணியாளர்களுக்கு

எங்கே எதிர்காலத்திலே ப்ரோமோஷன் இருக்காதோ, அல்லது வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விடுமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். எந்தப் பணியாளர்களுக்கும் வேலை இழப்பு இருக்காது என்பதை இந்த அரசு உறுதியாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

இப்படி நான்கு பிரிவுகள் தற்போது இயங்கி வருகின்றது. அதற்கு அடுத்தபடி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த பெருந்தன்மையோடு இவ்வளவு பொருட்களை ஈட்டித் தருகிற, வருமானத்தைத் தருகிற இந்தத் துறையை நவீனமாக்க வேண்டுமென்று, கணிப்பொறி அமைக்க வேண்டுமென்று கருதி, ரூ. 3 கோடியை இந்த ஆண்டே கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே பல்வேறு நகரங்களிலே இருக்கின்ற தலைமைப் பிரிவுகளிலே கணிப்பொறி அமைக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் முழுமையாக சேலம், மதுரை, திருநெல்வேலி போன்ற தலைமையிடங்களிலே கணிப்பொறி அமைத்து, இந்த வரி சேமிப்புக்கு முழுமையாக உதவ வேண்டுமென்ற திட்டத்தோடு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு ரூ. 3 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-25

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் வணிகர் நல வாரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதுவும் தலைவர் கலைஞர் அவர்களுடைய முத்திரையாக இருக்கிற காரணத்தினாலேதான், திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்க முடிகிறது. குடிநீர் வடிகால் வாரியம், உணவுத் துறையிலே உணவுக் கழகம், அதேபோல குடிசை மாற்று வாரியம் இப்படி ஒவ்வொரு துறையிலும் தன்னுடைய முத்திரையைப் பதித்தார்கள். வணிக வரித் துறையிலே, வணிகர் நல வாரியம் என்பது 1989-ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. அந்த வாரியம் இடையிலே நொடித்துப் போய்விட்டது. அது அரசியல் ஆக்கப்பட்டு, அதிலிருந்த பணமெல்லாம் விரயம் ஆகிவிட்டது. திரு. ஞானசேகரன் பல கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார். ஏறக்குறைய 23,237 பேர் அதிலே ஆயுட்கால உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதிலே இருதய நோய், சிறுநீரகக் கோளாறு போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டால், ஒவ்வொருவருக்கும் 25,000 ரூபாய் அளிக்கப்படுகிறது. இந்த வாரிய உறுப்பினர்களில் பொருள்

ஈட்டும் குடும்பத் தலைவர் இறந்து விட்டால் அவர்களுக்கு ரூ. 50,000 குடும்ப நல நிதியாகக் கொடுக்கப்படுகிறது. நலிவுற்ற உறுப்பினர்களுடைய குழந்தைகளுக்கு கல்லூரிக் கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றிற்கு ஆண்டுக்கு 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. 10-ஆம், 12-ஆம் வகுப்புகளில் முதல், இரண்டு, மூன்று இடங்களில் மதிப்பெண் பெறுகின்றவர்களுக்கு முறையே 25,000, 10,000, 5,000 ரூபாய் என்ற வகையிலே அவர்களுக்கு உதவி செய்யப்படுகிறது.

அதுபோலவே, விளையாட்டைப் பொறுத்தவரைக்கும் சர்வதேச அளவில், அகில இந்திய அளவில், மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளிலே வெற்றி பெற்றவர்களுக்கு வரிசையாக தலா ரூ. 25,000, 10,000, 5,000 என்று கொடுக்கப்படுகிறது. இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் தொகை வழங்கப்படுகிறது. ஆனால், இந்தத் துறையைப் பார்ப்பதற்கு கடினமான துறையாக இருக்கிறதே. இதிலேகூட இவ்வளவு சிறப்புகளை உருவாக்க முடியுமா என்றிருக்கிறது. அதிலும், மாவட்டந்தோறும் இப்பொழுது ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அதிலே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள. கூட்டுறவு நிறுவனத்தின் சார்பாகவும், வியாபாரிகள், வணிகர்களின் சார்பாகவும் அதிலே அங்கம் வகிக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக அதிலே அங்கம் வகிப்பதற்கு விண்ணப்பங்கள் பெறப்படலாம் என்ற கருத்தைச் சொன்னார்கள். அவர்கள் தலைமையிலே மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு, இங்கே ஏராளமான கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அறிக்கையை ஏன் வெளியே வைக்கவில்லை, ஏன் எங்களுக்குத் தரவில்லை. இதென்ன சிதம்பர இரகசியமா என்றெல்லாம் இங்கே கேட்டார்கள். இந்த அறிக்கை முழுவதையும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பகுதியைப் படித்து, ஒரு பகுதியை ஆய்வு செய்து, சில அறிவிப்புகளையும், சில சலுகைகளையும் தந்திருக்கிறார்கள். நிர்வாகத்தின் சார்பாக பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக, அதிகாரிகள் மட்டத்திலும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு சில பிரச்சினைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. வருகிற 10-ஆம் தேதி மீண்டும் வணிகர் சங்கத்தின் சார்பாக பிரதிநிதிகளையும் சீரமைப்புக் குழுவினுடைய உறுப்பினர்களையும் வரவழைத்து, இந்தத் துறையினுடைய

ஆணையரும், செயலாளரும் பேசவிருக்கிறார்கள். அதிலே, பல்வேறு விதமான கருத்துக்களை எடுத்து, மாண்புமிகு முதலமைச்சருடைய பார்வைக்குக் கொண்டு சென்று, இறுதி முடிவு எடுக்கப்படும். இதிலே, இவ்வளவு வேகமாக பந்தயக் குதிரைப் போல பணியாற்றுகிறாரே, அவருடைய உணர்வையும், அவருடைய வேகத்தையும் தெரிந்து, இந்தத் துறையினுடைய செயலாளரும், ஆணையாளரும், வேக, வேகமாக சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காக, சில அறிவிப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு அறிவிக்கின்றேன்.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் சென்ற வரவு செலவுத் திட்டக் கூட்டத்திலே பேசினார்கள். இன்றைக்கும் இங்கே வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் கூறியது, "புளிச்சக் கீரை கிராமத்திலே விளைகிறது. காலை உணவுக்குப் பயன்படுகிறது. அதிலேயிருந்து தயாரிக்கப் பெற்ற கயிற்றுக்கு நீங்கள் வரி போட்டு விடுகிறீர்களே" என்று ஆதங்கப்பட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புளிச்ச நார் கயிற்றுக்கு 4 சதவிகித வரியை, நீக்கிவிட்டார் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மன்றாடியார் அவர்கள் சொன்னார்கள், மாட்டுத் தீவனத்திற்கு வரி நீக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் கோதுமைத் தவிடு இன்னும் சேர்க்கப்படாத காரணத்தால் அரசாங்க அதிகாரிகள் அதற்கு வரி போடுகிறார்களே, அதன் நிலைமை என்ன என்று கேட்டதற்கு, தற்போது கோதுமைத் தவிட்டுக்கு இருக்கிற 4 சதவிகித வரியை அறவே நீக்கி, கோதுமைத் தவிட்டுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஞானசேகரன் அவர்கள் இந்து பக்தர்களுக்காக கொஞ்சம் அதிகமாகவே வாதாடினார்கள். எங்களுக்கு விபூதிக்கு வரி விலக்கு இல்லையா என்று கேட்டார்கள். ஏற்கெனவே பழனி பஞ்சாமிர்தத்துக்கு வரி விலக்குத் தந்த கலைஞர் அவர்கள் விபூதிக்கும் தந்திருக்கிறார்கள். நாமக்கட்டிக்கும் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே தலைவர் கலைஞர் அவர்கள் சைவத்தையும், வைணவத்தையும் சமமாகப் பாவித்து, இருவருக்கும் வரி விலக்கு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் கேட்டது விபூதிக்கு, ஆனால்

தலைவர் அவர்கள் இன்றைக்கு நாமக்கட்டிக்கும் சேர்த்து வரி விலக்குத் தந்திருக்கிறார்கள். திரு. ஞானசேகரன் கேட்காத பொருளே இல்லை. தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்துப் பொருட்களுக்கும், திரு. ஞானசேகரன் அவர்கள் வரிவிலக்கு கேட்பதைப் பார்த்தால், தமிழ்நாட்டிலே புதிய வரிகள் போட்டுக் கொண்டு அரசாங்கம் நடத்த முடியாது. அத்தனைக்கும் வரி விலக்கு கேட்டுவிட்டார்கள்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மின்மாற்றி மற்றும் ஒலிபெருக்கி ஆகியவை கம்ப்யூட்டரிலும் மின் அணு சாதனங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மின்னணு சாதனங்களுக்குரிய உதிரி பாகங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 2% வரியே இப்பொருள்களுக்கு விதிக்கலாம் என்ற எண்ணத்தில் இப்பொருள்கள் மீதான 11% வரி 2% வரியாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதே மாதிரி பழைய ப்ளாஸ்டிக் பொருள்களுக்கு வரி போடலாமா என்று கேட்டார்கள். ஓரளவிற்கு நியாயமாகத் தெரிகிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னபோது அது எப்படி போட்டிருக்க முடியும் என்று கேட்டார்கள். பழைய ப்ளாஸ்டிக் பொருள்களுக்கு தற்போது 11% வரி உள்ளது. ப்ளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருள்களுக்கு 4% வரி. மூலப் பொருள்களுக்கு விதிக்கப்படும் 4% வரி போன்று பழைய உடைந்த பிளாஸ்டிக் பொருள்களுக்கு கடைசி கொள்முதல் என்ற நிலையில் 11% வரியை 4% வரியாக குறைத்திருக்கிறோம் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் பெர்னார்டு, மாண்புமிகு உறுப்பினர் மதிவாணன் போன்றவர்கள் எல்லாம் முதலமைச்சரிடம் ஒரு கோரிக்கை வைத்தார்கள். மீனவர்களுக்காக மீனவ நண்பர்களைப்போல் வாதாடினார்கள். மீனவர்கள் பயன்படுத்துகிற வலைக்கு ஆந்திராவிலே வரியில்லை. கர்நாடகத்தில் வரியில்லை இங்கே மட்டும் வரி போடலாமா என்று கேட்டார்கள். அந்த

முறையில் வரி போடவில்லை. மீனவர்களுக்கு நாம் பல திட்டங்களில் மானியங்கள் கொடுக்கிறோம். மீன்வலை உற்பத்தி செய்கின்ற ஃபேக்டரியிலே பல முதலாளிகள் இருக்கிறார்கள். என்றாலும் உங்கள் குறைகளைக் கேட்டு 8% வரியை 4% வரியாக குறைத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) மன்னிக்கவும் 11% வரியை 8% வரியாக குறைத்திருக்கிறார்கள். அதைப்போல பழைய பித்தளைப் பாத்திரங்கள், புதிய பித்தளை, செம்பு மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள் மீது வரி குறைக்கப்பட்டு இருக்கிறது. புதிய பித்தளை, செம்பு மற்றும் எவர்சில்வர் பாத்திரத்திற்கு 8% விற்பனை வரி இருந்தது. அந்த 8% விற்பனை வரி இப்போது 4% ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பால் வளத் துறை சார்பாக பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். பாலித்தீன் தாள்-ஷீட்ஸ்களுக்கு தற்போது 8% வரி; ஆனால் பாலித்தீன் தாள்களில் செய்யப்படும் பைகள் 11% வரி. இந்த பாலித்தீன் பைகளில் ஆவின் பால் அடைத்து விநியோகிக்கப்படுகிறது. இதனால் பால்வளத் துறைக்கு ஏற்படும் நஷ்டத்தில் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம் என்பதற்காக வேண்டி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று ஆவின் பால் பைகள் தயாரிக்க வாங்கப்படும் பாலித்தீன் தாள்களுக்கு இப்போது 8% லிருந்து 4% ஆக குறைக்கப்படும் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து நம்முடைய மதுரை சட்டமன்ற உறுப்பினர் வேலுச்சாமி அவர்கள் மதுரை வியாபாரிகளுக்காக, காகிதத்தால் செய்கிற பைகளுக்கு ஏற்கனவே 8% என்று இருக்கிறதை குறைக்க வேண்டும் என்று கேட்டதால் காகிதத்தினால் செய்த பைகளுக்குள்ள 8% வரியை 4% ஆக குறைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நிர்வாகச் சீர்திருத்தம். சில சட்டத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அனுமதித்திருக்கிறார்கள். அதுதான் இங்கே முக்கியமானது. நண்பர் சொக்கர் அவர்களும் ஞானசேகரன் அவர்களும் நம்முடைய மரியாதைக்குரிய ராஜ்குமார் மன்றாடியார் அவர்களும் வரி குறைப்பு வரி நீக்கத்தைவிட முக்கியமான சட்டத் திருத்தங்கள் வேண்டும் என்று கேட்டார்கள். அதிலே சில முக்கியமான சட்டத் திருத்தங்களை இந்த அவைக்கு நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையிலே வடக்கு, தெற்கு, மத்திய வட்டம் என்று வணிக வரி வட்டங்கள் இருக்கின்றன. ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. 3 வட்டங்கள் இருக்கின்றன. சென்னையிலே 3 வணிக வரி கோட்டங்கள் உள்ளன. இன்னொரு புதிய வட்டம் உருவாக்க சென்னை கிழக்குக் கோட்டம் என்ற புதிய கோட்டம் ஒன்றை உருவாக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

அடுத்து, மிகப் பெரிய வணிகர்கள் கணக்குகளை விரைவாக மதிப்பீடு செய்யவும், முறையாக வரி செலுத்தும் வணிகர்கள் நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் சென்னையில் நான்கும் கோவையில் இரண்டுமாக கூடுதல் வசதிகளுடன் - உங்களுக்கு தெரியும் ஃபாஸ்ட் டாக்ஸ் என்று சொல்வார்கள் உடனடியாக வரி செலுத்துகிறவர்களுக்கு தங்குதடை இல்லாமல் அலுவலகத்திலே வந்து வரி செலுத்துவதற்கு வேண்டிய பல்வேறு வசதிகளை உருவாக்கித் தருவது; அந்த வகையில் - 6 மத்திய விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள் உருவாக்கப்படும். மூன்றாவதாக வணிக வரி ஆணையத்திற்கு இதுவரைக்கும் தனிக் கட்டிடம் இல்லை. தாய்த் துறையான வருவாய்த் துறையில்தான் அவர்கள் இதுவரைக்கும் வாடகைக்கு இருந்துகொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் வெளியே செல்ல வேண்டும் என்று உத்தரவிட்ட காரணத்தினால் நாமே ஒரு சொந்த இடம் தேடிக்கொள்ளலாம் என்று விரும்பி மாண்புமிகு முதல்வரிடம் வேண்டுகோள் வைத்தபோது இந்தத் துறைக்கென்று ஒரு தனிக் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளார் என்ற செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாநிலங்களுக்கிடையிலான சோதனைச் சாவடிகள் நவீனமயமாக்கப்படும் என்பது நம்மடைய கமிட்டியினுடைய ரெக்கமன்டேஷன். அதை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கான எல்லாவிதமான முயற்சிகளிலும் இந்தத் துறை இறங்கியிருக்கிறது.

பிற்பகல் 1-35

தற்போது சேலம், வேலூர், திருநெல்வேலி நீங்கலாக மற்ற பல்வேறு நகரங்களுக்கு கணினி அமைப்புகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட மிக முக்கியமான ஆணையர் அலுவலகம் உள்ள மதுரை, சேலம், திருநெல்வேலி, வேலூர் போன்ற இடங்களுக்கு அந்தக் கணினிப் பொறிகள் இல்லாத, கம்ப்யூட்டர் சாதனம் இல்லாமல் இருக்கிறவைகளுக்கு அதையும் உடனடியாக பெற்றுக் கொள்வதற்கு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

பொது விற்பனை வரிச் சட்டத்தில் ஏப்ரல் 30-க்கு பிறகு பதிவுச் சான்று புதுப்பிக்கப்பட வேண்டும் என்று ஒரு சட்டம இருக்கிறது. ஜூன் 30-க்குள் கட்டணத்திற்குச் சமமான தொகையை தண்டமாகச் செலுத்தி, பெனால்டியாகச் செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வழி செய்யப்பட்டது. ஆனால் விறபனை வரி சீரமைப்புக் குழு பரிந்துரையின்படி இந்தக் கால வரம்பை செப்டம்பர் 30 வரை நீட்டிப்பதற்கு ஆணையிடப்பட்டு நீடடிக்கப்பட்டிருக்கிறது --ஜூனிலிருந்து செப்டம்பர் 30 வரை.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் வரி விதிப்புச் செய்யப்பட்ட தொகைக்கும், படிவத்திலே தெரிவிக்கப்பட்டுள்ள வரியுள்ள விற்பனைத் தொகைக்கும் உள்ள வித்தியாசத்திற்கு தண்டத் தொகை விதிக்கப்படுகிறது. இதனை மாற்றி அமைக்க வணிகர்கள் சங்கங்களும், விற்பனை வரி சீரமைப்புக் குழுவும் பரிந்துரை செய்துள்ளது. இதனை ஏற்று தண்டத் தொகை மேற்கூறியவாறு விதிப்பதற்குப் பதிலாக உண்மையான மதிப்பு விற்பனை அதாவது எவ்வளவு மறைத்து வைத்து இருக்கிறார்களோ, ஏமாற்றியிருக்கிறார்களோ அல்லது தெரிவிக்காமல் இருக்கிறார்களோ அந்தத் தொகைக்கு மட்டுமே தண்டத் தொகை விதிக்க, பெனால்டி விதிக்க தக்க சட்டத் திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும். இங்கே கூட நம்முடைய காண்டிராக்ட் லேபர் விஷயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கருத்து தெரிவித்தார்கள். அது நீண்டகாலமாக உள்ள ஒரு கோரிக்கை என்று சொன்னார்கள். பொது விற்பனை வரிச் சட்டத்திலே கட்டிட ஒப்பந்தப் பணிகளுக்கு மட்டுமே இணக்க வரி முறை இருந்தது. இதனை அனைத்து ஒப்பந்தப் பணிகளுக்கும் யார் எல்லாம் காண்டிராக்ட் லேபர்களாக எந்தத் தொழிலில் இருக்கிறார்களோ அந்தத் தொழில்களுக்கு எல்லாம் இந்த விற்பனை வரி சீரமைப்புக் குழு பரிந்துரை செய்து இதனை ஏற்று தக்க சட்டத் திருத்தம் கொண்டு வர இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வணிக வரி ஆணையர் அளிக்கும் பொருட்களின் வரி விகிதம் தொடர்பான தெளிவுரைகள் வரி விதிப்பு அலுவலர்களையோ அல்லது வணிகர்களையோ சட்டப்படி கட்டுப்படுத்தும் நிலையில் இல்லை. இதனை மாற்றி அமைத்திட

விற்பனை வரி சீரமைப்புக் குழு பரிந்துரை செய்ததை ஒட்டி நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி வரி விகிதம் தொடர்பான தெளிவுரைகளை ஆணையரிடமிருந்து பெறவும், இந்தத் தெளிவுரைக்கு சட்ட அங்கீகாரம் அளிக்கவும் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும். வணிக வரித் துறையில் பணிகளை விரைந்து முடிக்க ஏதுவாக படிவங்கள் மற்றும் அச்சுச் செய்யப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு தனியாக ஒரு அச்சகம் அமைப்பதற்கு இந்தத் துறை ஏற்பாடு செய்திருக்கிறது.

இறுதியாக மிக முக்கியமான செய்தியாக நான் கருதுவது, மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை, ஆணையை நிறைவேற்றத் தக்க வகையில் வணிகர்கள் புரிந்து கொண்டு செயல்பட ஏதுவாக விற்பனை வரிச் சட்டங்கள், அதனுடைய விதிகள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருப்பதை தமிழில் மாற்றி அமைக்கப்படும். முதல் கட்டமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள் அந்த விற்பனை வரிச் சட்டத்திற்கான தமிழாக்கம் உள்ள அட்டவணை வெளியிடப்படும். 1998-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளில் இந்தத் துறையினுடைய முழு சட்டமும், தமிழாக்கம் செய்யப்பட்டு வணிகர்களுக்கும், பொது மக்களுக்கும் அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். உங்கள் கோரிக்கைகள், கருத்துக்கள் அனைத்தையும் இந்தத் துறை ஆய்வு செய்து நிச்சயமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்று சொல்லி உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் நீங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டு அரசு கோரிய தொகையை வழங்கவேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்க விரும்பும் உறுப்பினர்கள் நான் கூப்பிட்டால்தான் எழுந்து நிற்க வேண்டும். திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நலிந்த மீனவர்கள் பலன் அடையும் விதத்தில் மற்ற மாநிலங்களில் வலைக்கு வரி இல்லாதபோது இப்போது 11 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருந்தாலும் வரி இல்லாத பொருளாக வலையை அறிவிக்குமாறு மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி மீனவர்கள் பயன்படுத்துகிற வலைக்கு இருக்கிற 8 சதவீத வரியை ரத்து செய்ய முன்வருவார்களா, அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது கோரிக்கை வைத்ததோடு நில்லுங்கள். உடனே அவர் எப்படி பதில் சொல்ல முடியும்?

மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 11 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம். இந்த வலையைத் தயாரிப்பவர்கள் தொழிலதிபர்கள், பயன்படுத்துபவர்கள் மீனவர்கள்.

பிற்பகல் 1-40

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவையில் இல்லை. அவையில் இல்லை என்றாலும் தன்னுடைய காதுகளைப் பேரவையோடு இணைத்துக் கொள்கிற இயல்பு படைத்தவர் முதல்வர் என்பதை நான் அறிவேன். அவர் அங்கிருந்தே கேட்டுக் கொண்டு இருந்திருக்கக் கூடும் என்பதை நான் அறிவேன்.

நான் என்னுடைய முழு வலிமையையும் திரட்டிக் கேட்டுக் கொள்ள விரும்புவது தொடர்ந்து நான் சட்டமன்றத்தில் வலியுறுத்தி வருகிறேன். பனியன் தொழில் துறை பிற மாநிலங்களோடு போட்டியிடுகிற அளவிற்கு வளர்ச்சி அடைய வேண்டுமானால் கலைஞரின் கருணையையொட்டித்தான் அந்தப் பனியன் தொழில் இருக்கிறது. எனவே அருள்கூர்ந்து-இதற்குமேல் என்னால் விண்ணப்பிக்கவே முடியவில்லை. இதுதான் ஒரு நிறைவான விண்ணப்பம். அந்த ஒரு சதத்தையும் எடுத்துவிட வேண்டி...

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர் வலை வரிக்குறைப்பு குறித்து மாண்புமிகு அமைச்சர் இங்கே கூறும்பொழுது 8 சதவிகிதம் வரி என்பது 4 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று கூறி, பிறகு தவறுதலாகக் கூறிவிட்டதாகச் சொல்லி, 11 சதவிகிதம் 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று திருத்திச் சொன்னார். எனவே, அவர் தவறுதலாகக் கூறிய 4 சதவிகிதமே வரியாக இருக்கட்டும் என்கின்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பனியனுக்கு ஒரு சதவிகிதம் இருப்பதை ரத்துச் செய்ய வேண்டும் என்று. இன்று. நேற்று அல்ல. நீண்டகாலமாக. இந்தச் சட்டமன்றம் என்றைக்குத் தோன்றியதோ அன்று முதல் நம்முடைய சுப்பராயன் அவர்கள் குரல் எழுப்பி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, பனியனுடைய வரி அறவே ரத்துச் செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், நானே திருப்பூர் பனியன்தான் அணிகிறேன். அதனால். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேலும் நான் 'Point of information' allow பண்ணினால் எல்லாச் சலுகைகளையும் முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள். நான் அதை ஒத்துக்கொள்ள முடியாது. (சிரிப்பு) விவாதம் முடிவுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 4--பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிர்வாகம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

திரு. இ. கணேசன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி

திரு. ஜி.கே. மணி: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் பற்றிய 4-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 79,32,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் புதன்கிழமை (9-4-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

141. 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரிய விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-05-1996-ஆம் நாளிட்ட 200-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

142. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் நாற்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

115. மானியக் கோரிக்கை எண் 4--தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள்-நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. 1997-98. (தமிழ், ஆங்கிலம்).

இணைப்பு

(272-ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண் 4

தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள்-நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1997-98

முன்னுரை

வணிக வரித் துறை, மிக அதிக அளவு வரி வருவாய் ஈட்டித்தரும் மாநில அரசுத்துறையாகும். இத்துறை, 1995-96-ல் வசூலித்த மொத்த வரிவருவாய் ரூ. 5,023 கோடியாகும். இது, மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 70 விழுக்காடாகும். 1996-97 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய மேற்கொள்ளப்பட்ட வரிவசூல் ரூ. 5,137 கோடியாகும். சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் வணிகவரித் துறையின் தலைவராவார். அவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் உள்ளனர். களப்பணியில் இவருக்கு உதவ, துணை ஆணையர்கள் (ஆட்சிப்பகுதி) மற்றும் துணை ஆணையர்கள் (செயலாக்கம்) உள்ளனர். கள வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் அலுவலகங்கள், வணிகவரி அதிகாரிகளின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன. இணைப்பில் உள்ள விளக்கப்படம் இந்த அமைப்பின் ஒட்டு மொத்த நிலையைக் காட்டுகிறது.

2. வணிக வரித் துறை, பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

- தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம்.
- தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம்.
- 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்.
- தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்.

[1997 ஏப்ரல் 5

* தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.
* தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.
* தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.
* தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்.
* தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

3. வணிக வரித் துறை செயலாக்கி வரும் பல்வேறு சட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வரி வசூல் குறித்த ஆண்டு வாரியான விவரம் கீழ்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:-

வரி வரவுகள்

சிறு தலைப்புகள்.	1991-92	1992-93	1993-94	1994-95	1995-96	1996-97 (1997 பிப்ரவரி முடிய)
			(ரூபாய் கோடியில்)			
பொது விற்பனை வரி	2,130	2,505	2,818	3,453	4,119	4,201
மத்திய விற்பனை வரி	330	362	393	477	590	611
கேளிக்கை வரி	69	76	82	88	99	98
குதிரைப் பந்தய வரி	5	5	6	5	6	6
ஆடம்பர வசதிகள் வரி	17	22	28	36	51	55
நுழைவு வரி	25	42	70	105	158	166
மொத்த வரி வருவாய்	2,576	3,012	3,397	4,164	5,023	5,137

4. வரி விதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 31-3-96ஆம் நாள் நிலவரப்படி 1,44,284 ஆகும். இதில் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிக்கப்பட்ட 37,455 பேரும் அடங்குவர்.

1997 ஏப்ரல் 5]

பதிவு பெற்ற வணிகர்களின் மொத்த எண்ணிக்கை மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வருகின்ற 1,82,040 வணிகர்கள் உட்பட 3,31,844 ஆகும்.

முக்கியக் கொள்கை மாற்றங்கள்

5. தொழில் வளர்ச்சியையும், வணிக வளர்ச்சியையும் ஊக்குவிப்பதற்காக, நிலையான, தெளிவான, நேயமான வரிவிதிப்புச் சூழ்நிலையை உருவாக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், நீண்டகால வரிவிதிப்புக் கொள்கையை அறிவித்தார்கள். அதன்படி, விற்பனை வரி விதிப்பு அமைப்பில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. பல்வேறு வகை பொருட்களுக்கான வரி வீதங்கள் குறைக்கப்பட்டன. வணிகச் சமுதாயமும் தொழில் முனைவோரும் இதனைப் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

இந்த நீண்டகால வரி விதிப்புக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாவன:-

• வரி வீதங்களைப் பெருமளவு வெளிப்படையானதாகச் செய்வதற்கும், வரிவிதிப்பு மற்றும் வரி வசூலை எளிமையானதாகச் செய்வதற்கும், வரி வீத அமைப்பையும் படிமுறைகளையும் சீரமைத்தல்.

• வரி விதிப்பில் மிகவும் நவீனமுறைகளையும், நவீன நடைமுறைகளையும் கொண்டு வருதல்.

• இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வகை செய்தல் மற்றும் உள்ளூர் கொள்முதல் மற்றும் உள்ளூர் தயாரிப்பை ஊக்கப்படுத்தல்.

• வரி விலக்கு, இணக்க வரி மற்றும் சுயவரி மதிப்பு போன்ற வரிவிதிப்பு நடைமுறைகள் என்ற வகையில் பெரும் எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு நிவாரணம் அளித்தல்.

• வீட்டுத் தேவைப் பொருட்கள் மீதான வரியைக் குறைத்தல்.

6. அரசின் நீண்டகால வரிக் கொள்கையைச் செம்மையாகச் செயல்படுத்த ஏற்ற வகையில் விற்பனை வரி அமைப்பு மற்றும்

நடைமுறைகளில் மேற்கொண்டு மாற்றங்கள் செய்வது பற்றி ஆய்வு செய்ய திரு. சி. தங்கராசு, இ.ஆ.ப. (ஓய்வு பெற்றவர்) அவர்களைத் தலைவராகவும், பின்வருவோர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு அரசு விற்பனை வரிச் சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்தது.

1. திரு. ஆர். சொக்கர்,
சட்டமன்ற உறுப்பினர்,
சிவகாசி தொகுதி.

2. திரு. என்.எஸ்.ஆர். மன்றாடியார்,
சட்டமன்ற உறுப்பினர்,
காங்கேயம் தொகுதி.

3. திரு. எஸ். ரத்தினவேலு, பி.காம்.பி.எல்.,
தலைவர், தமிழ்நாடு வணிகக் கழகம், மதுரை.

4. திரு. எல். ஞானசேகரன்,
தலைவர்,
திருச்சி வணிகக் கழகம், திருச்சி.

5. திரு. ஏ. ஜெயசீலன், பி.எஸ்ஸி.,
சேலம் மாநகர் வணிகக் கழகம்,
லீ. பஜார், சேலம்.

6. திரு. சி. நடராஜன்,
வழக்குரைஞர்,
விற்பனை வரி மூத்த வழக்குரைஞர்.

7. திரு. ராம். தியாகராஜன்,
தலைவர்-நிருவாக இயக்குநர்,
ஆரூரான் சர்க்கரை ஆலை.

இக்குழுவின் ஆய்வு வரம்புகள் வருமாறு:-

1) எளிதான நிருவாகத்திற்கும், வர்த்தக சமுதாயத்தினருக்குரிய இடர்ப்பாட்டை குறைக்கவும், தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழுள்ள தற்போதைய வரி அமைப்பு முறையையும், நடைமுறையையும் ஆய்வு செய்தல்.

2) வரி ஏய்ப்பு செய்யப்படுவதைக் குறைக்கவும், மாநில வரி வருவாயைப் பெருக்கவும், அண்டை மாநிலங்களின் வரி வீதங்களைக் கருத்திற்கொண்டு வரிவீதத்தை ஆய்வு செய்தல்.

3) குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்குகள் குறித்த தற்போதுள்ள அறிவிக்கைகளை ஆய்வு செய்தல்.

4) இம்மாநிலத்திற்குள் வண்டிகளின் போக்குவரத்து குறித்து சோதனைச் சாவடிகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்தல்.

5) விற்பனை வரி மற்றும் ஏனைய வரிகள் குறித்த பல்வேறு சட்டங்களை ஆய்வு செய்தல்; மற்றும் இச்சட்டங்களின் நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.

6) சட்டத்தின் கீழ் அபராதங்களை விதிப்பது குறித்த விதி முறைகளை ஆய்வு செய்து, பரிந்துரைகளை வழங்குதல்.

7) இடர்ப்பாட்டினைத் தவிர்க்க மேல்முறையீடு, மறு ஆய்வு நடைமுறையைச் சீரமைத்தல்.

8) தற்போதுள்ள படிவங்களை ஆய்வு செய்து, படிவங்களை எளிமையானவையாகச் செய்வதற்குப் பரிந்துரைத்தல், வரிவிதிப்பு வட்டங்களிலும் சோதனைச் சாவடிகளிலும் கணினிகளைப் பயன்படுத்தி அவற்றிற்கிடையே தகவல் தொடர்பை இணைத்தல்.

9) சென்ற வரவு-செலவுத் திட்டத்தில் வரிவிதிப்பு நடவடிக்கைகளில் முரண்பாடு ஏதுமிருந்தால், அந்த முரண்பாடுகளைச் சரி செய்வதற்கான கருத்துக்களைத் தெரிவித்தல்.

பல்வேறு வணிகக் கழகங்கள், வணிகர் சங்கங்கள், தனிப்பட்ட வணிகர்கள், வரி வழக்குரைஞர்கள், பணியிலிருக்கும் துறை அதிகாரிகள், ஓய்வு பெற்ற துறை அதிகாரிகள் ஆகியோருக்கு வினாப்பட்டியல் ஒன்றை இக்குழு வழங்கியுள்ளது.

இக்குழு, தமிழ்நாட்டின் பல்வேறு முக்கிய நகரங்களுக்கும், மும்பை, பாண்டிச்சேரி, ஐதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களுக்குச் சென்று, பல்வேறு குழுக்களுடன் கலந்து பேசியது. வரிவிதிப்பு அமைப்பு முறையைச் சீரமைத்தல், அதற்கான நடைமுறைகளை மேம்படுத்தல், வணிகச் சமுதாயத்தினரின் உண்மையான இன்னல்களை நீக்குதல் மற்றும் வரி ஏய்ப்பைத் தடுத்தல் ஆகியவையே இக்குழுவின் முக்கிய

[1997 ஏப்ரல் 5

பணியாகும். விற்பனை வரி சீர்திருத்தக் குழுவின் நோக்கம், கூடுதல் வரி வருவாய் ஈட்டுவதாகும். முக்கியமாக பின்வரும் பிரச்சினைகள் குறித்து, இக்குழு அதன் அறிக்கையை அளித்துள்ளது. அவையாவன:

போலியான பதிவுகளையும், அதன் மூலம், வரி ஏய்ப்பு செய்வதையும் நீக்கும் நோக்குடன் வணிகர்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகளை மேம்படுத்தல்.

பொருள் விளக்கம் தெளிவற்றிருப்பதை நீக்கவும், வரி ஏய்ப்பைக் குறைக்கவும், வரி விதிப்பு வீதங்களைச் சீரமைத்தல்.

மேல்முறையீடுகள், மறு ஆய்வு மனுக்கள் ஆகியவற்றுக்கான நடைமுறைகளைச் சீரமைத்தல்.

நடுவர் மன்றத்தின் சில ஆணைகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்குப் பதிலாக, மேல்முறையீட்டு ஆணைகளை துறை தாமாகவே மறு ஆய்வு செய்வதற்கான அதிகாரங்களை நீக்குதல்.

சோதனைச் சாவடிகள் நிருவாகத்தை மேம்படுத்தல்.

மாநிலத்திற்கு வெளியில் தலைமை அலுவலகங்களைக் கொண்டுள்ள பொறுப்பு முதல்வர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியோரின் முகவர்களுக்கான கூடுதல் விற்பனை வரி விதிப்பிலுள்ள வேறுபாட்டை நீக்குதல்.

வரி வீதங்கள் சீரமைப்புக் குழு

7. வரி வீதங்கள் சீரமைப்புக் குழு ஒன்று ஆண்டுதோறும் அமைக்கப்படுகின்றது. வணிகவரி மற்றும் அறநிலையத்துறை செயலரைத் தலைவராகவும், சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர், நிதித்துறைச் செயலர் ஆகியோரை உறுப்பினர்களாகவும், இணை ஆணையரை (தாமாகவே வரியைத் திருத்தும் அதிகாரம் பெற்றவர்) உறுப்பினர்-செயலராகவும் கொண்டு, 1997-98 ஆம் ஆண்டிற்கென இக்குழு அமைக்கப்பட்டது. இக்குழு வரிவீதங்களைச் சீரமைப்பதற்கான வழிகள் குறித்தும், வரவு-செலவுத் திட்டம் குறித்த ஏனைய தொடர்புடைய பிரச்சினைகள் குறித்தும் ஆய்வு செய்கிறது. விற்பனை வரி சீர்திருத்தக் குழு அளித்த பரிந்துரைகளையும் இக்குழு பரிசீலித்து தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது.

1997 ஏப்ரல் 5]

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை முடிவு செய்வதற்கு முன்னர், வரி வீதங்கள் சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

பொது விற்பனை வரியின் வரிவிதிப்பு முறையில் பெரிய அளவில் மாற்றங்கள் செய்தல்.

8. மேலே விளக்கியுள்ள நீண்ட கால வரிவிதிப்புக் கொள்கையின் நோக்கங்களைக் கருத்திற்கொண்டு, 1996-97 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், தமிழ்நாடு பொது விற்பனை வரி வீதங்கள் மற்றும் முறைகள் ஆகியவற்றில் பெரிய மாற்றங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு அதன்படி வீட்டு உபயோகம், வணிகம், தொழில் ஆகியவற்றுக்கு நிவாரணம் அளிப்பதற்காக பல்வேறு வகைப்பாடுகள் தொடர்பான வரிகள் குறைக்கப்பட்டன. விற்பனை வரி சீர்திருத்த குழுவின் பரிந்துரையின்படி, இம்மாநிலத்தில் வேளாண்மை, வணிகம், தொழில் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில், 1997-98 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வரும் வகையில் மேற்கொண்டும் வரியைக் குறைத்து நிவாரணம் அறிவித்துள்ளார்கள். அவையாவன:--

வரி விலக்கு அளிக்கப்பட்ட இனங்கள்

11 சதவீதத்திலிருந்து:

மீன் உணவு

தேங்காய் ஓடுகளும் துண்டுகளும்

நிலக்கடலை ஓடுகள்

சிகைக்காய்த்தூள்

தயிர்

பஞ்சாமிர்தம்

கல்விக்கான விளக்கப் படங்கள்

சுற்றுலா வழிகாட்டி மற்றும் வரைபடங்கள்

பளுவான பெரிய சம்மட்டி

பழைய வெள்ளி மெட்டி, கொலுசு மற்றும் அரைஞான்

[1997 ஏப்ரல் 5

8 சதவீதத்திலிருந்து:

மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள் ஆகியன.

புற்றுநோய், தொழுநோய், காச நோய் ஆகிய நோய்களின் சிகிச்சைக்கான உயிர் காக்கும் மருந்துகள் மற்றும் நாட்டு மருந்துகள் ஆகியவற்றின் 39 இனங்கள்.

சூரிய ஒளி மின்கலங்கள்

ரூ. 50/-க்குக் குறைவான விலையுள்ள காலணிகள்.

4 சதவீதத்திலிருந்து:

கால்நடைத் தீவனம்
தொன்னை
சாம்பிராணி
இயலாதவர்களுக்கான மிதி வண்டி
செங்கற்கள், ஓடுகள் செய்வதற்கான களிமண்
சென்னா இலைகள், விதை ஓடுகள் நிலவாகைச் செடியின் இலைகள்.
மரவள்ளிக் கிழங்கு கப்பி, திப்பி.

2 சதவீதத்திலிருந்து:

கனிமங்கள்-உலோகங்கள் வர்த்தகக் கழகம்

தங்க நகை ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்கின்ற தங்கம்

பின்வரும் இனங்களுக்கு வரிவிதம் குறைக்கப்பட்டுள்ளது:--

1997 ஏப்ரல் 5]

இனம் (1)	தற்போதைய வரிவீதம் (2)	குறைக்கப் பட்ட வரி வீதம் (3)
1. தமிழ்த் தட்டச்சுப் பொறிகள்	20%	4%
2. மூக்குக் கண்ணாடி வில்லைகள்	20%	8%
3.. தட்டச்சுப் பொறிகள்	20%	8%
4. கண்ணாடியினாலான சிறு மணி மற்றும் கோலிகுண்டு	16%	4%
5. கொசுவத்திச் சுருள் கொசுவத்தி மருந்து கொசுவிரட்டி	16%	4%
6. மின்னணு பாகங்கள் மற்றும் துணைப் பாகங்கள்	11%	2%
7. தலைக்கவசங்கள்	11%	4%
8. நிலக்கரித்தூள் கலந்த சாணவரட்டி	11%	4%
9. சரளைக் கற்கள்	11%	4%
10. பொம்மைகள்	11%	4%
11. மாணவர்கள் வண்ணம் தீட்டுவதற்குப் பயன்படுத்தும் எழுது பொருள் இனங்கள்	11%	4%
12. வறுத்த நிலக்கடலைப் பருப்பு	11%	4%
13. தெளிப்புமுறை சொட்டுநீர் பாசனச் சாதனங்கள்	11%	4%
14. காகிதத்தினால் ஆன பைகள்	11%	8%
15. குடைகள்	11%	8%
16. கைவினைப் பொருட்கள்	11%	8%
17. 30 அடிச்சரக்கு இனங்கள்	11%	8%
18. தார்ப்பாய்கள்	11%	8%
19. சூட்கேஸ்	11%	10%
20. ஆயில் எஞ்சின் பாகங்கள்	11%	10%
21. மேசை மற்றும் நாற்காலி போன்ற அறைக்கலன்கள்	11%	10%
22. வணிகப் பெயருடன் கூடிய வெண்ணெய், நெய்	11%	10%
23. சரிகை	8%	2%

[1997 ஏப்ரல் 5

(1)		(2)	(3)
24.	செயற்கை நூல் மற்றும் இழை	8%	2%
25.	சுவையூட்டப்பட்ட பால்	8%	4%
26.	கழிவுத் தாள்	8%	4%
27.	கல்வி நிறுவனங்களுக்கு விற்கப்படும் அறிவியல் சாதனங்கள்	8%	4%
28.	தையல் மற்றும் பூத்தையல் இயந்திரங்கள், பாகங்கள் அதன் ஊசிகள்	8%	4%
29.	வணிகப் பெயர் குறிப்பிடப் படாத காலணிகள்	8%	4%
30.	பித்தளை, செம்பு மற்றும் எவர்சில்வர் ஆகியவற்றினாலான வீட்டுப் பாத்திரங்கள்	8%	4%
31.	பின்னலாடைகள்	4%	1%
32.	யூரியா	4%	2%
33.	தேங்காய் மற்றும் கொப்பரை	4%	2%
34.	பருத்தி	4%	2%

விற்பனை வரிச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு வரிவீதங்கள் பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன:

பருத்தி மீதான கொள்முதல் வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. சரிகை மீதான விற்பனை வரி 8-லிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. ஏனைய மாநிலங்களில் உள்ள முகவர்களுக்கு கிளை மாற்றம் வழியிலோ அல்லது ஒப்படைப்பு மாற்றம் வகையிலோ விற்பனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையின் பேரில். மனிதனால் தயாரிக்கப்பட்ட செயற்கை நூல் மற்றும் இழைப் பொருட்களுக்கு விற்பனை வரி 8-லிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

1997 ஏப்ரல் 5]

பின்வரும் மாதாந்திர வீதங்களின் அடிப்படையில் படித்தர முறையில் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளுக்கு விற்பனை வரி விதிக்கப்படும்:

ஆண்டு விற்பனைத் தொகை 3 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 5 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால்	ரூ. 500.00
ஆண்டு விற்பனைத் தொகை 5 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 10 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால்	ரூ. 1,000.00
ஆண்டு விற்பனைத் தொகை 10 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 20 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால்	ரூ. 2,000.00
ஆண்டு விற்பனைத் தொகை 20 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 30 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால்	ரூ. 4,000.00
ஆண்டு விற்பனைத் தொகை 30 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 40 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால்	ரூ. 6,000.00
ஆண்டு விற்பனைத் தொகை 40 இலட்சத்திற்கு மேற்பட்டு ஆனால் 50 இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால்	ரூ. 7,000.00
ஆண்டு விற்பனைத் தொகை 50 இலட்சத்திற்கு மிகையாக இருந்தால்	தற்போதுள்ள 4% தொடர்ந்து செயலில் இருக்கும்

இம்மாற்றங்கள் 6 மாதத்திற்குள் மறு ஆய்வு செய்யப்படும்.

[1997 ஏப்ரல் 5

சோதனைச் சாவடிகள்

9. வணிக வரி சோதனைச் சாவடிகளின் செயல்பாட்டை ஆய்வு செய்யும் பொருட்டு அரசு சோதனைச் சாவடிக் குழு ஒன்றை அமைத்தது. மாநில எல்லைப் பகுதிகளில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகள் நீங்கலாக, மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் அமைந்துள்ள தேவையற்ற சோதனைச் சாவடிகளை நீக்கி அவற்றுக்குப் பதிலாக சுழற்படைகள் அமைக்கப்பட வேண்டுமென சோதனைச் சாவடிக் குழு செய்த பரிந்துரையை விற்பனைவரிச் சீர்திருத்தக்குழு ஆமோதித்துள்ளது. இந்தப் பரிந்துரை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பரிந்துரை படிபபடியாகச் செயற்படுத்தப்படும்.

வணிகவரித் துறை அமைப்பு

10. வணிக வரித் துறை 4 பிரிவுகளாகச் செயல்படுகிறது.

(1) வரி மதிப்பீட்டுப் பிரிவு

(2) மேல்முறையீட்டுப் பிரிவு

(3) செயலாக்கப் பிரிவு

(4) தணிக்கைப் பிரிவு

வரி மதிப்பீட்டுப் பிரிவு

இம்மாநிலம் ஒன்பது வணிகவரிக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வணிகவரிக் கோட்டமும் ஒரு வணிகவரித் துணை ஆணையரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இக்கோட்டம் வணிகவரி மாவட்டங்கள் அல்லது வணிகவரி சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது 40 வணிகவரி மாவட்டங்கள்/சரகங்கள் உள்ளன. ஒவ்வொரு வணிகவரி மாவட்டமும்/சரகமும் ஒரு வணிகவரி உதவி ஆணையரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது.

வணிக வரி மாவட்டம்/சரகம் பல வரிவிதிப்பு வட்டங்களைக் கொண்டது. இம்மாநிலத்தில் 320 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் மத்திய வரி விதிப்பு வட்டங்கள் என அழைக்கப்படும் 6 வரி விதிப்பு வட்டங்கள் (சென்னையில் 4 மற்றும் கோயம்புத்தூரில் 2) வணிகவரி உதவி ஆணையர்கள் தலைமையில் இயங்குகின்றன.

1997 ஏப்ரல் 5]

233 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும், மீதமுள்ள 81 வட்டங்கள் துணை வணிக வரி அலுவலர்கள் தலைமையிலும் இயங்குகின்றன.

மேல்முறையீட்டுப் பிரிவு

விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர்மன்றத் தலைவரின் ஒட்டுமொத்த கண்காணிப்பின்கீழ் 20 மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் பணி முன்னேற்றத்தை மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் ஆய்வு செய்கிறார். நிர்வாகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில், பணி முன்னேற்றம் குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள மத்திய வரிவிதிப்பு வட்டங்களில் உதவி ஆணையர்களின் வரிவிதிப்பு ஆணைகளை எதிர்த்து தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளை மேல்முறையீட்டுத் துணை ஆணையர்கள் விசாரித்து முடிவு செய்கின்றனர். வணிகவரி அதிகாரிகள், துணை வணிகவரி அதிகாரிகள், உதவி வணிகவரி அதிகாரிகள் ஆகியோரின் வரிவிதிப்பு ஆணைகள் மீதான மேல்முறையீடுகளை மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் விசாரித்து முடிவு செய்வார்கள்.

மேல்முறையீட்டு நடுவர் மன்றம்

இம்மாநிலத்தில் விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு அது மேல் முறையீட்டு உதவி ஆணையரின் (வணிக வரிகள்) ஆணைகளின் பேரில் எழும் மேல்முறையீடுகளை விசாரித்துத் தீர்வு வழங்குகிறது. விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் பின்வரும் இடங்களில் செயல்படுகின்றன:

சென்னை (முதன்மை ஆயம்)

சென்னை (கூடுதல் ஆயம்)

கோயம்புத்தூர் (கூடுதல் ஆயம்)

மதுரை (கூடுதல் ஆயம்)

சென்னையிலுள்ள முதன்மை ஆயத்திற்கு மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள அலுவலர் நடுவர் மன்றத் தலைவராக உள்ளார். கூடுதல் ஆயத்திற்கு சார் நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்ற உறுப்பினர் தலைமை தாங்குகிறார்.

[1997 ஏப்ரல் 5

செயலாக்கப் பிரிவு

இந்த மாநிலத்தில், ஏழு செயலாக்கக் கோட்டங்கள் உள்ளன. இந்த ஏழு செயலாக்கக் கோட்டங்களும் வணிகவரிகள் துணை ஆணையர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. சோதனைச் சாவடிகளும் துணை ஆணையர்கள் (செயலாக்கம்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லாத வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய செயலாக்கப் பிரிவில் சுழற்படைகள் உள்ளன.

தற்போது மாநிலத்தில் 61 வணிகவரி சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றுள், 31 சோதனைச் சாவடிகள் மாநில எல்லையோரத்தில் உள்ளன.

சோதனைச் சாவடிகளில், போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்த்து வாகனங்களை விரைவாகச் சோதனை செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஒரு நாளைக்கு 1000 வண்டிகளுக்கு மேல் கடந்து செல்லும் சோதனைச் சாவடிகள் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகளாக அமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 61 சோதனைச் சாவடிகளில் 23 பெரிய சோதனைச் சாவடிகள் ஆகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஓசூர், கந்தேகவுண்டன் சாவடி, ராணிப்பேட்டை, புழல், தோப்பூர் மற்றும் கணியூர் ஆகியவை இருவழிச் சோதனைச் சாவடிகள் ஆகும்.

நிலம் கிடைப்பதைப் பொறுத்து, சோதனைச் சாவடிகளை மேலும் சீரமைப்பது, நவீன ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் ஏற்படுத்துதல் ஆகியன அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன.

தணிக்கைப் பிரிவு

துறைத் தணிக்கைப் பிரிவு, வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் ஆகியவற்றில் காணப்படும் குறைகளைக் கண்டுபிடிக்கிறது. இதன் மூலம் மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கைக்கு முன்னதாகவே அவற்றைச் சரிப்படுத்த முடிகிறது. மாநிலத்தில் தற்போது 42 துறைத் தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை, சம்பந்தப்பட்ட துணை ஆணையர்கள் வகுக்கும் செயல் திட்டங்களின் அடிப்படையில் செயல்படுகின்றன. துறைத் தலைமை அலுவலகத்தில் துறைத் தணிக்கைப் பணி மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளைக் களையும் பணி ஆகியவை சிறப்பு ஆணையர்

1997 ஏப்ரல் 5]

மற்றும் வணிக வரி ஆணையரின்கீழ் ஒரு இணை ஆணையரைக் கொண்ட தனிக்குழுவினால் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலாண்டிலும், அதற்கு முந்தைய காலாண்டில் செய்யப்பட்ட வரிவிதிப்பு மற்றும் வசூல் பணிகள் துறைத் தணிக்கைக் குழுவால் தணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. துறைத் தணிக்கைக் குழுவின் அறிக்கை தொடர்பான குறை நீக்கு நடவடிக்கை, குறைகள் முற்றிலுமாக நீக்கப்படும் வரையில், மாவட்ட உதவி ஆணையர்களால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கை குழு மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவரால் எழுப்பப்படும் முக்கிய தணிக்கைக் குறிப்புகள் ஆகியவை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள தணிக்கைப் பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், நீதி மன்றங்களின் அண்மைக்கால தீர்ப்புகள் அவை குறித்த விளக்கங்கள் ஆகியவை சுற்றறிக்கைகளாகவும், செய்தித் தொகுப்புகளாகவும் வணிகவரி ஆணையரால் தணிக்கைக் குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் அமைத்தல்

11. தேங்கியுள்ள வரி விதிப்பு வழக்குகளில் விரைவாக தீர்ப்பு வழங்கவும், அதனால் அரசுக்குச் சேர வேண்டிய ஏராளமான வரித் தொகைகளை வசூல் செய்யவும் 'வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்' ஒன்றை அரசு ஏற்படுத்தி இது 1-1-1996-ஆம் நாளிலிருந்து இயங்கி வருகின்றது. இதுவரையில் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை இனிமேல் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். தொடக்கத்தில் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம், தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனைவரிச் சட்டம், மற்றும் தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் வரும் வணிகவரி வழக்குகளை மட்டும் இந்தச் சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும்.

கட்டிடங்கள்

12. வணிக வரித் துறை அலுவலகங்கள் அனைத்தும் படிப்படியாக அரசுக் கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். தற்போது அனைத்து துணை ஆணையர்

அலுவலகங்களும் (சென்னை மேல்முறையீட்டு துணை ஆணையர் அலுவலகம் நீங்கலாக) அரசின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. இதுபோன்றே 6 உதவி ஆணையர் அலுவலகங்கள் தவிர ஏனைய உதவி ஆணையர்களின் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 13 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 7 மேல்முறையீட்டு உதவி ஆணையர் மற்றும் மேல்முறையீட்டு துணை ஆணையர் அலுவலகங்கள் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மற்ற 370 அலுவலகங்களில் 136 அரசுக் கட்டிடங்களிலும் 234 தனியார் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி படிப்படியாக அரசுக் கட்டிடங்கள் கட்டப்படும்.

61 சோதனைச் சாவடிகளில், 14 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசுக் கட்டிடங்களிலும் மற்ற சோதனைச் சாவடிகள் தனியார் கட்டிடங்களிலோ அல்லது கீற்றுக் கொட்டகைகளிலோ செயல்பட்டு வருகின்றன.

வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம், சென்னை

13. வணிகவரித் துறை அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் சென்னையில் நிறுவப்பட்டது. 1982-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிகவரித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் பிரிவிற்கு வணிகவரி துணை ஆணையர் ஒருவர் தலைவராகவுள்ளார். இவருக்கு வணிகவரி உதவி ஆணையர் இருவரும், வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி நிலையம், உதவி வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர், வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு "நினைவுகூர் பயிற்சி" வகுப்புகளை நடத்துகிறது. பல்வேறு துறையிலிருந்து திறமைமிக்க அலுவலர்களைக் கொண்டு சிறப்பு விரிவுரை வழங்கப்படுகிறது. 1996-97-ஆம் ஆண்டில் ஜனவரி 1997 முடிய 39 வணிகவரி அலுவலர்களுக்கும் 83 துணை வணிகவரி அலுவலர்களுக்கும் 60 உதவி வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

கணிப்பொறிமயமாக்குவதற்கான, பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்புகின்றனரா என்பதை உறுதிசெய்ய அவர்களுக்கு கணிப்பொறி பற்றிய தெளிவும் அனுபவமும் தேவை. என்வே உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக்கீழ் பதவியிலும் உள்ள அலுவலர்களுக்கு கணிப்பொறி அடிப்படைப் பயிற்சி வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திலேயே அளிக்கப்பட்டு வருகிறது.

கணிப்பொறி மையம்

14. வணிகவரித் துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும் நிருவாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள கணிப்பொறி மையம் நிறுவப்பட்டுள்ளது. 1996-97-ல் பின்வரும் பணிகள் செய்து முடிக்கப்பட்டன:

1995-96-ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் 1959-ன் கீழ் பண்டவாரியான விற்றுமுதல் தொகை மற்றும் வருவாய் ஆகிய தகவல்கள் வணிகரிடமிருந்து பெறப்படும் மாதாந்திர 'அ1' அறிக்கையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டு, வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. அதன் பின்னர், டிசம்பர் 1996 வரை வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. இத்தகவல் வரி விதிப்பு நடவடிக்கையில் மிகவும் பயன்படுகின்றது.

இது தவிர, டிசம்பர் 1995, மார்ச் 1996, ஜூன் 1996, செப்டம்பர் 1996 மற்றும் டிசம்பர் 1996 உடன் முடிந்த காலாண்டுகளுக்கு வணிகவரி சோதனைச் சாவடிகளிலிருந்து பெறப்பட்ட "தெரிந்தெடுக்கப்பட்ட பொருள்கள்" விவரங்கள் தொகுக்கப்பட்டன. இத்தகவல்கள் வரி ஏய்ப்பைத் தடுக்க செயலாக்கப் பிரிவினரால் பயன்படுத்தப்படுகின்றன. வணிகர் விவரப் பட்டியல் 1-4-1996 அன்றைய நிலைவரை தயாரிக்கப்பட்டுள்ளது.

1987-ஆம் ஆண்டில் வணிகவரித் துறையில் நிறுவப்பட்ட கணினி தகவல் பதிவு இயந்திரங்கள் பழையனவாகி விட்டதால், சில சாதனங்களைத் தரம் உயர்த்துதலும், மாற்றியமைத்தலும் மேற்கொள்ளப்பட்டன. வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, அரசுச் செயலர் அலுவலகத்திலும், அரசு கூடுதல் வழக்கு நடத்துநர் (வணிகவரி) அலுவலகத்திலும் கணினிப் பொறிகள்

நிறுவப்பட்டுள்ளன. சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை (மத்திய) கோட்டம் ஆகிய துணை ஆணையர்கள் பயன்படுத்துவதற்காக, சென்னை-6, கிரீம்ஸ் சாலை, வணிகவரி கணினி மையத்திலும் கணினி அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

வணிகவரித் துறை முழுவதிலுமாகப் படிப்படியாக கணினிமயமாக்கக் கருதப்பட்டுள்ளது. அடிமட்டத்திலிருந்து வரிவிதிப்பு வட்டாரங்கள் மற்றும் முக்கிய சோதனைச் சாவடிகள் கணினி மயமாக்குவதற்கு முழு கவனம் செலுத்தப்படும். திருச்சி, மதுரை, கணினி மையங்களின் திறனை மேம்படுத்துவது பற்றியும் அரசு பரிசீலித்து வருகிறது. இதற்காக ரூ. 3 கோடி நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வணிகர் நல வாரியம்

15. வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகவரி மற்றும் அறநிலையத் துறையின் 11-5-89-ஆம் நாளிட்ட 332-ஆம் அரசாணையில் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராகவுள்ளார். வணிகவரித் துறை அமைச்சர் இவ்வாரியத்தின் இணைத் தலைவர் ஆவார்.

இவ்வாரியத்தில் அரசு அலுவலர்களும், அரசு அலுவலர் அல்லாதவர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். 1996-97 வரை இவ்வாரியம், 23,237 ஆயுள் உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது. இவ்வாரியம் தற்போது வணிகர்களுக்கு அளிக்கும் உதவிகள் பின்வருமாறு:

(அ) இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆகியவைகளுக்கு மருத்துவச் சான்றின் பேரில் ரூ.25,000.

(ஆ) வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்குக் குடும்ப நல நிதி ரூ. 50,000.

(இ) நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க--

பாலிடெக்னிக். கலைக்கல்லூரி அல்லது அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ரூ. 2000 (ஒரு ஆண்டிற்கு).

முதுநிலை படிப்பு அல்லது தொழிற் கல்வி அல்லது அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ரூ. 2000 (ஒரு ஆண்டிற்கு)

(ஈ) உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தில் உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும்.

(உ) 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்புகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்கு கீழ்க்கண்ட தொகை பரிசாக வழங்கப்படும்:

முதல் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள்	ரூ. 5,000
இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள்	ரூ. 3,000
மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள்	ரூ. 2,000

(ஊ) விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் உறுப்பினர்களின் மகன்/மகளுக்கு கீழ்க்கண்ட தொகை பரிசாக வழங்கப்படும்:

சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 25,000
அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 10,000
மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு	ரூ. 5,000

குடும்ப நிதி உதவி

17 வணிகர்களுக்கு ரூ. 4,60,000 வழங்கப்படவுள்ளது.

மருத்துவ உதவி

சிறுநீரக அறுவை சிகிச்சை செய்து கொண்ட அருப்புக் கோட்டையைச் சேர்ந்த ஒரு வணிகருக்கு ரூ. 25,000 வழங்கப்பட உள்ளது.

கல்விக்கான நிதி உதவி

10 வணிகர்களுடைய குழந்தைகளுக்கு ரூ. 20,000 வழங்கப்பட உள்ளது.

மொத்த உதவித் தொகை ரூ. 5,05,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

குறை தீர்க்கும் பிரிவு

16. வணிகர்கள் தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய ஓர் அமைப்பாகத் திகழ சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் 1984-ஆம் ஆண்டில் குறை தீர்க்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு இணை ஆணையரைத் (நிருவாகம்) தலைவராகவும், இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) மற்றும் உதவி ஆணையர் (வணிகவரி-2) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

விற்பனை வரி ஆலோசனைக் குழு

17. விற்பனை வரி நிருவாகம் குறித்த வணிகர்களின் கருத்தை அறிய உதவும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அரசு மாவட்ட அளவில் வணிக வரி ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர். இக்குழுக்களில் அலுவலர்கள் மற்றும் வாணிபக் கழகங்கள், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவு மற்றும் வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். விற்பனை வரிச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான

பிரச்சினைகளை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும், வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இக்குழுக்களின் தீர்மானங்களும், அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல்

18. உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் தொகையில் 90 சதவீதத் தொகையை தற்போது உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கக் கருதப்பட்டுள்ளது.

காலம் தள்ளி வரிசெலுத்தும் சலுகை உட்பட தொழிலகங்களுக்கான விற்பனை வரிச் சலுகைகள்

19. இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்கள் செலுத்த வேண்டிய வரித் தொகையைத் தள்ளி விட அரசு அனுமதிக்கிறது. அத்துடன் புதிய தொழில்கள், தொழிலக விரிவாக்கங்கள், நலிந்து போன தொழிலகங்கள் மற்றும் நலிந்த துணி ஆலைகள் ஆகியவை செலுத்த வேண்டிய வரிகளை காலம் தள்ளி வட்டியின்றிச் செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கி வருகிறது. 1996-97-ம் ஆண்டில் 30-6-1996-ஆம் நாள் முடிய இவ்வகையில் ரூபாய் 4,011.94 இலட்சம் வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகை தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.


வணிக வரித் துறையின் ஆட்சிப் பகுதிக் கோட்டங்கள்
துணை ஆணையர் ஆட்சிப் பகுதிக் கோட்டங்கள்
வணிகவரி மாவட்ட மண்டலங்கள்/ உதவி ஆணையர்/ மைய வரிவிதிப்பு வட்டங்கள்
சென்னை (வடக்கு)
சென்னை (மத்திய)
சென்னை (தெற்கு)
திருச்சி
வேலூர்
கோயம்புத்தூர்
சேலம்
மதுரை
திருநெல்வேலி
மண்டலம்
மைய வரிவிதிப்பு வட்டம்
செங்கை-எம்.ஜி.ஆர்.
கரூர்
தஞ்சாவூர்
புதுக்கோட்டை
வேலூர்
திருவண்ணாமலை
கடலூர்
விழுப்புரம்
கோயம்புத்தூர் மண்டலம்
பொள்ளாச்சி
திருப்பூர்
நீலகிரி
சேலம்
நாமக்கல்
தர்மபுரி
மதுரை
திண்டுக்கல்
திருநெல்வேலி
விருதுநகர்


மாநிலத் தலைமையிட அதிகாரிகளின் படி நிலை
சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர்
இ-ஆ. (நிர்வாகம்)
இ-ஆ. (தணிக்கை)
இ-ஆ. (மக்கள் தொடர்பு)
இ-ஆ. (தன்னிச்சை மறு ஆய்வு)
இ-ஆ. (சிறப்பு பணி அலுவலர்)
இ-ஆ. (மறு ஆய்வு மனு)
து-ஆ. (சட்டம்)
து-ஆ. (சட்ட வரைவுக்குழு)
உ-ஆ. (பொதுப்பணி I)
உ-ஆ. (பொதுப்பணி II)
உ-ஆ. (சட்டம் I)
உ-ஆ. (சட்டம் 2)
வ-அ. (சட்ட வரைவுக்குழு)
நிர்வாக அலுவலர்

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.